# உருவும் திருவும்

சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# உருவும் திருவும்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்—தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

முதற் பதிப்பு : 1965
ஐந்தாம் பதிப்பு : ஆகஸ்டு, 1979.
ஆறும் பதிப்பு : ஜூலை, 1981
நறுமலர்ப் பதிப்பக வெளியீடு
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 6-00

பிற நூல்கள் :

தமிழ் இலக்கிய வரலாறு
கட்டுரை வளம்
மனோன்மணீயம்
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
THE STATUS OF WOMEN IN TAMIL NADU DURING THE SANGAM AGE

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# முன்னுரை

தமிழ் இலக்கியம் வரலாற்றுத் தொன்மையும் சிறப்பும் மிக்கது; ஏறத்தாழ இருபது இருபத்தைந்து நூற்றாண்டுகளாக இடையீடின்றித் தொடர்ச்சியாகச் சிறக்க வளர்ந்து வளம்பெற்று நிற்பது. இவ்வாறு செம்மையும் சிறப்பும் இனிமையும் நீர்மையும் கொண்டிலங்கும் தமிழ் அன்னைக்கு அவ்வப்போது தோன்றிய புலவர் பெருமக்கள் சிறந்த இலக்கியச் செல்வங்களைப் படைத்துப் படையலிட்டு மகிழ்ந்தனர். இத்தகு இலக்கியச் செல்வங்கள் நம் நெஞ்சை அள்ளும் நீர்மையனவாகும். இலக்கியப் பூங்காவில் 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' யாக நின்று யான் பெற்ற இலக்கிய இன்பம் இந் நூலின் பன்னிரு கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன. முதற்கண் உள்ள 'உருவும் திருவும்' என்ற கட்டுரையின் பெயரே இந் நூலிற்கும் பெயராய் அமைகின்றது. உரு, திரு, இவற்றின் உயர்வு, தமிழின் தெய்வத்தன்மை, தமிழ் மக்களின் அற வாழ்க்கை, குறள் கூறும் வாழ்வு, கண்ணகி கற்பு, விதியின் பேராற்றல், சேக்கிழார் கம்பர் முதலிய பெரும் புலவர்களின் கவிதைச் சிறப்பு, பௌத்த சமய உண்மைகள், பாரதியின் குழந்தை உள்ளம், பாரதியாரின் வாழ்வு முதலியவற்றினை ஓரளவு அறிந்துகொள்ளுதற்கு இந் நூல் துணைபுரியும் என்பது என் உள்ளக்கிடக்கை. இந்நூலினைத் தமிழ் கூறு நல்லுலகம் இனிது வரவேற்று என் முயற்சிக்குத் தொடர்ந்து ஊக்கம் ஊட்டும் என்று நம்புகின்றேன்.

சி. பா.

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | உருவும் திருவும் | ... | 5 |
| 2. | தெய்வத் தமிழ் | ... | 14 |
| 3. | புறம் கூறும் அறம் | ... | 25 |
| 4. | வள்ளுவர் வழங்கிய வான்மறை | ... | 35 |
| 5. | மென்மையும் வன்மையும் | ... | 45 |
| 6. | மறக்குடி மங்கையர் | ... | 61 |
| 7. | விதியின் விளையாட்டு | ... | 69 |
| 8. | சேக்கிழார் தந்த செல்வம் | ... | 81 |
| 9. | கம்பன் கட்டிய கலைக்கோயில் | ... | 92 |
| 10. | தமிழ் இலக்கியத்தில் பௌத்த சமயக் கருத்துக்கள் | ... | 102 |
| 11. | பாரதியின் பாப்பாப் பாட்டு | ... | 113 |
| 12. | பாரதியார் வாழ்க்கை | ... | 118 |

# 1. உருவும் திருவும்

"புதுமையை விரும்புவதிலும் வெளிமயக்கில் வீழ்ந்து விட்டிலைப் போல அழிவதிலும் •இந்தியருக்கு இணையாக எவரையுமே கூறமுடியாது" என்றார் ஆன்ற சான்றோராம் இராமகிருட்டினர். அவரவர்தம் உருவும் திருவுமே இன்று தனி மனிதன் சமுதாயத்தில் மதிக்கப்படுவதற்குப் பெரிதும் காரணமாக அமைகின்றன. உருவுடன் திருவும் சேர்ந்தவர்கள் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். உருவின்றித் திரு இருந்தாலும் உயர்வு உண்டு. உரு மட்டும் இருந்து, திரு இன்றேல் உயர்வு அவ்வளவாகச் சொல்ல முடியாது. சிலரைக் 'கருவிலே திருவுடையார்' என்று நாம் கூறுவதுண்டு. கரிகாலன் 'உருகெழு தாயம் ஊழின் எய்தி' என்று பட்டினப் பாலையிலே கூறப்படுகின்றான். உருவும் திருவும் பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்கும் சொற்களாகும். அதாவது, பல பொருள் குறித்த ஒரு சொல்லாகும். முதற்கண் 'உரு' என்னும் சொல்லினைக் காண்போம்.

'உரு' என்பதற்குப் பல பொருள்கள் இருப்பினும் அழகு, வடிவு, தோற்றம், நிறம் என்னும் பொருள்களில் அச் சொல் பயின்று வருகின்றது. 'சிறு துரும்பும் பல்குத்த உதவும்' என்ற பழமொழி நாமனைவரும் அறிந்த ஒன்று. உருவிற் சிறியதும் ஒருகாலத்தில் உற்றுழி உதவும் என்பதே இதன் பொருள்.

மேலும், 'மூர்த்தி சிறிது எனினும் கீர்த்தி பெரிது' என்ற சொல் நாட்டில் வழங்கி வருகின்றது. இதற்குச் சான்றாகக்

கரிகால் வளவன் என்னும் பழந்தமிழ்ச் சோழ மன்னனின் இளமை வாழ்விலே நிகழ்ந்த செய்தியினைக் குறிப்பிடுவர். அரசனின் அவைக்கு முதியவர் இருவர் வழக்கு ஒன்றினைக் கொணர்ந்தனர். ஆனால், அரசன் இளையவனாய் இருத்தலைக் கண்டு, இவன் நம்முடைய வழக்கினை முறையாக விசாரித்து நல்ல நீதி வழங்கும் ஆற்றல் உடையவனோ எனவும் ஐயுற்றனர். இக் கருத்தினைக் குறிப்பால் உணர்ந்தான் மன்னன். ஒருவர் தம் கருத்தைச் சொல்லாமலே அவருடைய முகத்தை நோக்கி அவர் கருதிய குறிப்பை அறிகின்றவன் எப்போதும் உலகத்திற்கு ஓர் அணிகலன் ஆவன் என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

—திருக்குறள்: 701.

எனவே அரசன் அவையினின்றும் நீங்கி, நரை திரை முடித்து முதியவனாக வேடம் பூண்டுவந்து அவர்கள் வழக்கைத் தீர விசாரித்து அவர்கள் மனங்கொளும் வண்ணம் தீர்ப்பு வழங்கினான் என்ற செய்தியினைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி என்னும் நூல்கொண்டு அறியலாம்:

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

—பழமொழி நானூறு: 6.

இது குறித்தே,

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

என்று தெய்வப் புலவராம் திருவள்ளுவர் கூறிப் போந்தார். இங்கு 'உரு' என்பது வடிவம், தோற்றம் என்ற பொருளில் வழங்குகின்றது. வடிவாற் குறுகியவரை—தோற்றப் பொலிவு இல்லாதவரை—எளிதிலே வென்றுவிடலாம் என்று எண்ணுவது அறியாமையாகும். இது குறித்தே, 'கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே' என்று பாமரரும் கூறுவர். அதற்கு எடுத்துக்காட்டாக, குறுகிய வடிவுகொண்டு வந்து, மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு இரந்து பெற்று மூவுலகத்தையும் அளந்த திருமாலின் கதை கூறப்படு கிறது. இதனை நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள்,

'மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி' என்று கூறுகின்றார். சங்கத் தமிழ்ப் புலவராம் மதுரைப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்,

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்

என்று தாம் பாடிய முல்லைப்பாட்டில் குறிப்பிடுகின்றார்.

அடுத்து, பிறப்பு இறப்பு இல்லாத, ஆதியும் அந்தமும் இல்லாத, உருவமின்றி அருவமாய்ப் பெயரற்று எங்கும் நீக்க மற நிறைந்திருக்கின்ற இறைவனை, வேண்டுவார் வேண்டிய வண்ணத்திலும் வடிவிலும் காண்கின்றனர். இதனையே மணிவாசகப் பெருமான், "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்று பாடினார். யார் யார் எவ்வெவ் வடிவில் காண்கின்றார்களோ அவ்வவ் வடிவில் இறைவன் காட்சியளிக்கின்றான்.

வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே.

என்று நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் நமக்கு விளக்கம் தந்திருக்கிறார்.

உளன் எனில் உளன், அவன் உருவம் இவ்உருவுகள்
உளன் அலன் எனில், அவன் அருவம் இவ்அருவுகள்
உளன் என, இலன் என, இவை குணம் உடைமையின்
உளன் இரு தகைமை யொடு, ஒழிவு இலன் பரந்தே

என்பது திருவாய் மொழி (2907).

உருவமில்லாத மன்மதன் காதல் நெஞ்சில் புகுத்தும் துன்பங்கள் மிகுதி. இன்னும் அவனுக்கு உருவமிருப்பின் என்னென்ன செய்வனோ?

பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவி லாளன் ஒறுக்குந் துன்பமும்
புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை உரவோர்க் கில்லை

என்று சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் உருவிலாத மன்மதன் உயிர்களை வாட்டும் துன்பத்தினை அடுக்கிக் கூறுகின்றார்.

உரு என்பது வடிவம், தோற்றம் (Presence) என்ற பொருள்களிலும் செந்தமிழ்க் கவிஞர் சிலரால் சிறந்த இடங்களில் கையாளப் பெற்றுள்ளது. கைகேயி பெற்ற வரத்தால் காடேகுகின்றான் காகுத்தன். அதுபொழுது மன்னுயிர்கள் அன்றித் தாய்க் கருவிலிருக்கும் உருவறியாப் பிள்ளைகளும் அழுதன என்று ஓர் அவல ஓவியத்தினையே தீட்டிக் காட்டுகிறார் கம்பநாடர்.

கிள்ளையொடு பூவை அழுத; கிளர்மாடத்து
உள்ளுறையும் பூசை அழுத; உரு அறியாப்
பிள்ளை அழுத; பெரியோரை என்சொல்ல?
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்.

பின்னர், சுந்தரகாண்டத்தில், அனுமன் அசோகவனத்தில் சிறையிருந்த செல்வியாம் சீதையிடம் தன் வருகையினை உணர்த்தும் படலத்தை உருக்காட்டுப் படலம் என்று அழைத் திருக்கின்றார்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வெளிமான் என்னும் மன்னனிடம் பரிசில் பெறச் சென்றார். நோயுற்ற நிலையில் இருந்த வெளிமான் தன் தம்பியைப் பரிசில் கொடு என, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது போய், குமணனைப் பாடி, குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று, வெளி மான் ஊர்க் காவல்மரத்தில் கட்டிச் சென்று சொல்லிய புறப் பாடல் வருமாறு:

இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண் இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண் இனி; நின் ஊர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம்பரிசில்,
கடுமான் தோன்றல்! செல்வல் யானே.

—புறம் : 162

இப் பாடலால், காணாது தந்த பரிசிலை—வள்ளல் நேராகவே வந்து தராத பரிசிலைக் கொள்ளாது—உருவில்லாததால் திருவை வேண்டா என்று உதறிய புலவர் பெருஞ்சித்திர னாரின் பெருமித நெஞ்சத்தினை நாம் காண்கின்றோம்.

இப்பொழுது அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் கள், அரசாங்க அலுவல்களில் அமர்த்தப்பெறும் மாணவர்கள் எக்கருத்துக்கொண்டு, எந்த மதிப்பீடு கொண்டு 'உருத்தேர்வு' (Personality Test) வெற்றி பெற்றவர்களாகக் கருதப் பெறுகின்றனர் என்று கேட்டார்கள். அந்த அளவிற்கு உருத்

தேர்வு முறை இன்று அரசாங்க அலுவல்களுக்கும் உறுதுணை யாக வைக்கப் பெற்றிருக்கின்றது.

பழங்காலத்தில் திருமணம் செய்துகொள்ளும் தலைமகன் தலைமகளுக்கிடையில் சில ஒற்றுமைகள் இருத்தல் வேண்டும் என்று எண்ணினார்கள். இதனைப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியலில் (நூற்பா, 25) தொல்காப்பியனார் குறிப்பிடு கின்றார்:

**பிறப்பே குடிமை ஆண்மை யாண்டொடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே யருளே யுணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.**

'ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும், ஒத்த பிராயமும், ஒத்த உருவும், ஒத்த அன்பும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமுமெனப் பத்து வகைய தலைமகளொப்பினது பகுதி' என்று பேராசிரியர் கூறுகின்றார். மேலும் தொல்காப்பியனார் உவமங்கள் நான்கு பொருள்களின் நிலைக்களனாகப் பிறக்கும் என்கிறார்.

**வினை பயன் மெய்யுரு வென்ற நான்கே**
**வகை பெற வந்த வுவமத் தோற்றம்**

என்பது அவர்தம் கருத்தாகும்.

அடுத்து, 'திரு' என்னும் சொல்லினைச் சிறிது ஆய்ந்து காண்போம். 'திரு' என்ற சொல்லும் 'உரு' என்ற சொல் போன்றே பல பொருள்களைப் பயக்குமெனினும், சிறந்த சில பொருள்களையே ஈண்டு எடுத்துக் கொள்ளுவோம். முதற்கண் 'திரு' என்பது 'அழகு' என்னும் பொருண்மைத்து. இலக்குமி, செல்வம், பொலிவு முதலியன பின்னர்ச் சிறக்கும் பொருள் களாம்.

செல்வத்திற்கும் தெய்வமாக விளங்கும் இலக்குமியை நாம் திருமகள் என்கிறோம்.

திருவள்ளுவர் கூட,

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதல் வேறு

என்கிறார். கடிய நெடுவேட்டுவன் என்ற குறுநில மன்னன் பரிசில்தரக் காலந் தாழ்த்தானாகப் பெருந்தலைச் சாத்தனார்,

முற்றிய திருவின் மூவரே யாயினும்
பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே.

என்று பாடியுள்ளார். மேலும், பெருஞ்சித்திரனார் என்ற புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசில் பெறச் சென்றபோது, வெளிமான், பெருந்தலைச் சாத்தனாரிடம் நடந்துகொண்டதைப் போலவே, அவனும் பெருஞ்சித்திரனாரைக் காணாது, 'இதுகொண்டு செல்க!' என்று பரிசில் கொடுப்பக் கொள்ளாது பின்வருமாறு பாடினார்:

குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென், பரிசில் கொண்டனென் செலற்கென
நின்றவென் நயந்தருளி ஈது கொண்டு
ஈங்கனம் செல்க தான்என என்னை
யாங்கறிந் தனனோ, தாங்கருங் காவலன்?
காணாது ஈத்தஇப் பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லன்; பேணி
தினையனைத்து ஆயினும் இனிதவர்
துணையளவு யறிந்து நல்கினர் விடினே.

—புறம் : 208.

உருவினைக் காணாது ஈத்த திருவினை மறுத்தார் புலவர். திருவின் உரு—அளவு முக்கியமன்று. திரு தரும் மன்னனின்

திருத்தோற்றம் (Presence)தான் முக்கியம் என்று உணர்ந்த செம்மாந்த நெஞ்சத்தை நாம் கண்டு வியக்கின்றோம்.

உருவறியாத—ஒருவரையொருவர் நேரிற் கண்டறியாத—கோப்பெருஞ்சோழனும், பிசிராந்தையாரும் நட்புக் கொண்டனர்.

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்**

என்ற குறட் கருத்துக்கு இலக்கியமாயினர். இறுதியில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கத் துணிந்தபோதுதான் பார்த்தறியாத, உருவறியாத பிசிராந்தையார், தான் திருப் பெற்றிருந்த காலையில் வராவிடினும் திருத்துறந்து தவம் நினைந்து செல்லும் காலையில் உறுதியாக வருவார் என்று எண்ணினன்.

**செல்வக் காலை நிற்பினும்**
**அல்லற் காலை நில்லலன் மன்னே**

என்று உருவறியாத நிலையிலும் உறுதியாக எண்ணிய உயர்ந்த நட்புள்ளத்தை எண்ண எண்ண வியப்பு மேலிடுகின்றது.

தமிழ்நாட்டின் பல ஊர்ப் பெயர்களும் 'திரு'வில் தொடங்குவது கண்டு நாம் உள்ளம் மகிழலாம். 'திருவாளர்' என்ற பழகுதமிழ் அழகுச்சொல் திரும்ப வந்தது கண்டு அகநிறைவு கொள்ளலாம்.

இறுதியாகப் 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவரான' சேக்கிழார் பெருமான் தம் திருத்தொண்டர் புராணத்தில் திரு, உரு என்ற இரண்டு சொற்களையும் ஒருசேர 'ஞானத்தோடு' சேர்த்துத் தக்க இடத்தில் வழங்கிச் சிறப்பும் பெறுகின்றார். 'சிவம் பெருக்கும்' திருஞான

சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளியுள்ளார். கூன்பாண்டியன் மனைவியாம் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறை யாரும் விரைந்து சென்று திருமடத்தில் காழிப் பிள்ளையாரைக் காணுகின்றனர். அயல்வழக்கையெல்லாம் தமிழ் வழக்காக ஆக்கிய திருஞான சம்பந்தர்தம் திருக்கோலத்தினைப் பாமணக்கப் பாடும் பாவலர் சேக்கிழார்தம் வாக்கால் கண்டு மகிழலாம்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

—திருஞான சம்பந்தர் புராணம்: 728.

உருவும் திருவும் ஒளிர்க! வாழ்க!

# 2. தெய்வத் தமிழ்

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி வரலாற்றுத் தொன்மையும் சிறப்பும் மிக்கது. என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினள் தமிழ்த்தாய். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி' என்று தமிழினத்தின் பழமையினைப் பாராட்டிப் பேசினார் பைந்தமிழ்ப் புலவர் ஒருவர். முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்க் 'கன்னித் தமிழ்' என்று கவினுற அழைக்கப்படும் மொழி தமிழ். உலக மொழிகளின் வரலாற்றினை உற்று நோக்கும்பொழுது தமிழின் தொன்மையும் சிறப்பும் நன்கு புலப்படும்.

எண்ணற்ற மொழிகள் இந் நிலவுலகில் பேசப்படுகின்றன. அவற்றில் எழுத்துவழக்குடையனவாய் வாழும் மொழிகள் சிலவே. அவற்றுள்ளும் நல்ல இலக்கியச் செம்மையும் சிறப்பும் பெற்ற மொழிகள் மிகச் சிலவே. உலகின் உயர்தனிச் செம்மொழிகளாகக் குறிப்பிடப்படும் மொழிகள் மிகமிகச் சிலவே. கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் (Hebrew), சீனம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளே அத்தகைய சிறப்பிற்குரிய மொழிகளாகும். ஆனால், அம் மொழிகள் அனைத்தும் காலப்போக்கில் சிற்சில மாற்றங்கள் பெற்றன. கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய மொழிகள் இன்று பெருவாழ்வு பெறவில்லை. பழைய சீன மொழி இன்று பெரும் மாறுதலைப் பெற்றுவிட்டது. வட மொழி பேச்சு வழக்கில் அருகி, இலக்கியத் தொன்மொழி

யாக ஏட்டளவில் நின்றுவிட்டது. தமிழ்மொழியோவெனில் இன்றும் பழைய இலக்கியச் செல்வங்களோடு வளமுற வாழ்கின்றது. தமிழ் நாட்டில் மூன்றரைக் கோடி மக்களால் இன்றும் பேசப்பட்டு வருகின்றது. கடல் கடந்த நாடுகளிலும் கன்னித் தமிழ் கணக்கற்ற தமிழர்களால் பேசப்பட்டு வருகின்றது. எனவே "ஆரியம் போல உலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்றார் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை. இது குறித்தே கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாடர் தம் அழியாப் புகழ்பெற்ற இராமாயணத்தில் 'என்றுமுள தென்றமிழ்' என்று புகழ்ந்து பாராட்டுவாராயினர்.

'தமிழ் தமிழ்' என்று சொன்னால் 'அமிழ்து அமிழ்து' என்று ஒலிக்கக் காணலாம். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'தமிழுக்கு அமுதென்று பேர்; அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று கவிதை முழக்கம் செய்தார். தமிழ் என்னும் சொல் இனிய இயற்றமிழ்ச் சொல் என்பது நம் பண்டைத் தமிழாசிரியர் துணிபு. எனவே, தொல்லாசிரியராம் தொல்காப்பியனார், 'தமிழென் கிளவியும் அதனோ ரற்றே' என்று குறிப்பிட்டார். தமிழ் என்ற சொல்லிற்கு இனிமை என்று பொருளுண்டு. 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' என்று பிங்கல நிகண்டு பொருத்தமுறக் கூறுகின்றது. தமிழ் இலக்கியங்களிலும் இக்கருத்திலேயே தமிழ் என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

தமிழ் வையைத் தண்ணம் புனல்

—பரிபாடல்: 6, 60.

பாலேய் தமிழர்

—சடகோபர் திருவாய்மொழி: 1, 5, 11.

புல்லாணித் தென்னன் தமிழ்

—கலிகன்றியார்-பெரிய திருமடல், கண்ணி: 131.

தமிழ் தழீஇய சாயல்

—சீவக சிந்தாமணி, 2026.

ஊறு மின்றமிழ் இயற்கை இன்பம்

—சீவக சிந்தாமணி, 2063

தமிழெனும் இனிய தீஞ்சொற் றையல்.

தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே.

—கம்பராமாயணம், பம்பைவாவிப் படலம், 29

மேற் குறிப்பிடப் பெற்ற தொடர்கள் தமிழின் இனிமையைப் புலப்படுத்த வல்லன. மேலும் வால்மீகி ராமாயணத்தில் "பேரறிவாளனாகிய அனுமன் தன்னுள்ளே பலவகையாகச் சிந்தித்து விதேக புத்திரிக்கு மதுர வாக்கியத்தைக் கேட்பிக்கத் தொடங்கினான்" (சுந்தர காண்டம், சர்க்கம், 31—1) என வரும் குறிப்பினைக் கொண்டு அம் மதுரமான மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே காவிய நாயகன் இராமனைக் குறிப்பிட வந்த கம்பர், 'தென் சொற் கடந்தான் வட சொற்கு எல்லை தேர்ந்தான்' என்று குறிப்பிட்டுள்ளார். பாட்டுக்கொரு புலவன் பாரதியும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடி மகிழ்ந்தார். மேலும் அவர் பலபடி கடந்து சென்று, "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்" என்று குறிப்பிட்டார். தமிழ்விடு தூது ஆசிரியர், பாரதியாரினும் ஒரு படி மேலே சென்று, "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்றார்.

இவ்வாறு புலவர் பலரால் புகழ்ந்து பாராட்டப் பெற்ற தமிழ்மொழி தெய்வத்தன்மை நிறைந்தது. 'சொல்லும் பொருளுமாய் இருக்கின்ற உமாதேவனை வணங்குகிறேன்' என்றார் வடமொழிப் பெருங் கவிஞராம்

காளிதாசர். இம்மரபினை யொட்டியே, 'ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க்கு உணர்த்திய மாதொரு பாகன்' என்று ஒரு பழம் பாட்டும், 'தழற்பொலி விழிக்கடவுள் தந்த தமிழ்' என்று கம்ப ராமாயணமும், 'இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்' என்று காஞ்சிப் புராணமும் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றன. வடமொழி போன்றே தென்மொழியாம் தமிழும் தெய்வ வடிவமாய்ப் பாராட்டப்படுவதுண்டு.

**ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்.**
**செந்தமிழோடு ஆரியனை.**
**தமிழ்ச் சொல்லும் வடசொல்லுந்தாள் நிழல் சேர.**

என்னும் தேவாரப் பாசுரங்களும், "தென்றமிழ் வட மொழியே" என்னும் திவ்யப் பிரபந்தத் தொடரும் இக் கருத்தினை நன்கு வலியுறுத்துவனவாகும்.

தமிழ்ப் பாடலின் சொல்லழகிலும், சுவையழகிலும் தெய்வங்கள் தம் நெஞ்சைப் பறிகொடுத்துள்ளன. 'தெய்வத் தமிழ்' என்று, தமிழ்மொழி பலவிடங்களில் குறிப்பிடப் பெறுகின்றது.

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" என்று குமரகுருபரர் தமிழின் பெருமையினை வியந்து போற்றுகின்றார்.

திருமழிசை யாழ்வாரின் சீடர் கணிகண்ணன். ஒருகால் திருமழிசை யாழ்வாருக்கும் காஞ்சி நகரப் பல்லவ மன்னனுக்கும் பகைமை ஏற்பட்டது. அதன் விளைவாகக் கணிகண்ணன் அரசனால் நாடுகடத்தப் படுகிறார். அது பொழுது ஆழ்வார் திருவெஃகாவில் திருக்கோயில் முன்பே சென்று,

கணிகண்ணன் போகின்ருன் காமரு பூங்கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்

என்று பாடினர். பாடிய அளவிலே, திருமால் மட்டுமின்றி, அந் நாட்டுத் தெய்வங்கள் அனைத்தும் ஆழ்வாரைப் பின் தொடர, 'நகரேஷு காஞ்சி' என்று வடமொழி நூல்களாலும், 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று திருநாவுக்கரசர் பெருமானுலும்,

ஆடவர்கள் எங்ங னகல்வார் அருள்சுரந்து
பாடகமும் ஊரகமும் பாம்பணையும்—நீடியமால்
நின்ருன் இருந்தான் கிடந்தான் இதுவன்ரே
மன்ருர் பொழிற் கச்சி மாண்பு

என்று ஆழ்வாராலும் பலபடியாகப் பாராட்டப் பெற்ற காஞ்சிமாநகர் இருண்டு பொலிவிழந்தது. அரசனும், தம் தவறுணர்ந்து தன் அமைச்சர்களோடு ஆழ்வாரைப் பின் தொடர்ந்து, 'ஓரிர விருக்கை' என்ற ஊரிலே திருமழிசையாழ்வார், கணிகண்ணன் ஆகிய இருவரையும் கண்டு, காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரினன். ஆழ்வாரும் உள்ளம் நெகிழ்ந்து, தாம் சொன்ன வண்ணமே தமிழ்ப் பாட்டிற்குத் தலைசாய்த்த பெருமாளைப் பார்த்து,

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்

என்ற அளவிலே, திருமால் மீண்டும் பழைய இடத்தில் எழுந்தருளினர் என்பது ஆழ்வார்களின் திவ்ய சரித்திரம் கொண்டு நாம் அறியும் செய்தியாகும்.

இதுபோன்றே சீகாழிப்பதி தோன்றிச் சிவம் பெருக்கும் திருஞானசம்பந்தராய் வீறுடன் விளங்கிய ஞானசம்பந்தப் பெருமானும் தெய்வத் தமிழ்ப் பாடல்கள் பாடிச் சிறப்புற்ருர். சமணர்களோடு மாறுபட்ட சம்பந்தர், வைகை ஆற்றில் இட்ட ஏடு அழியாமல் வந்ததன்ருே? இதனை உள்ளடக்கியே,

யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்
அறிவீன மன்ருேவுன் மதுரைமூதூர்
நீரறியும் நெருப்பறியும்

என்று மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி குறிப்பிடுகின்றது. மேலும்,

வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்காவாக் காரணத்தி னறிகுறியே

என்று மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் பாடினர். திருஞானசம்பந்தர் தெய்வத் தமிழால் மேலும் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

'கற்றவர்கள் தொழுதேத்தும் காழி வேந்தர் திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணுக்கினர். திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை யாக்கினர். திருமறைக் காட்டிலே திருநாவுக்கரசால் திருக்கதவம் திறக்கப் பட்டதும் திருஞானசம்பந்தரால் திருக்காப்பிடப்பட்டதும் தேவாரத் தமிழ் பாட்டால் அல்லவோ! நம்பியாரூரராம் சுந்தரமூர்த்தி நாயனர் முதலை உண்ட பாலனை அழைத்ததும், "பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பாற் தூது சென்ற தென்ஆரூர்த் தியாகர்" என்றபடி பரவைபால் தூது நடந்ததும் தமிழ்ப் பாட்டாலே அல்லவா? எனவே தான், திருவிளையாடற் புராண ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்:

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

இக் கருத்தினையே திருக்குற்றாலத் தலபுராணம்,

வேலையில் வீழ்ந்த கல்லு மென்குடம் புகுத்த வென்பும்
சாலையிற் கொளுவுந்தீயும் தரங்கநீர் வைகை யாறும்
சோலையாண் பனையும் வேதக் கதவமுந் தொழும்பு கொண்ட
வாலையாந் தமிழ்ப்பூஞ் செல்வி

எனக் குறிப்பிடுகின்றது.

மேலும் தமிழின் இனிமையை நுகரவேண்டும் என்பதற்காகவே தெய்வங்கள் இந்தத் தமிழ்மண்ணிலே வந்து அவதாரம் செய்தன என்று மதுரைக் கலம்பகத்தில் (93) குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்:

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
  தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுத லொருநீ
  சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
  கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
  கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்?

இப் பாட்டிலிருந்து, தண்டமிழின் இனிமைச் சுவையை நுகரும் பொருட்டே உமாதேவி தடாதகைப் பிராட்டியாராய்த் திருவவதாரம் செய்தார் என்பதும், கண்ணுதற் பெருங் கடவுளாய்க் கழகமொடு அமர்ந்து விளங்கும் சிவபெருமான் சவுந்திர பாண்டியனாகத் தோன்றினார் என்பதும், குன்றம் எறிந்த குமரவேள்

உக்கிர குமார பாண்டியனாகத் தோற்றம் கொண்டார் என்பதும் தெற்றெனப் புலனாகின்றதல்லவா? மேலும் 'ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்' வடலூர் இராமலிங்க வள்ளலார் மனத்தே இனிக்கும் திருவாசகம் தந்த மணி வாசகப் பெருமான்,

**சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்து மென்சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் தீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனையோ? வன்றி யேழிசைச் சூழல்புக்கோ**

எனத் தம் திருச்சிற்றம்பலக் கோவையாரில் இறைவனின் தண்டாத தமிழ்ச்சுவை பருகும் ஆர்வத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இறைவனே பாணபத்திரன் பொருட்டுச் சேரமான் பெருமாள் நாயனாருக்குத் தமிழில் திருமுருகப்பாசுரம் எழுதியதுண்டு. 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' எனத் தொடங்கும் பாடலை ஏழைத் தருமியின் பொருட்டு எழுதிய அக்கவிக்குக் குற்றம் கூறினார் நக்கீரர். "ஒரு பிழைக்கா அரனார் முன் உரையிழந்து விழிப்பாரேல் அரியதுனது இலக்கணமென்று அறைவதும் அற்புதமாமே" என்று பாடிற்று மனோன்மணீயம்.

'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என மகாவித்துவன் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் பாராட்டப்பெற்ற தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான், "ஞால மளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்றார். கம்பநாடரோவெனில் "நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்" என்று தமிழ் உலகையே அளந்து காட்டுவதற்குக் கருவியாக உள்ளது என்று பாடியுள்ளார். மேலும் இராமாயணத்தில் சுக்ரீவன் வானரப் படைகளுக்கு இலங்கைக்குச் செல்லும் வழியைக் குறிப்பிடும்பொழுது, வழியில் அகத்திய முனிவர் பொதியமலையின் தமிழ்ச் சங்கம் வைத்திருப்பதாகவும், அங்கே சென்று வானரங்கள் தமிழ்ச் சுவையில் ஈடுபட்டு அங்கேயே தங்கிவிடாமல், அம்மலையை

வலம் வந்து வணங்கிவிட்டு, மேலே பயணம் செல்ல வேண்டும் என்றும் சுக்ரீவன் கூறுவதாகத் தமிழின் இனிமையினைப் பாங்குறப் புலப்படுத்தியுள்ளார். அப்பாடல் வருமாறு:

தென்தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன்
 தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றுமவன் உறைவிடமாம் ஆதலினுல்
 அம்மலையை இறைஞ்சி ஏகிப்
பொன்திணிந்த புனல்பெருகும் பொருநையெனும்
 திருநதி பின்பு ஒழியக்
கன்றுவளர் தடஞ்சாரல் மயேந்திரமாம்
 நெடுவ ரையும் கடலும் காண்டிர்!

—கம்ப: கிட், நாடவிட்டபடலம்: 31.

பதினேழாம் நூற்ருண்டின் இணையற்ற புலவராம் குமரகுருபரர் தமிழினிடத்தே தெய்வத்தன்மையைக் கண்டார். எனவே, தெய்வங்கள் தண்டாத தமிழார்வமும் தணியாத தமிழ் வேட்கையும் உடையவர்கள் என்று குறிப்பிடுகின்ருர். முத்தமிழ்த் தெய்வம், முழுமுதற் பொருளாம் சிவபெருமானே என்று குறிப்பிடுகின்ருர். "பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்திர பாண்டியனே." இதுபோன்றே அவர் மதுரை ஆலவாய் உறையும் அருள்மொழி அங்கயற் கண்ணி அம்மையைப் பல்வேறு வகையாகப் புகழ்ந்துரைக்கின்ருர். "முதுதமிழ் உததியில் வருமொரு திருமகள்" என்றும், "நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என்றும், "சங்கம் வளர்ந்திட நின்ற பொலங் கொடி." என்றும், "தமிழோடு பிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி." என்றும் பாடியுள்ளார். இதுபோன்றே கலைமகளை, "மதுரம் ஒழுகுங் கொழி தமிழ்ப் பனுவல் துறைப் படியும் மடநடைக் கூந்தலம்பிடி." என்றும், தமிழ்க் கடவுள் எனப் பாராட்டப்படும் முருகக் கடவுளைச் "சங்கத் தமிழின் தலைமைப் புலவர்" என்றும், "தோலாத முத்தமிழ் நாவா" என்றும், "தெளிதமிழின் வடித்திடு நவரசமே",

என்றும் பாடியுள்ளார். முருகன் கொண்ட தமிழ்ப் பற்றை விளக்கவே, "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்று ஆன்றோர் கூறியருளினர். தமிழின் இனிமையைக் கூறவந்த தமிழ்விடு தூது ஆசிரியர்,

பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக் கேறு வியற்கலையே— விஞ்சுநிறம்
தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகம்
தீயாது சொல்வினையுஞ் செய்யுளே

என்று சிறப்புறப் புகன்றுள்ளார். 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து' வானவீதியில் கோலங்கொண்டு வலம் வருகிறான் கதிரவன்; புறவிருளைப் போக்குகிறான். அகவிருளைப் போக்கி, மன மாசுகளைத் துடைக்கிறது தமிழ். இருளை நீக்கி ஒளியை ஊட்டும் தமிழை—இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டும் தமிழை—ஒளி விளக்காம் ஞானத் தமிழைத்—தண்டியலங் காரம் என்ற தண்டமிழ் இலக்கண நூல்,

ஓங்கலிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்திருள் கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னே ரிலாத தமிழ்

என்கிறது. மேலே குறிப்பிட்ட தெய்வத் தமிழின் சிறப் புக்களையெல்லாம் உள்ளடக்கிப் பாரதத்தைத் தமிழ்ப் படுத்திய வில்லிபுத்தூரார் மகனார் வரந்தருவார், வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள் ளார்.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

பொதிய மலையிலே பிறந்த தமிழ், முச்சங்கம் வைத்து மொழி வளர்த்த பாண்டிய வேந்தரால் சங்கத் கொட்டிலில் தாலாட்டப் பெற்று, பல அற்புதங்களைச் சாதித்து, சாவா மூவாத் தமிழாய்க் கன்னித் தமிழாய்க் கவினுறக் கொலு வீற்றிருக்கின்றது. 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் ஜோதி' போன்றே தமிழும் தெய்வத்தன்மை பொருந்தி வளமுற வாழ்கின்றது. அத்தகு தெய்வத் தமிழை, நாமும் பாரதியோடு சேர்ந்து,

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
 வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
 இசை கொண்டு வாழியவே!

என்று பாடி மகிழ்ந்து போற்றுவோமாக.

# 3. புறம் கூறும் அறம்

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம். அக்காலத்தே இலக்கியப் பெற்றி நிறைந்த இன் தமிழ்க் கவிஞர் பலர் வாழ்ந்தனர். புலவர்களே அன்றி நாட்டின் புரவலராம் மன்னர்களும் கவித்திறம் வல்ல கர்வலர்களாய் விளங்கினர். தமிழ் மக்களும், "நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே, மலர் தலை உலகம்" என்று, 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்ற கோனுட்சிக் கொள்கையில் அமைதியுடன் இன்பமாக வாழ்ந்தனர். சமயப் பொறை துவங்கிய நற்காலம் அது. கலைகளும் அவற்றின் நிலைகளும் நாடெங்கும் நல்ல முறையில் பரவி, மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தெடுப்பித்த தீஞ்சுவை கெழுமிய காலம் அது. மறத்துறையிலும் அறங்காத்தோம்பிய தமிழர்தம் அக்கால நாகரிகம் சீர்மையுற்றது; சிறப்புடன் துலங்கியது. இலக்கியத்தினைக் 'காலக்கண்ணுடி' என்பர் அறிஞர். 'மொழியின் வாயிலாக வாழ்க்கையினை வடித்தெடுப்பதே இலக்கியம்' என்று மாத்யூ அர்னுல்டு என்ற மேலை நாட்டுக் கவிஞரும், 'சிறந்த கருத்துக்கள் பொதிந்திலங்கும் குறிப்பேடு' என்று எமர்சன் என்ற அறிஞரும் குறிப்பிட்டுள்ள இலக்கணங்கள், புறநானூறு எனும் பைந்தமிழ் இலக்கியத்திற்கு முற்றிலும் பொருந்துவனவாகும்.

அறத்தினை வற்புறுத்தாத எந்த நூலும் சிறந்த நூலாக மாட்டாது. அறவாழ்விற்கு எதிரான கருத்துக்களைக் கூறும் கவிதை, வாழ்க்கைக்கே உலைவைக்க வந்த வைரியாகும். மேலும் கவிஞன் தான் எத்தகு மனவுணர்ச்சிகளைப் படிப்ப

வன் மனத்தில் எழுப்புகின்றனோ, அந்த அளவில்தான் மதிக்கப் பெறுவான். மக்களுக்கு நல்லொழுக்கம் புகட்டுவதற்கு அரிய கருவியாகத் துலங்குவது இலக்கியமே எனலாம். இந்த எண்ணங்களையெல்லாம் மனத்தில் இருத்திப் பார்க்கும்பொழுது தமிழில் புறப்பொருள்பற்றி எழுந்த புறநானூறு, தான் விளக்கவந்த மறப்பண்புகளை மட்டும் அன்றி, அறப்பண்பு களையும் அழகுற விளக்குவதாயுள்ளது வியந்து போற்றற்குரி யது. கால வெள்ளத்தால் கணக்கற்ற ஆண்டுகள் முற்பட்ட புறநானூற்றில் காணப்படும் அறக்கருத்துக்கள் சிலவற்றினை இவண் ஒரு சிறிது காண்போம்.

குறிக்கோள் இல்லாத வாழ்வுகுறைவுடைய வாழ்வாகும். நல்ல கொள்கைகள் நம்மை வழிநடத்திச் செல்லவேண்டும். 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்பர் வாகீசப் பெருந்தகை. அச் சீரிய பெரியாரே அவ்வாறு கூறுவராயின் மற்றவர் வாழ்வினை எவ்வாறு நினைக்க இயலும்? அறத்தை முதன்மை யாகக்கொண்டு அதன் நெறியில் நம்பிக்கை வைத்து நிலையாக வாழவேண்டுமென்ற உண்மை புறநானூற்றின் பல பாடல் களில் விளக்கப் பெறுகின்றது.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல

—புறம்: 1: 1, 2.

என்று சோழன் நலங்கிள்ளிக்குக் கோவூர்கிழார் அறவுரை புகன்றுள்ளார். அம் மன்னனையே, உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் என்ற புலவர்,

அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்ரு மைநிற் போற்ரு மையே

—புறம்: 28: 15-17.

என்று பாடி, அறத்தின் வழியில் அவன் நிற்க வேண்டிய நெறியினைப் புலப்படுத்தியுள்ளார்.

அறிவிற் சிறந்த ஔவைப் பிராட்டியார், அறத்தின் வழியே ஆற்றப்பெறும் நல்வினையொன்றே உயிர்க்கு நாளை உறுதுணை நிற்கும் என்று வற்புறுத்தியுள்ளார் :

வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை

—புறம்: 367: 10, 11.

இப் புலவரே பிறிதோரிடத்தில் 'நிலனே! நீ நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும், மேடாக இருந்தாலும் இருப்பாயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து ஆண்மக்கள் நல்லவராயுள்ளரோ அவ்விடத்து நீயும் நல்லை; அஃதல்லாது நினக்கென ஒரு நலமில்லை' என்று பாடியுள்ளமை கொண்டு மனிதப் பண்பாட்டின் மாண்பினைத் தெற்றெனத் தெளியலாம் :

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே, —புறம்: 187

நன்னெறியில் நடந்து இவ்வுலகிலேயே புகழினைப் பெற்றவரே மறுமையுலக இன்பமும் மட்டின்றிப் பெறுவர் என்பதனைப் புலவர் மோசிகீரனார் உணர்த்தியுள்ளார் :

இவண் இசை யுடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை.

—புறம்: 50: 14, 15.

இது குறித்தே திருவள்ளுவரும்,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு —திருக்குறள்: 231.

என்று கூறிப் போந்தார்.

கல்வியின் இன்றியமையாமையினை வள்ளுவர்,

கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

—திருக்குறள்: 393.

என்று கவினுறப் புலப்படுத்தியுள்ளார். புறநானூறும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. 'பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' பாடிய பாட்டொன்று கொண்டு இதனை அறியலாம். "தன் ஆசிரியர்க்கு ஓர் ஊறுபாடு வந்துற்ற வழி அது தீர்த்தற்கு உடன் ஓடிவந்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், வழிபாட்டு முறைமையினின்றும் வெறுத்து நீங்காது கற்றல் ஒருவர்க்கு அழகிதாம். ஏனெனின், பிறப்பு ஒரு தன்மையாக அமைகின்ற ஒருவயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வியின் சிறப்பால் பெற்ற தாயும் மனம் வேறுபடுவாள். ஒரு குடியில் பிறந்த பலருள்ளும், மூத்தோனை வருக என்னாது அவருள் அறிவுடையோன் எவனோ அவன் சென்ற நெறியிலேயே அரசனும் செல்வான். வேறுபாடு தெரிந்த நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்றால், அவனைக் கீழ்க்குலத்தவனென்று பாராது அவனிடத்தில் குடிகொண்டுள்ள கல்வியின் பொருட்டு, மேற்குலத்துள் ஒருவன், அவனிடத்தே சென்று வழிபடுவான்" என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வழகிய பாடல் வருமாறு :

உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே.

—புறம்: 183.

இவ்வுலகில் விளக்கமுறும் அறங்கள் யாவினும் மேலான அறம் பொய் பேசாமையே என்பதனைத் திருவள்ளுவர்,

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

—திருக்குறள்: 297.

என்ற குறளால் உணர்த்தினர். அரிச்சந்திரன் பல துன்பங்கள் பட்டபோது இறுதிவரை உறுதியாக வாய்மையிலிருந்து வழுவவில்லை என்பதனை வீரகவிராயர் பாடிய அரிச்சந்திர புராணத்தில் வரும்,

பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிஎமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்

என்ற பாடலால் அறியலாம். இவ் விழுமிய கருத்தினையே புறநானூறு,

வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன் மெய் கூறுவல்

—புறம்: 139, 5-6.

என்று குறிப்பிட்டுள்ளது. எப்படியாயினும் வாழ்ந்தால் போதும் என்ற வாழ்வினை வற்புறுத்தாது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோள் வாழ்வினை இவ்வடிகள் வற்புறுத்துகின்றன. ஈயென இரத்தலின் இழிவினையும், கொள்ளெனக் கொடுத்தலின் உயர்வினையும்,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

—புறம்: 204: 1-4.

என்ற பாடல் குறிக்கின்றது.

அக்கால மக்கள் தாம் மட்டும் வாழ்ந்து மற்றவர் வீழ வேண்டுமென்று விரும்பினர் அல்லர். தமக்குக் கிடைத்த பொருளையும் பிறர்க்கு மகிழ்ச்சியுடன் தந்து பெருவாழ்வு வாழ்ந்தனர்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

—திருக்குறள்: 212.

என்ற குறளின் கருத்துரை கடலுள் மாய்ந்த இளம் பெரும் வழுதி பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பிறங்குகின் றது. 'இந்திரர்க்குரிய அமிர்தமே இயைவதாயிருப்பினும் அஃது இனிதென்று தனித்து உண்டலுமிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சுவனவற்றிற்குத் தாமும் அஞ்சி, மடியின்மையின்றி வாழ்வர். புகழ் கிடைப்பதாயின் தம் இன் னுயிரையே ஈவர்; பழியென்றால் உலகம் முழுவதுமே கிடைப் பதாக இருந்தாலும் கொள்ளமாட்டார். மனக்கவற்சி யில்லார்; அப்பெற்றியுடையார் தமக்கென முயன்று வாழாது பிறர் துன்பம் துடைக்கவெனத் தம் வலிய முயற்சியினை மேற் கொள்ளுதலால் உலகம் நிலைத்திருக்கின்றது" என்பதே கீழ்க் காணும் அப்பாடலின் பொருளாகும்.

உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

—புறம்: 182.

நிலையற்ற இவ்வுலகில் நிலைத்து நிற்பது புகழ் என்று கண்டு தெளிந்து, அதற்கியைய வாழ்ந்தனர் தமிழர் என்ற செய்தி,

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே

என்ற புறப்பாட்டின் பகுதிகொண்டு தெளியலாம்.

வறுமையின் பிடியில் பெரிதும் வாட்டமுற்றார் புலவர் பெருஞ்சித்திரனார். "நூல் விரித்தன்ன கதுப்பினளாம்' அவர் தாய் கோல் காலாகக் குறும்பல வொதுங்கி நடந்தாள். அவர் மனைவியோ பசியால் வாட்டமுற் றிளைத்த தன் குழந்தைகள் முகம்நோக்கிக் கவன்றாள். இப்படிப்பட்ட துன்ப நிலையில் முதிரமலைக்குத் தலைவனும் குமணவள்ளலை நாடினார் புலவர். அவன் புகழ் பாடிப் பெரும்பொருளைப் பரிசாகப் பெற்றார். ஊர் திரும்பி வந்ததும் தன் மனைவியினை நோக்கித் தாம் பரிசாகப் பெற்ற பொருளினை அவள் விரும்பியவர் கட்கும், அவளை விரும்பியவர்கட்கும், கற்பினையுடைய மூத்த மகளிர்க்கும், கொண்ட அளவே குறித்துத் திரும்பப் பெற்றவர்க்கும், மற்றும் இன்ன தன்மையர் என்று கருதாது, தன்னொடும் கூடி உசாவுதலையும் செய்யாது, நாளை நலமாக வாழ்வோம் என்ற எண்ணத்தில் பொருளைச் சேமித்து வையாது, எல்லோர்க்கும் அதனை வாரி வழங்குவாயாக" என்று கூறும் புறப்பாடல் தனக்கென வாழாத தகை யுடைமையினையும், பிறர்க்கென வாழும் பொதுநலத் தினையும் புலப்படுத்துகின்றது.

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.

—புறம் : 163.

ஒரு வீட்டில் வாழும் தாய், தந்தை, மகன், படைக்கலம் படைக்கும் கொல்லன், நாட்டைக் காக்கும் அரசன் முதலியோர் கடமை இவையிவையெனத் திட்டமாகக் கூறும் எளிய புறநானூற்றுப் பாடலொன்றின் ஆசிரியர் பொன்முடியார் ஆவர்.

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

—புறம் : 312.

என்ற அவர்தம் பாடலில் நாட்டுப்பற்றும் வீரவுணர்வும் கிளர்ந்தெழுவதனைக் காணலாம்.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்றபடி அரசன் நீதிமுறை திறம்பாது அரசோச்சினான்; நிலம் பெயரினும் பெயராத சொல்லனாய் விளங்கினான்; புலவர் பாடும் புகழுடையோனாய்த் துலங்கினான்; 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும் இயற்கையல்லன செயற்கையில் தோன்றினும், இக் கண்ணகல் ஞாலம் காவலனைப் பழிக்கும் என்பது தெரிந்து, அருளும் அன்பும் நீங்காது, காவல் குழவி

கொள்பவர்போலத் தம் குடிமக்களைக் கண்ணினைக் காக்கும் இமைபோல் காத்தான்.

போரிலும் அறநெறி ஓம்பிய நாடு தமிழ்நாடு. 'தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத பசுவும், எவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகும் அறவோராம் பார்ப்பன மாக்களும், பெண்களும், நோய்வாய்ப் பட்டோரும், தென்புல வாழ் நர்க்குப் பிண்டச்சோறு வழங்கப் பிள்ளைகள் பெறுதவர் களும், போர் தொடங்குவதற்கு முன்னுல் பாதுகாப்பான இடம் சேர்ந்துவிட வேண்டும் என்று அறத்தின் வழியே மறத் துறையில் ஆணை விடப்படும்' என்பதனை நெட்டிமையார் என்ற பெண்பாற் புலவர் பின்வருமாறு பாடுகின்ருர் :

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்.

—*புறம்: 9: 1—6.*

பசு, பார்ப்பனர், சிறப்பினை வள்ளுவர்,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

—திருக்குறள் : 560.

என்ற குறளால் புலப்படுத்தியுள்ளார்.

விடுநில மருங்கின் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்

—மணிமேகலை: 13: 51—54.

என்று மணிமேகலைக் காப்பியம் பசுவின் சிறப்பினைப் பல படப் பேசுகின்றது. 'ஆநிறை கவர்தல்' என்ற புறப்பொருள் துறை பசுவின் சிறப்பினை மேலும் புலப்படுத்தும். சிலப்பதிகாரத்தில், பழமையான ஆயர் வாழ்வினை,

ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை

—சிலப் :15: 120— 121.

என்று கவுந்தியடிகள் கூறுவதினின்றும், இவ்வுண்மை மேலும் விளக்கமுறும். மதுரையை எரியூட்ட விரும்பிய கண்ணகி,

பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று......

—சிலப்: வஞ்சினமாலை: 53—55.

அங்கியங் கடவுளுக்கு ஆணையிட்டனள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் புறப்பாட்டு உலக ஒருமைப்பாட்டினைப் பரக்கப் பேசுவதாகும்.

இறுதியாக, நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர் 'நல்லது செய்தல் இயலாவிடினும் அல்லன செய்தலைக் கடிய வேண்டும்' என்றும், 'அதுவே நல்லாற்றில் செலுத்தும் நெறியாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

—புறம் : 195; 6—

இதுகாறும் கூறியவற்றால் பல்வேறு அறக்கருத்துக்களைத் திறம்பட எடுத்து மொழியும் நூல் புறநானூறு என்பது 'அங்கை நெல்லிக்கனி' யெனப் போதருகின்றதன்றோ?

# 4. வள்ளுவர் வழங்கிய வான்மறை

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றியவர் திருவள்ளுவர். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற அவர்தம் குறள்மொழிக் கிணங்கக் குன்றாத புகழொடு தோன்றி, உலகிற்கே வான்மறை வழங்கியவர் வள்ளுவர். இதனையே பாரதியாரும்,

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். தமிழ்நாடு வள்ளுவரைப் பெற்றெடுத்து உலகிற்கு வழங்கியதிற் பெருமை கொள்கின்றது. திருவள்ளுவரைப் பொய்யில் புலவர் என்றும், அவர் வழங்கிய குறளமுதத்தினைப் பொய்யாமொழி என்றும், அவர்காலப் புலவர்கள் சிறக்கப் பாராட்டியுள்ளனர். திருவள்ளுவ மாலையில் 'திருவள்ளுவர் வழங்கிய பொய்யாமொழி' என்ற தொடர் கருதத்தக்கது.

ஒரு புலவர் தம் வாழ்நாளிலேயே புலவர் பலராலும் பாராட்டப் பெறுதல் என்பது அரிய செய்தியாகும். அதிலும் கவிதை வளஞ்சான்ற சங்ககாலப் புலவர் பெருமக்களால் ஒருசேரப் பாராட்டப் பெறுவது என்றால், அச்செய்தி அரியதொரு செயலாகும். திருவள்ளுவர் பெருமானை அவர் காலத்துப் புலவர்கள் புகழ்ந்து பாடிய செய்யுட்கள்தான் திருவள்ளுவ மாலையில் காணப்பெறுகின்றன. திருவள்ளுவர்க்குப் பின்வந்த பெரும் புலவர்கள் அவர்தம் கருத்துக்களை 'முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோற் போற்று

வம்' என்பதற் கிணங்க, அப்படியே தம் காப்பியங்களிலும், பிற பல பாடல்களிலும் கையாண்டுள்ளனர். சான்ருக, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில்,

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்
—மணி : சிறைசெய் காதை : 59—61.

எனத் திருக்குறளை அப்படியே பெய்து தந்துள்ளார். இத்தொடர் பிற்காலப் புலவர் பெருமக்கள் திருவள்ளுவருக்குத் தந்த சிறப்பினை விளக்குகின்றது.

திருவள்ளுவரை ஒவ்வொரு சமயத்தினரும் தம் தம் சமயத்தினைச் சார்ந்தவர் என்று பெருமையோடு கூறிக்கொள்கின்றனர். திருவள்ளுவர்க்கு 'நாயனார்' என்ற பெயரும் உண்டு. இதனாலும் 'எண்குணத்தான்' என்ற சொல்லையும், 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற சொல்லையும் திருக்குறளில் காண முடிகின்றமையானும், திருவள்ளுவரைச் 'சைவர்' என்பர் சைவ அன்பர்கள். 'தாமரைக் கண்ணான் உலகு' என்ற தொடர் கொண்டு திருவள்ளுவரை 'வைணவர்' என்று காட்டுவர் வைணவ பக்தர்கள். அவ்வாறே 'மலர்மிசை ஏகினான்' 'அறவாழி அந்தணன்' என்ற தொடர்கள் கொண்டு சிலர் 'சமணர்' என்றும் 'பௌத்தர்' என்றும் கூறுப. ஆயினும் இவரைக் குறிப்பிட்டதொரு சமயத்தினைச் சேர்ந்தவர் என்று கூறுதல் அடாது; அது குறிப்பிட்ட எல்லைக்குள் திருவள்ளுவர் பெருமானை அடைத்து விடுவதாகும். எனவே, வள்ளுவர் உலகத்தார் அனைவருக்கும் பொதுவானவர் என்றும், அவர் வழங்கிய வான்மறை உலகப் பொதுமறை என்றும் கொள்ளுவது பொருத்தமுடைத்தாகும். இந்த உண்மையினை,

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி

என்று திருவள்ளுவ மாலையும்,

சமயக் கணக்கர் மதி வழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்

எனக் கல்லாடமும் கவினுற விளக்குகின்றன.

திருவள்ளுவர் உலக உயிர்களின் இயக்கங்களை நன்கு உணர்ந்தவர். உயிர்களின் பல்வேறு நிலைகளை நுனித்தறிந்தவர். உலக வாழ்க்கையில் தாம் கண்டு தெளிந்த உண்மைகளைச் சிக்கல் ஏதுமின்றித் தெள்ளத் தெளிவாக மக்கள் மனத்தில் எளிதில் பசுமரத்தாணியெனப் பதியும் வண்ணம் தம் 'அணுவை துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறளால்' வாரி வழங்கிய பெருந்தகை அவர். எனவேதான், மதுரைத் தமிழ் நாகனார் என்னும் தண்டமிழ்ப் புலவர், சீரிய சிறந்த பொருள்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டொளிர்வது திருக்குறள் என்ற கருத்தில்,

எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று கூறியுள்ளார். திருக்குறளின் சிறப்பினை விளக்கவந்த மற்றொரு புலவரும்,

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?

என்று பாடியுள்ளார்,

## உருவும் திருவும்

திருவள்ளுவருக்கு நாயனுர். தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனுர். மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் முதலிய பல பெயர்களே அக்காலப் புலவர்களும் மக்களும் வழங்கியுள்ளமை, அவர்கள் அப்பெருந் தகைமேற் கொண்ட பெரும்பற்றினையும் மதிப்பினையும் புலப் படுத்தா நிற்கும். இது போன்றே திருக்குறளுக்கும் முப்பானூல், உத்தர வேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை முதலிய பெயர்கள் வழங்குகின்றமை அறிந்து மகிழ்ந்து பாராட்டற்குரியது. புறநானூற்றில் நெட்டிமையார் பாடலில்,

> ஒருவன் செய்தி கொன்ருேர்க்கு உய்தி யில்லென
> அறம் பாடிற்றே ஆயிழை கணவ

என வரும் தொடர் கொண்டு, இத்தொடர்,

> எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறளைக் குறிப்பாகக் கொண்டு, அதனுல் திருக் குறளுக்கு 'அறம்' என்ற பெயரும் வழங்கியிருக்க வேண்டும் என்பர். மேலும் திருக்குறளுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் உரை எழுதியிருந் தனர் எனத் தெரியவருகிறது. இவ்வாறு பதின்மர், தமிழில் திருக்குறள் தவிர, வேறு எந்நூலிற்கும் உரை கண்டதாகத் தெரியவில்லை. இது திருக்குறளுக்கு மட்டுமே இயைந்ததொரு சிறப்பாகும். ஆயினும், இன்று இப் பதின்மர் உரையில் மணக்குடவர், பரிதி, பரிமேலழகர், காளிங்கர் ஆகிய நால்வர் எழுதிய உரை மட்டுமே நமக்குக் கிடைக்கின்றன. இவற்றினும் பரிமேலழகர் உரையே பெரும் புலவர்களால் பாராட்டப் பெற்று, இன்று பெருக வழங்குகின்றது. இவ் வுண்மை,

நூலில், பரித்த உரையெல்லாம் பரிமேலழகன்
தெரித்த உரையாமோ தெளி

என்ற திருக்குறள் உரைச் சிறப்புப் பாயிரத்தாலும் அறியக் கிடக்கின்றது.

திருக்குறள் நான்மறையின் மெய்ப்பொருளை உணர்த்துகிறது என்றும், சுருங்கிய சொற்களால் பொருத்தமுறப் பொருள் விளங்கச் சொல்லுகிறது என்றும், எளிய சொற்களால் அரிய பொருள்களைப் புலப்படுத்துகிறது என்றும், மற்ற நூல்களினும் சிறப்புற்று விளங்குகிறது என்றும்; உலக மக்களின் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் இருளை அகற்றும் ஒளி விளக்கு என்றும், தெள்ளமுதின் தீஞ்சுவையைப் பயக்கின்றது என்றும், பலவாறாகப் புலவர்கள் பலபடப் பாராட்டிப் புகழ் மாலை சூட்டியுள்ளனர்.

"காலத்தின் இடையிடையே கவிஞர்கள் தோன்றுவார்கள்" என்கிறார் கவிஞர் ஷெல்லி. அவ்வாறே சிறந்த பல பெருமக்கள் காலத்திற்குக் காலம் தோன்றிக் கருத்து மழை பொழிந்து மக்கட் சமுதாயத்தை நல்ல வழியில் நடாத்திச் சென்றிருக்கின்றனர்; மக்கள் நல்வாழ்வு வாழும் நெறியினை—வாழ்க்கைக் கலையினை—உணர்த்திச் சென்றுள்ளனர். அவர்களில் வள்ளுவர் தலையாய அறிஞராக விளங்குகின்றார்.

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்' என்பது தமிழ்ச் சான்றோர் கண்ட உண்மையாகும். அம் முறையில் அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பொருள்களை உணர்த்தி அதன்வழி மக்கட்குலம் வீட்டுப் பேற்றினை யடையும் நெறியினை வள்ளுவர் நமக்கு உய்த்துணர்த்துகின்றார். அறத்துப் பாலில் இல்லறம் துறவறம் குறித்தும் தம் அருமையான கருத்துக்களைத் தந்துள்ளார்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்

என்று இல்லறத்தைப் பாராட்டிய திருவள்ளுவர்,

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்

என்று துறவறத்தின் மாண்பினையும் புலப்படுத்தியுள்ளார். இல்லறம் எனப்படுவது, இவ்வுலகில் ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு, நல்லறமாம் இல்லறத்திற் கியைந்த செயல்களை நாடோறும் செய்து, மக்கட்பேற்றுடன் மகிழ்ந்து வாழ்தலாகும். துறவறமாவது இவ்வுலகின் நிலையாமை கண்டு பற்றைவிட்டு வனத்தின்கண் சென்று தவத்தை மேற்கொண்டு ஒழுகுதலாகும்.

இதனைத் தொல்காப்பியனார்,

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி நெஞ்சமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

—தொல்: கற்பியல்: நூ. 51.

என்று இல்லறம் துறவறம் என்ற இரண்டனையும் இணைத்துச் சிறப்பித்துப் பேசிப் பழந்தமிழர் வாழ்வு நெறியை உணர்த்துவர். திருவள்ளுவப் பெருந்தகை,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்று, இல்வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புகளை நயம்பட நவின்றுள்ளார். பழியஞ்சிப் பகுத்துண்டு, நல்லாற்றின் வழி ஒழுகி, அறனிழுக்காது, அறிவறிந்த மக்கட்பேறு கொண்டு, அன்புடன் விருந்தோம்பி, வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்று குறித்துள்ளார்.

இல்லறவியலில் அன்பின் சிறப்பினை வற்புறுத்திய வள்ளுவர், துறவறவியலில் அருளின் மாட்சியினைப் புகன்

றுள்ளார். செல்வத்துட் சிறந்த செல்வம் அருட்செல்வமே என அறுதியிட்டுரைக்கின்றார். 'கொல்லான் புலாலை மறுத் தானைக் கைகூப்பி உலகத்து உயிர்களெல்லாம் தொழும்' என்று புலால் மறுத்தலின் சிறப்பினை அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார். ஏனெனில், சங்ககாலத் தமிழர் ஒரு சிலர் வாழ்வில் புலால் உணவு கொள்ளல், கள்ளுண்ணல், வரைவின் மகளிரை நாடிச் செல்லல் முதலிய தீய செயல்கள் இடம் பெற்றிருந்தன. இத்தகு தீய பண்புகளை முதன்முதலில் கண்டித்து அறவுரை புகன்ற சான்றோர்—புரட்சியாளர்—திருவள்ளுவரே ஆவர். கள்ளுண்போர் சான்றோரால் எண்ணப் படாதவராவர் என்று கூறிக் கள்ளுண்ணலின் புன்மையை உணர்த்தியுள்ளார். பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கத்தினைக் கடிந்துரைத்த திருவள்ளுவர், பிறன்மனை நோக்காத பேராண்மையினை ஆன்ற ஒழுக்கமாகக் கூறியுள்ளார். மருதத்திணைக்கும் இடம் தராமல் காமத்துப்பாலைப் பாடியுள்ள சிறப்பு வள்ளுவரின் தனிச் சிறப்பாகும்.

பொருட்பாலில் வள்ளுவர் வழங்கும் அரசியற் கருத்துக்கள் காலங் கடந்தும் எண்ணி மதிக்கத் தக்கனவாகும்.

> படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு

என்று ஒரு மன்னனுக்கு வேண்டிய அங்கங்களை விளங்கச் சொல்லியுள்ளார். திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறிப்போந்த அரசியற் கருத்துக்கள் இன்றும் பொருந்துவனவாயுள்ளமை அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தினை நுவலா நிற்கும். வள்ளுவர் கண்ட சிறந்த நாட்டினை,

> உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
> சேரா தியல்வது நாடு

என்னும் குறளால் அறியலாம்,

மருந்து என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வழங்கியுள்ள கருத்துக்களை, இன்றைய மருத்துவ மேதைகள் படித்து வியக்கின்றனர். மருந்தே உண்ணுமல் வாழ்வைக் கடத்தி விடலாம் என்கிருர் பேரறிஞர் திருவள்ளுவர். எவ்வாறு?

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது**
**அற்றது போற்றி யுணின்**

என்றபடி, முன் உண்டது செரிக்கும் வண்ணம் தேர்ந்து பின்னுண்பான், உடம்பு நோயால் வருந்துதல் இல்லை என்ருர். மாறுபாடில்லாத உண்டியை மறுத்துண்டால் உயிர்க்கு ஊறுபாடில்லை என்று கூறியுள்ளார். மேலும்,

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்**

என்று, நோய்முதற்கண் இன்னதெனத் தேர்ந்து, பின்னர் அந்நோய் தோன்றியதற்கான ஏதுக்களை ஆராய்ந்து, அதன் பின்னர் அந்நோய் தீர்க்கும் பல வழிகளையும் எண்ணி, அவ்வுடம்பின் வகையறிந்து, அதற்கு வாய்ப்ப அந்நோய் களைய முற்பட வேண்டும் என்று மருத்துவ நுட்பமுடன் மொழிந்துள்ளார் மேலும், அவர் மருத்துவத்துறை நான்கு கூறுபாடுகளை உடையது என்கிருர். முதலாவது நோய் உற்றவர், இரண்டாவது நோயைத் தீர்க்கும் மருத்துவன், மூன்ருவது மருந்து, நான்காவது அம் மருந்தினைச் செலுத்துபவன் என மருந்தினை நாற்கூருக்கிக் காட்டுவர் வள்ளுவர். இதனைக் கீழ்க்காணும் குறளால் அறியலாம் :

**உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.**

காமத்துப்பால்தான் வள்ளுவர்தம் இலக்கியச் சிறப்பினுக்குச் சான்று பகரவல்லது. சொல்நயம், பொருள் நயம், கருத்து வளம், பாநலம், அணிநலன் முதலிய இன்னேரன்ன நயங்கள்

பலவும் நிறைந்து மிளிர்வது. இக் காமத்துப்பால் களவியல் கற்பியல் என ஈரியல்களை உடையது. களவு கற்பு என்ற இவ்விரண்டும் பழந்தமிழர் கண்ட அகவாழ்க்கை நெறியாகும்.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி

—திருக்குறள் 1191.

என்ற குறளில் காமத்தின் சிறப்பு வெளிப்படுதல் காண்க.

திருவள்ளுவர் கூறும் காதற் சிறப்பு கவினுடையதாகும். மேலும் காமத்துப்பாலில் அவர்தம் அழகான கற்பனை நயத்தினையும் கண்டு களிக்கலாம். சான்றாக,

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து

—திருக்குறள் : 1127.

என்றும்,

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து

—திருக்குறள் : 1128.

என்றும் அமைந்துள்ள குறட்பாக்கள் கொண்டு இவ்வுண்மையினைத் தேர்ந்து தெளியலாம். 'மலரினும் மெல்லிது காமம்; சிலரதன் செவ்வி தலைப்படுவார்' என்ற குறளில், வள்ளுவர், காதலின் உயிர்ப்பொருளை உணர்வோர் ஒரு சிலரே என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். காதல் இன்பத்திற்கு உவமையாக வள்ளுவர் கையாண்டிருக்கும் பொருள், சிறந்ததாயும் பொருத்தமுடைத்தாயும் காணப்படுகின்றது.

அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

இவ்வாறு முப்பாலிலும் தப்பாத கருத்துக்களைத் திருவள்ளுவர் தந்துள்ளமை அவரை உலகப் பேரறிஞர்களில் ஒருவராக்கியுள்ளமை கண்கூடு. எனவேதான், திருக்குறள் உலகின் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கீர்த்தியினைப் பெற்றுள்ளது. இந் நூல் ஆங்கிலம், இலத்தின், ஜெர்மனி, பிரெஞ்சு, போலிசு, உருசியம், வடமொழி, இந்தி, குசராத்தி, வங்கம், உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், பர்மியம், மலாய் முதலிய பல்வேறு மொழிகளில் பெருமையுடன் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. விரைவில் வியட்நாம், செக், சீனம், ஜப்பானிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட உள்ளது. இவையெல்லாம் வள்ளுவர் வழங்கிய வான்மறையின் சிறப்பினை உணர்த்துவனவாகும்.

இதுகாறும் கூறியவற்றால் திருவள்ளுவர் வழங்கிய திருக் குறளின் தனிச்சிறப்புத் தெள்ளிதிற் புலனாகும். தமிழில் இன்று காணக் கிடக்கும் தொன்னூலாம் தொல்காப்பியத் தினை அடுத்துத் திருக்குறள் ஒரு சிறப்பிடம் பெறுகின்றது; மக்கட் சமுதாயத்தின் வாழ்க்கைத் துணை நூலாக விளங்கு கின்றது. மக்கள் அறவழி நின்று நன்முறையில் பொரு ளீட்டி, சிறக்க இன்பம் துய்த்துப் பெருவாழ்வு வாழ வேண் டும் என்பதனை வற்புறுத்திக் கூறுகின்றது. சுருங்கக் கூறின், வள்ளுவர் வழங்கிய வான்மறை, உலகம் உய்யும் நெறியினை உணர்த்தவந்த உயர்மறை எனக் கூறல் பொருத்தமுடைத் தாகும்.

# 5. மென்மையும் வன்மையும்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் கதைத் தலைவி கண்ணகியாவள். கண்ணகியின் கற்பு மேம்பாடு கதை முழுதும் பரக்கப் பேசப்படுகின்றது. கற்பின் சிறப்பினை விளக்கத்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினை எழுதினாரோ எனும் அளவிற்குக் கண்ணகியின் கற்பின் மேன்மை கிளத்திக் கூறப்படுகின்றது. மேலும் சிலப்பதிகாரம் எழுந்ததற்குச் சிலம்பின் பதிகம் மூன்று காரணங்களைக் காட்டுகின்றது.

அரைசியல் பிழைத்தோர்க் கறம்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

—சிலப்: பதிகம்: 55—60.

என்ற பதிகத் தொடர்கொண்டு சிலப்பதிகாரத்தின் மூன்று நோக்கங்களில் ஒன்று, 'பத்தினிக் கடவுளை உயர்ந்தோர் போற்றி வழிபடுவர்' என்பதாகும்.

இந்த நோக்கத்திற் கிையயவே கண்ணகியின் வரலாறு கூறப்படுகின்றது. சோழநாட்டின் காவிரிப்பூம் பட்டினத்தில் மாநாய்கனின் மகளாகத் தொடங்கி, கோவலனுடைய மனைவியாக வளர்ந்த கண்ணகியின் வாழ்வு, பாண்டிநாட்டின் மதுரையம்பதியில் கைம்பெண்ணாய்த் திக்கற்று நின்று, நகரை நெருப்பிற் கிரையாக்கி விட்டு, இறுதியில் சேர

நாட்டின் செங்குன்றில் கணவனுடன் செல்லும் தெய்வநிலையாய் முடிவடைகின்றது. ஆக, கண்ணகியின் வரலாற்றில் நாம் மூன்று வெவ்வேறு நிலைகளைக் காண்கின்றோம்.

முதலாவதாகப் புகார்க் காண்டத்தில் நூலாசிரியர் இளங்கோவடிகள் கண்ணகியைப் பின்வருமாறு அறிமுகப் படுத்கின்றார்;

**நாகநீ ணகரொடு நாகநா டதனொடு**
**போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்**
**மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்**
**ஈகைவான் கொடியன்னா ளீராறாண் டகவையாள்**
**அவளுந்தான்,**
**போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்**
**தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்**
**மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்**
**காதலால் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ.**

—சிலப் : மங்கல வாழ்த்துப் பாடல் : 21—29.

இவ்வாறு கண்ணகியை அடிகள் முதற்கண் நமக்கு அறிமுகப்படுத்தும் பொழுதே, கண்ணகி திருமகளை யொத்த புகழ்வடிவினள் என்றும், பழுதில்லாத அருந்ததியின் புகழையுடைய கற்பினள் என்றும், உலகின் பிற மகளிர் தொழுதேத்தத் தக்க பெருங்குணங்களைக் காதலிப்பவள் என்றும் அழகுற அறிமுகம் செய்து வைக்கின்றார். இதைக்கொண்டே கண்ணகியின் கற்பு மேம்பாடு காரணமாகத் தாம் தரும் மதிப்பிற்கு இளங்கோவடிகள் தோற்றுவாய் செய்துவிடுகின்றார். அவ்வழி மேலும் மேலும் சிறப்புறவே தம் கதையினையும் வழி நடத்திச் செல்கின்றார்.

பின்னர்த் திருமணக் கோலத்தில் கண்ணகியினைக் காட்டு கின்றார். அதுபோதும் அடிகள்,

**நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்**
**வானூர் மதியம் சகடணைய வானத்துச்**
**சாலி யொருமீன் றகையாளை**

—சிலப் : மங்கல வாழ்த்துப் பாடல் : 49—51.

என்று கண்ணகியினை அருந்ததி போன்ற கற்புடையவள் என்று மீண்டும் நினைவூட்டுகின்றார். அதே மங்கல வாழ்த்துக் காதையின் இறுதியில், மூன்றாவது முறையாக,

**போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்**
**காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி**
**அங்கண் உலகின் அருந்ததி யன்னாளை**
**மங்கல நல்லமளி யேற்றினார்**

—சிலப் : மங்கல வாழ்த்துப் பாடல்: 60—64.

என்று கூறியிருப்பது உற்று உணரத்தக்கதாம். இவற்றால் இளங்கோவடிகளின் உள்ளம் கண்ணகியின் கற்பு மேம்பாட்டினைச் சிறப்பித்துப் பாடுதலில் பெரிதும் ஈடுபட்டுள்ளது எனலாம்.

அடுத்து மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் மென்மையினை இளங்கோவடிகள் புலப்படுத்துகின்றார். கோவலன் பாராட்டுகின்ற உலவாக் கட்டுரை இதனைச் செவ்விதிற் புலப்படுத்தும். ஆனால், கலையுள்ளம் கொண்ட கோவலன், 'ஆடலும் பாடலும் அழகும் என்று இங்குக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்' இலங்கிய மாதவியைக் கண்டான். கண்ட அளவிலேயே நெஞ்சைப் பறிகொடுத்தான். எனவே, மாமலர் நெடுங்கண் மாதவிமாலையினைக் கூனி கையிலிருந்து வாங்கி, மாதவியின் மணமனை புகுந்து, மாதவியுடன் அணைவுற்ற அந்தப் பொழுதிலேயே அயர்ந்து மயங்கி

விடுதல் அறியா விருப்பினஞ்கித் தன் வடு நீங்கு சிறப்பினை யுடைய மனைவியாம் கண்ணகியை மறந்தான். இதனல் கண்ணகியின் வாழ்வு அவலம் கண்டது. இதனை ஆற்ருமை யோடு எடுத்து மொழிகிருர் இளங்கோவடிகள்.

பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிரும் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி
—சிலப்: அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை: 54—57.

என்று கூறிக் கண்ணகியின் நிலைக்கு இரங்குகிருர்.

கானல்வரியில் கோவலன் 'காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியும் மாதவி தன் மனம் மகிழ' வாசித்தபோதும், பெண்ணிற் பெருந்தக்கதாகிய கற்பினையே பாராட்டிச் சிறப்பித்துப் பாடினன்:

திங்கள் மாலை வெண் குடையான் சென்னிசெங்கோலது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி

கண்ணகி கணவன் பிரிந்திருந்த வேளையில் ஒரு தீக்கனக் காண்கின்ருள். அதனைத் தன் தோழி தேவந்திக்கு எடுத்து மொழிகிருள். அதுகேட்ட தேவந்தி, காவிரி கடலொடு கலக்குமிடத்தில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டத் துறை மூழ்கிக் காமவேள் கோட்டத்தை வணங்கினல் கணவருடன் வாழும் நற்பேறு பெறுவள் என்கிருள். அதுகேட்ட கண்ணகி 'பீடன்று' என்று சொல்லி மறுத்தாள்,

தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

என்ற குறள்களுக்கு விளக்கமாய்க் கண்ணகியின் இம் மறுமொழியும் வாழ்வும் அமைந்தன. கோவலன் மாதவியிடமிருந்து திரும்பிவந்து கண்ணகி படுத்திருக்கும் பள்ளி அறைக்குள் நுழைகிறான். அதுபோது அவளுடைய வாடிய மேனி கண்டு, வருத்தங் கொண்டு,

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத் தருமெனக்கு

என்று கூறினான். அதுபோதும் அவனை முனியாமல்,

நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை

கூறினள். இதன்வழி 'ஒருவர் பொறை; இருவர் நட்பு' என்ற நாலடியார் கூற்று விளக்க முறுகின்றது.

நாடு காண்காதை தொடங்கித்தான் கண்ணகியின் மென்மைத்தன்மை மேலும் விளக்கமுறுகின்றது. காவிரிப்பூம் பட்டினத்தின் எல்லையைக் கடந்த அளவிலேயே, கண்ணகி வாடி விட்டாள். இதனை இளங்கோவடிகள்,

பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்
இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ

—சிலப் : நாடுகாண் காதை : 37—41.

என்று குறிப்பிட்டுள்ளார். சிறிது தொலைவு நடந்த அளவிலேயே கால்கள் வருந்தி நின்றன; வியர்வை கொட்டியது; நெடுமூச்செறிந்தாள்; முதிராத மழலைச் சொல்லை யுதிர்த்துக் கோவலனை நோக்கி, 'மதுரை மூதூர் இன்னும் எத்தனை காவ

தம் உளது?' எனக் கேட்டாள். கோவலனும், 'ஆறைங்காதம்' என்று ஆறுதல் உரை பகர்ந்து அவள் மென்மையினையும் அறியாமையினையும் கண்டு நெக்குருகி நைந்தான்.

தவத்துறையாட்டியாம் கவுந்தியடிகளின் துணை மதுரையின் நெடுவழிப் பயணத்தின் இடையே கோவலன் கண்ணகிக்குக் கிடைக்கின்றது. மூவரும் வழிநடந்து செல்லுங்காலையில் பூம்பொழிலிலிருந்து வம்பப் பரத்தை ஒருத்தியும் வறுமொழியாளன் ஒருவனும் எதிர்ப்படுகின்றனர். அவர்கள், 'காமனும் அவன் தேவி இரதியும் போன்ற இவர்கள் யாவர்?' என்று கவுந்தியடிகளை நோக்கி வினவினர். கவுந்தியடிகளும் அவர்களுக்கு மறுமொழியாக, 'எம் மக்கள்; வழித்துன்பம் பெரிதும் உற்றவர்கள்' என்று நவின்றனர். இதனைக் கேட்ட அவ்விருவரும், மேலும், 'ஓர்வயிற்றில் பிறந்தவர்கள் கணவன் மனைவியாக வாழ்தல் உண்டோ, கற்று வல்ல துறவியாரே?'' என்றனர்:

உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரென.

—சிலப்: காடுகாண் காதை : 227—28.

இத் தீமொழி கேட்ட கண்ணகி பெரிதும் வருந்தித் தன் செவிகளைப் புதைத்துக் கொண்டு காதலனின் பின்னால் நடுங்கி நின்றாள்.

தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க.

—சிலப்: நாடுகாண் காதை : 229—30.

இந்நிகழ்ச்சியினால் கண்ணகியின் மென்மைத்தன்மை மேலும் விளக்கப் பெறுகின்றது.

கண்ணகி காட்டின் இடையே நீர்நசை வேட்கையுற்றாள். அவ்வேட்கையைத் தணிக்க நீர் கொணரச் சென்றான்

கோவலன். அப்போது வனசாரிணி என்னும் வன்காட்டிடையே இயங்கும் மயக்கும் கானுறை தெய்வம் காதலிற் சென்று, 'நயந்த காதலின் நல்குவன் இவன்' என்று வயந்தமாலை வடிவில் தோன்றியது. ஆனால் மயக்குந் தெய்வம் வன்காட்டில் உள்ளதென மாடல மறையோன்வாய் முன்னமே யறிந்த கோவலன், வஞ்சம் பெயர்க்கும் பாய்கலைப் பாவையாம் கொற்றவையின் மந்திரத்தைச் சொல்ல, வனசாரிணி அவனை வணங்கி,

**புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்**
**என்திறம் உறையா தேகு**

என்று கேட்டுக்கொண்டதினின்றும், தவத்துறையாட்டியின் சிறப்பினும், இல்லறத் துறையில் தலைநின்ற கற்பின்செல்வி கண்ணகியின் பொறுமைப் பண்பே தன்னைத் தப்பாது ஒறுக்கும் என வனசாரிணி எண்ணியமை தெள்ளிதிற் புலனாகும்.

பாலை நிலத்தில் வாழும் வேட்டுவர்கள் தெய்வத்திற்கு வழிபாடு எடுக்கின்றனர். ஐயை கோட்டத்தில் தங்கி இளைப்பாறிய கோவலன், கண்ணகி, கவுந்தி ஆகிய மூவரும், வேட்டுவக் குடியில் தோன்றித் தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமையுடைய சாலினி என்பாள், தெய்வமேறப் பெற்றுக் கண்ணகியை நோக்கிப் பின்வருமாறு கூறுவதனைக் கேட்கின்றனர்:

**இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக்**
**கணவனோ டிருந்த மணமலி கூந்தல்**
**இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி**
**தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய**
**திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்ப.**

—சிலப்: வேட்டுவ வரி: 45—50.

இப் புகழ்ச்சிமொழியினைக் கேட்ட கண்ணகி, 'இம் மூதறிவுடையாள் மயக்கத்தாற் கூறினள்' என்று, தன் பெறுதற்கரிய

கணவனது பெரிய புறத்தே மறைந்து புதிய புன்முறுவலைக் கொண்டாள் என்கிறார்:

பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப.

—சிலப் : வேட்டுவ வரி: 51—53.

மதுரைமா நகரினை நெருங்கின்றபோது வையையாறு குறுக்கிடுகின்றது. 'வையை யென்ற பொய்யாக் குலக்கொடி கண்ணகிக்கு நிகழப்போகும் துன்பத்தினை முன்கூட்டியே அறிந்தனள் போலப் புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக் கண்ணில் நீர் நிறையக் கொண்டாள்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றபோது, கண்ணகியின் மென்மைக்கு இரங்க வைக்கின்றார்.

மதுரைமா நகரின் புறத்தே தங்கியிருந்தபோது, கோவலன் கவுந்தியடிகளைக் கைதொழுது, தான், 'நறுமலர் மேனி நங்கையாம் கண்ணகிக்கு நடுங்கு துயர்' தந்ததைக் கூறி வருந்துகின்றான்.

அடுத்து, கவுந்தியடிகள் கண்ணகியைத் தீமையேயிலாத இடைக்குல வாழ்வு நடாத்தும் மாதரியிடம் அடைக்கலப் படுத்தியபொழுது கூறும் மொழிகள் கண்ணகியின் மென்மைத் தன்மையினையும் கற்புக் கட்டுப்பாட்டினையும் உரைப்பனவாம்:

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி

இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம் பூண்டஇத் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.
—சிலப் : அடைக்கலக் காதை : 137-144.

கண்ணகி வெம்மையான பாலைவழியில் நடக்க ஆற்றுமல் துன்பப்பட்டு நடந்தாள்; தன் துன்பத்தினைப் பொருட்படுத்தாமல் தன் கணவன் படும் துன்பமே பெரிதெனக் கொண்டு அதற்காக வாடி வதங்கினுள்.

'தம் கணவர்க்கு இனிய துணையாகப் பொருந்திய பெண்களுக்கு இன்றியமையாத கற்புக் கடனை மேற்கொண்ட இத் தெய்வமல்லாது பொலிவினையுடைய வேறு தெய்வத்தினை யான் காணவில்லை' என்று, அறத்துறையில் மேம்பட்ட கவுந்தியடிகளே கூறுவாரேயாளுல், கண்ணகியின் மென்மையினையும் கற்பு மேம்பாட்டினையும் பிறரொருவரால் உரைக்கவும் ஒல்லுமோ? 'குணவாயிற்கோட்டத்து அரசு துறந்து இருந்த' இளங்கோவடிகள், துறவறநெறி நின்ற ஒரு தூயதுறவியின் வாயாலேயே இல்லற வழிநின்ற ஓர் எளிய பெண்ணின் பெருமையினைச் சிறப்புறப் பேச வைத்துள்ளமை, இவண் ஊன்றி உணரத்தக்கதாம்.

கண்ணகி, கணவன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் அடைக்கலம் புகுந்த மாதரியின் வீட்டில் விரைந்து அட்டிற்றெழிலை மேற்கொள்கின்றுள். அங்கும் அடிகள் கண்ணகியின் மென்மையினைச் சுட்டுகின்றுர். தன் மெல்லிய விரல்கள் சிவப்பப் பல்வேறு பசுங்காய்களை அரிவாள்மணையால் வெட்டி யெடுத்துக்கொண்டு, தன் திருமுகத்தில் வியர்வை தோன்ற, சிவந்த கண்கள் மேலும் சிவக்கச் சமையல் செய்து முடித்துக் கணவனுக்குப் பரிமாறுகிறுள்:

மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்

திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற அட்டில் கண்டனள்.

—சிலப்: கொலைக்களக் காதை : 29—32.

அதுபோது கண்ணகியைக் காணும் ஐயையும், மாதரியும் மகிழ்ந்து கோவலனை மணிவண்ணனாகவும், கண்ணகியைத் தங்கள் குலத்துப் நப்பின்னையாகவும் கொள்கின்றனர்.

கோவலன் கண்ணகியின் காற்சிலம்பை விற்றுவர மதுரை செல்லுமுன் கண்ணகியிடம் தான் அவளுக்குச் செய்த சிறுமையினை எல்லாம் எடுத்து மொழியும்போது, 'எழுகென எழுந்தாய்; என் செய்தனை?' என வியந்து கூறுகிறான். அது போது கண்ணகி,

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை
.................................
போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந் தனன்யான்

என்று தன் இல்லறக் கடமைகள் அவனில்வழி நிறைவேறாமற் போனதனைக் குறிப்பிட்டு, அவன்தன் போற்றா வொழுக்கத்தினைச் சுட்டிக் காட்டி, அதே நேரத்தில் தன்நெறி பிறழாத —கலங்கல் இல்லாத—கற்புநெறி வாழ்வினையும் எடுத்து மொழிகின்றாள். இதனைக் கேட்ட கோவலன் அவளைப் பின் வருமாறு பாராட்டுகின்றான்:

குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த

பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில் விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி.
—சிலப்: கொலைக்களக்காதை : 84—91.

நெஞ்சுத்தளை யவிழ்ந்த கோவலனின் இந்த மனந்திறந்த பாராட்டுரையினால் நாணமும், மடமும், கற்பும், கணவன் துயர்களையும் கடப்பாடும் நிறைந்த நாணின் பாவை, நீள்நில விளக்கு, கற்பின் கொழுந்து, பொற்பின் செல்வி கண்ணகி என்பது குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிவிடுகின்றது. தன்னை மாலையிட்ட மணவாளனிடமிருந்து இத்தகு பாராட்டினைப் பெற்ற கண்ணகியைக் கற்புக்கடம் பூண்ட தெய்வம் என்பதில் பிழையுமுண்டோ?

இதுவரையில் கண்ணகியின் மென்மைத் தன்மையினையும் அமைதிப் போக்கினையும் மட்டுமே கண்டு வந்தோம். இனி அவள் சீற்றம்கொண்டு சினந்துநின்ற நிலையினைக் காண்போம். கோவலன் பாண்டிய மன்னன் ஆணைவழிக் கொலையுண்டான் என்பதனைக் கேள்வியுற்றாள் கண்ணகி. சீறி எழுந்தாள்; நிலவினைப் பொழியும் திங்கள் கரிய முகிலோடும் நீள்நிலத்தின் கண் வீழ்ந்தது எனக் கீழே விழுந்தாள்; தன் செவ்வரி படர்ந்த சிவந்த கண்கள் மேலும் சிவக்க அழுதாள். தன் கணவன் எங்குச் சென்றானோ என்று கூவி வருந்தி ஏக்கமுற்று மயங்கினாள்:

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழி கதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
எங்கணாஅ என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.
—சிலப்: துன்பமாலை: 30—33.

'மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான்' என்று அவலநெஞ்சோடு அரற்றினாள். தவறு செய்தவன் மன்னன். அது அவளுக்கு நன்கு தெரியும்;

ஆயினும் மன்பதை கோவலனைக் கள்வன் என்று கூறுகின்றது. குற்றமற்றவன் தன் கணவன் என்று உலகிற்கு மெய்ப்பிக்க வேண்டிய கடப்பாடு அவளுக்கு வந்துற்றது. எனவே, காய் கதிர்ச் செல்வனை நோக்கிக் 'கள்வனோ என் கணவன்' எனக் கேட்டாள். கதிர்க்கடவுள், 'உன் கணவன் கள்வன் அல்லன்; அவனைக் கள்வனென்று கூறிய இவ்வூர் எரியுண்ணும்' என்று கூறுகிறான். கதிரோன் கூறியதைக் கேட்ட கண்ணகி சீற்றம் மிகக் கொண்டாள். தன்பால் இருந்த மற்றொரு சிலம்புடன் மதுரையின் வீதிவழியே சென்று, அங்குள்ள மகளிரை நோக்கிப் பலவாறு புலம்பி, 'என் கணவனை முன்போலக் கண்டு அவன் கூறும் நல்லுரையினை நான் கேட்பேன்; அங்ஙனம் கேளேனாயின் என்னை இகழ்க' என்று கூறினாள். கற்புடைப் பெண்டிரும், சான்றோரும், தெய்வமும், முறை தவறிய பாண்டிய மன்னன் கூடலில் இல்லாமற் போய் விட்டனரோ என்று சொல்லி அழுதாள். கணவன் வெட்டுண்டு கிடந்த இடம் சென்று, அவன் பொன் துஞ்சு மார்பத்தினைப் பொருந்தத் தழுவினாள். அவன் உயிர்பெற்று எழுந்து, 'நின் நிறைமதி வாள்முகம் கன்றியது' என்று கூறி, அவள் கண்ணீரைத் தன் கையால் துடைத்துவிட்டுச் சென்றான். கண்ணகியோ அப்போதும் சீற்றந் தணியாளாய்க் 'காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்; தீவேந் தன் தனைக்கண்டு திறங் கேட்பன்' என்று அரசன் வாழும் அரண்மனை முற்றம் சேர்ந்தாள். வாயிற்காவலனைக் கண்டாள் :

வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே

என்றாள். அவள் தோற்றத்தையும் செயலையும் வாயிற் காவலன் பின்வருமாறு அரசனிடம் கூறினான் ;

அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே

—*சிலப்: வழக்குரை காதை: 34—43.*

*"அவள் கொற்றவை அல்லள்; பிடாரி அல்லள்; பத்திர காளி அல்லள்; துர்க்கை அல்லள்; கறுவு கொண்டாள் போலவும் பொற்சிலம்பொன்று ஏந்திய கைளாய் ஒருத்தி வந்துள்ளாள்" என்று வாயிற்காவலன் கூறும் கூற்றிலேயே கண்ணகியின் வன்மை புலனுகின்றது. அடக்கமே உருவாக இருந்த கண்ணகி எங்கே? இப்பொழுது துர்க்கையினும் சீற்றம் கொண்டு சீறும் கண்ணகி எங்கே? மன்னனிடம் கூடவன்றே மருளின்றித் தனக்கேற்பட்டுவிட்ட குறைபாட்டினை அஞ்சாது எடுத்து மொழிகின்றுள்?*

*'தேரா மன்னு செப்புவ துடையேன்' என்று தொடங்கித் தன் ஊர், பெயர், அவன் தன் முறைதவறிய செயல் முதலிய வற்றினை உணர்த்தி, அவனை உயிர்துறக்கும்படி செய்கிருள். பாண்டியனேடு அவன் தன் மனைவியாம் கோப்பெருந்தேவியும், 'கணவனை இகழ்ந்தோர்க்குக் காட்டுவது இல்லெனு' அவன் மலரடி தொழுது உயிர்விடுகிருள். அதுபோதும் சீற்றம் தணியாத கண்ணகி, யான் ஒப்பற்ற கற்புடைய மகளிர் பிறந்த புகார்ப் பதியின்கண் பிறந்தேன். யானும் ஓர் பத்தினியாயின் அரசோடு மதுரையையும் ஒழிப்பேன்' என்று வஞ்சினம் மொழி கிருள்:*

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ யென்ற.

—சிலப்: வஞ்சினமாலை: 35—38.

இவ்வாறு சூளுரைத்து மதுரையை எரித்துப் பின்னர் மதுராதிபதித் தெய்வத்தின்வழிப் பழம்பிறப்பு உண்மைகளை அறிந்தாள்.

சேரநாட்டின் குன்றத்தில் வாழும் மலைவாழ்நராம் வேட்டுவரும் வேட்டுவித்தியரும் கண்ணகியைத் தம் செங் குன்றில் கண்டு அவளை யாரென வினவுகின்றனர். அதற்குக் கண்ணகி கூறும் மறுமொழியினால் அவள் சீற்றம் தணிந்து, தன்னையே தான் நொந்துகொள்ளும் தன்மையில் உள்ளாள் என்பதைக் காண்கிறோம்.

மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோவென, முனியாதே,
மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங்கு இழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்.

—சிலப்: குன்றக்குரவை : 3—6

இவ்வாறு கூறிய அளவில் கண்ணகி கணவனுடன் விமான மேறிச் சென்றாள். அது கண்ட மலைவாழ்நர் பெருவியப்புற்று, 'இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லை' என்று தேர்ந்து தெளிந்து விழாவெடுக்கின்றனர். பின்னர் மலைவளம் காணவந்த செங்குட்டுவனிடம் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கூறுகின்றனர். செங்குட்டுவன் மனைவி பெருங்கோப்பெண்டு கண்ணகியைப் 'பத்தினிக் கடவுள்' எனப் பாராட்டினாள்.

வடதிசை வேந்தரை வென்று வாகை சூடி, இமயமலையி லிருந்து பத்தினிப் படிவம் சமைப்பதற்குரிய கல்கொணர்ந்த

செங்குட்டுவன் தலைநகராம் வஞ்சியில் கடவுள் மங்கலம் செய்த காலையில் கண்ணகி தெய்வ வடிவில் தோன்றி,

தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந் தாயினன் நானவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுந் தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்

—சிலப்: வாழ்த்துக் கதை : 10.

என்று கூறினாள். தன் கணவனைக் கொன்ற பாண்டிய மன்னனையே தன் தந்தையாகக் கூறினாள் என்றால், அவள், தெய்வநிலைக்கு உயர்ந்துவிட்டாள் என்பதன்றோ பொருள்! மேலும்,

அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை

என்று பெருங்கதை கூறுகின்றபடி, கணவன் தவற்றொழுக்கத்தில் தலைப்பட்டபொழுது அவனைச் சினந்து பேசவில்லை. அம்மட்டோடன்றித் தன் வாழ்வைப் பறித்துக் கொண்ட மாதவியினையும் வெகுளவில்லை என்பதனை, வாழ்த்துக் காதையின் வழியே, காவற்பெண்டு சொல்கொண்டு தெளியலாம். 'மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்' என்ற தொடர் இதனை உணர்த்தும். அடித்தோழியும், 'கற்புக் கடம் பூண்டு காதலன் பின்போந்த பொற்றொடி நங்கை' என்று கண்ணகியைச் சிறப்பித்துப் பேசுகின்றாள்.

இவ்வாறு புகார்நகரில் ஈராறாண்டு அகவையினளாய் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி, பெண்மையின் மென்மை பெற்றுத் திகழ்ந்து, தன் கணவன் இசைகேடாகக் கொலை யுண்ட வழிச் சீறிச் சினந்து மன்னனையும் மதுரையையும் அழித்து, பின் சீற்றம் தணிந்து தன்னையே நொந்துகொண்டு அமைதி பெற்றுக் கணவனுடன் விமானமேறி விண்ணுலகடைகின்றாள்.

அழிவந்த செய்யினும் அன்பு அறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்

—திருக்குறள் : 807.

என்ற குறளின்படி வாழ்ந்து, கற்புநெறியில் இறுதிவரை உறுதியுடன் நின்றதால் தெய்வமாகிருள். இவ்வாறு 'வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமடந்தையாகிருள்' கண்ணகி. அவள் தன் ஆன்மீக வளர்ச்சியைப் படிப்படியாக விளக்கிச் செல்வதே இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகார மாகும்.

# 6. மறக்குடி மங்கையர்

தமிழகம் வீரத்தின் விளை நிலம். இங்கு வாழையடிவாழை யாக வீர மன்னர்களே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தமிழக வரலாற்றிலே கொள்கையிலே கோழையாகிக் கோலோச்சிய வர்கள் குறைவு. அவர்கள் தம் உருவிலே வீரம், மூச்சிலே வீரம், பேச்சிலே வீரம், செயலிலே வீரம், சிந்தையிலே வீரம் நிரம்பி வழிந்தது. வீரம் அவர்களோடு விளையாடியது. இம யத்தில் இமயவரம்பனின் இலாஞ்சனை பறந்தது. மின்னுலாவிய வெள்ளிப் பனிவரையில் தமிழரது வெற்றிச் சின்னம் பொறிக்கப் பட்டது.

அவர்களுடைய வாழ்க்கையே வீரவாழ்க்கை எனலாம். ஆம்! அவர்கள் காதலையும் வீரத்தையும் தங்களின் இரு கண்களாகப் பேணி வளர்த்தனர்.

இத்துணைச் சிறப்புடையதாகத் தமிழகம் வீரத்தில் மேம் பட்டு விளங்கா நின்றதற்கு நம் நாட்டு மறக்குடி மங்கையரே பொறுப்பாவர். வீரம் வழிவழி வந்ததே மறக்குலப் பெண்டி ரால் என்றால் அது மிகையாகாது. நம் மறக்குடிப் பெண்டிர் தாம் அருமையோடு பெற்ற குழந்தைகளுக்குப் பால் புகட்டிய தோடன்றி, வீரத்தையும் ஊட்டினார்கள். வீரம் விளைவித்த பல வீரர்களின் கதைகளின் மாண்பினை எடுத்துரைத்தனர். இளமையிற் கல்வி சிலையிலெழுத்தல்லவா! எனவே அவர்கள் இளமை தொட்டே வீரம்மிக்க வினைகள் ஆற்றுவோராய் விளங்கினர். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற தமிழ்நாட்டுப் பழமொழிக்கியைய இளமையில் அவர்களோடு விளையாடிய வீரம், முதுமையிலும் நிலைத்து நின்றது. எனவே

அவர்கள் எஞ்ஞான்றும் வீரம் வீறும் வினைகள் விளைவிப்போ ராய் விளங்கினர்.

மறக்குடி மங்கையர் விளங்கிய நாடே உலகின் முன்னணி யில் முன்னேற்ற முரசு முழக்குகின்றது. இதனை முன்னர் நிகழ்ந்த பெரும்போரே எடுத்துக்காட்டும். ஜப்பான் நாடு நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் குறைந்த ஒரு நாடு. ஆனால் நம்மால், 'சுண்டைக்காய் நாடு' என்று ஏளனமாக எள்ளி நகையாடப்பட்ட அந்த நாடுதான், அவனி வியக்கும் வகையிலே வெற்றி முரசு கொட்டிற்று.

உருசிய நாடு பல துறைகளிலும் மேம்பட்ட நாடு. அத னையே அமரில் அடக்கிற்று 'சுண்டைக்காய் ஜப்பான்'. இந்த வெற்றிக்கு மிகமிக முக்கியமான காரணம் ஜப்பானியமக்கள் தங்கள் குழவிப் பருவமுதலே தங்கள் தாய்மாரிடமிருந்து பெற்றுவந்த வீரப் பயிற்சியேயாகும். தாயின் முகம் மலர மைந்தன் மழலைமொழி பேசும்போதே, தாய் தன்னுடைய பழி பிறங்காப் பண்புடைப் பாலனுக்குப் பயிற்றுவிப்பன நாட்டுப்பற்றும், தியாகஉள்ளமும், வீர வாழ்க்கையுந்தான். அவர்களுக்கு விளையாட்டுக் காட்டப்படும் விளையாட்டுக் கருவிகள் அமரிலே பயன்படுத்தப்படும் படைக்கலங்களின் போலிகளாகும். அவர்களுக்குப் பள்ளியிலே பாடங்களோடு போர்ப்பயிற்சியும் பயிற்றுவிக்கப்பட்டது. 'நாட்டின் நலனே நம்முடைய நலம்' என்ற தியாகசிந்தையும், நாட்டின்மீது பகைவர் போர்தொடுக்கும் பொழுது வீட்டினுள் கரந்துறை யாமல், அடுபோர் செய்து, பிறந்த பொன்னாட்டின் மானம் காக்கும் தீரச்செயலும் அவர்களிடையே மண்டிக்கிடந்தன. ஜப்பான் நாட்டுத் தாயமார்கள் தாம் பெற்றுப் பேணி வளர்த்த மக்களை ஒன்றுகூட்டி வீரவுரை கூறிப் பகைமுரசு கொட்டிப் போர்முகம் நண்ணிய பகைவரோடு போரிடவும், அமரிலே அஞ்சுதல் சிறிதுமின்றி அடுபோர் செய்யவும், நாட் டிற்கு நலம் சேர்க்கத் தங்கள் உயிரையே நல்கவும் பணித்தனர். முடங்கல் வரைந்து அவர்களுக்கு ஆர்வமூட்டுதல் போன்ற

செயல்கள் அனைத்தும் அவர்களின் அரும் பணிகளேயாம். தாய்க்குலமே வெற்றிக்கு வித்தூன்றி வளர்த்தது என லாம்.

"தொட்டிலை ஆட்டுங் கையே தொல்லுலகை யாளுங் கை" என்ற முதுமொழி நம் நாட்டில் நிலவி வருகிறது. தமிழரின் வீரம் தலைசிறந்தது. அவர்கள் விழுப்புண் படாத நாட்களை வாழ்க்கையில் வழுக்கிய நாட்களாகவே கருதினர். மார்பிலே வேல்தாங்கிப் போரில் மடிவதை அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். முதுகில் புண்படுவதை மானம் இழந்த ஒரு செயலாகக் கருதினர். இதனைத்தான் நம் தமிழ்மறை,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்று விளம்புகிறது. இதனையே இனியவை நாற்பது, 'மானம் கெடவரின் வாழாமை முன்னினிதே' என்கிறது. எக்காரணம் பற்றியேனும் மானம் கெட வந்தவிடத்து மன்னர் பலரும் வடக் கிருந்திருக்கின்றனர். வடக்கிருப்பதாவது, ஆற்றிடைக் குறை போலும் தூயதொரு தனியிடத்தை நண்ணி, உணவு முதலியன துறந்து, கடவுட் சிந்தையுடன், வடக்கு நோக்கி நோன்பு இயற்றி உயிர் விடுதலாம். இதனை நாம் கோப்பெருஞ் சோழனின் வீர வரலாற்றிலே காணலாம். சோழன் செங் கணனின் சிறைக்கோட்டத்தில் மானம்வர உயிர்துறந்து மானத்திற்கு வெற்றிநல்கிய சேரன் கணைக்காலிரும் பொறை யின் வாழ்க்கைப் பொன்னேட்டிலே பரக்கக் காணலாம். இவ்வாறு உயிரைத் துச்சமென நினைந்து மானத்தைப் பெரி தாக மதித்த மாண்பினை மக்களுக்கு ஊட்டியவர்கள் இந்த மறக்குல மங்கையர்களே தான்.

சங்க இலக்கிய நூல்களிலே வீரச்சுவை விரவிவருவதைக் காணலாம். ஒன்பது சுவையினுள்ளும் காதலை அடுத்து வீரச் சுவையே விரவி வருகிறது. சீர் மல்கிய தமிழகத்தில் வீரம்

விளங்கப் பெரிதும் காரணமாயிருந்தவர்கள் நம் மறக்குடி மங்கையரே ஆவர். கடைச்சங்க நூல்களில் ஆங்காங்கு வீரப் பெண்டிரின் பெருமையைப் புகழ்ந்து வந்த வழக்கமும் இருந் தது. இந்த வழக்கத்தைப் புறப்பொருட்டுறைகளில் 'மூதின் முல்லை' என்று புலவர் புகன்றனர்.

பண்டைத் தமிழகத்தில் மறக்குலத் திலகங்கள் ஆற்றிய வீர வினைகள், நூலறிவும் நுண்ணறிவுத் திறமையும் உள்ள நாநலம் வாய்ந்த நல்லிசைப் புலமைப் பேறுபெற்ற பெண் புலவர்களாலேயே பாடப் பெற்றிருப்பது பீடு தருவதொன் றாகும். புறத்துறைப் பொருளமைந்த சங்க நூலாகிய புறநானூற்றில் பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர், தாய், தந்தை, கொல்லன், வேந்தன், மகன் ஆகியோரின் கடமைகளைக் கூறவந்தவிடத்து,

> ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே;
> சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே,
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
> ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
> களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்கிறார். இப் புறப்பாட்டிலிருந்து தாயின் மனநிலையும், நம் நாட்டு மக்களின் வீர வாழ்க்கையும் தெற்றெனப் புலனாகின் றன. 'என்றலைக் கடனே' என்பதனால், புறந்தருதல், தலையாய கடனென்பதும், மற்ற பிற கடன்களும் உண்டு, அவைகளெல் லாம் அதன்பின்னரே வைத்தெண்ணப்படும் என்பதும் வெள் ளிடைமலை.

மேலும், வேறொரு பாட்டும் புறநானூற்றில் காணக் கிடக்கின்றது. இப் பாட்டை இயற்றியவரும் ஒரு பெண்

பாற் புலவராகவே காணப்படுகின்றார். இவர் பெயர் காவற் பெண்டு ஆகும். இவர் எழுதிய பாடல் பின் வருமாறு:

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே. —புறம் : 68.

இந்தச் செஞ்சொல் வல்ல காட்சிச் சித்திரத்தின் பொருள்:—"சின்ன இல்லத்திலே அழகிய வேலைப்பாட்டோடு அமைந்திருக்கும் தூணைப் பிடித்துகொண்டு உன்னுடைய அருமை மகன் எங்கிருக்கிறான் என்று என்னை உசாவுகின்றாய்; என்னுடைய மகன் எங்குச் சென்று இருப்பனோ? யானவன் இருப்பிடத்தை அறிகிலேன். புலி உறைந்துவிட்டுப்போன மலைக்குகைபோல அவனை அருமையோடு பெற்றெடுத்த வயிறு இதோ; அவன் அடுகளத்திலே அமர்புரியத் தோன்று வான்; அங்குச் சென்று அவனை நீ காண்பாயாக" என்பது. இதனால் இப் பாட்டைப் பாடியவர் ஓர் மறக்குல மங்கை என்பதும், போரில் புலிபோல் பொருதும் போர்மறவனை மகனாகப் பெற்றிருந்தார் என்பதும், அத்தகைய வீரமகன் போர்க்களம் போந்தபின், புலி தங்கிப்போன மலைக்குகை போல் தாம் பெற்ற வயிற்றைக் கருதினாரென்பதும், உள்ளங்கை நெல்லிக்கனியாகத் துலங்கும். இதனைப் பாடிய காவற் பெண்டின் மனநிலை அறிந்து இன்புறற்பாலது. வீர மக்களைப் பெற்றுப் பேணுவதில் பழந்தமிழகப் பெண்டிர் பெற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும்தாம் என்னே!

ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவர், ஒரு பாட்டில், ஒரு தாய் தன் மகனைப் போருக்கனுப்பும் மாட்சியைப் புலப்படுத்துகின்றார். "ஒரு தாய் முன்னர்

அவள் உடன்பிறந்தோன் போர்க்களத்தில் களிற்றினை எறிந்து இறந்துபட்டுக் கிடக்கவும், அண்மையில் நிகழ்ந்த அடுபோரில் தன் அருமைக் கணவன் எதிர்ப்பட்ட பகைவரைக் கொன்று இமையவர் உலகைச் சேர்ந்திருப்பவும், இவற்றிற்காகவெல்லாம் மனம் உளைச்சலின்றி, அஞ்சாமையைக் கைவிடாது, போர்ப்பறை ஓசை செய்வதைக் கேட்டு மாறா மகிழ்ச்சி கொண்டு, தான் பெற்றெடுத்த பச்சிளம் பசலையைத் தழுவி எடுத்து, அச்சிறுவனுக்கு அழகிய ஆடைகளை அணிவித்து, அவன் உச்சியை நெய்யிட்டுச் சீவிச் சிகை முடித்து, தான் ஒரே ஒரு மகனையே உடையவளாயிருப்பது கண்டும் சிறிதும் கவற்சியுறாது, கண்களிலும் கண்ணீர் வடிக்காது, 'போர்க்களம் நோக்கி விரைந்து செல்க' என வழியனுப்பி வைக்கின்றாள். இச் செயல் கண்ட என் மனம் கெட்டொழிவதாக; இவள் நெஞ்சுரம், பாலையினும் கடுமையானது; பழங்குடிப் பிறந்தவள் என்பது இவளுக்கே தகும்'' என்று கூறுகிறார். இச் செய்யுளில் வீரச்சுவை எப்படித் ததும்பி வழிய நிற்கிறது? உயிரையும் ஒரு பொருட்டாக மதியாத தமிழரின் வீரம் வியக்கத் தகுந்ததொரு செயலென்பதில் ஐயம் என்னே?

இத்தகைய வீர மக்கள் அஞ்சா நெஞ்சத்தினராய் அமரிடைச் சென்று, ஆண்டு யாதேனும் காரணம் பற்றிச் சிறிது மனம் தாழ்ந்து, இழிசெயல்களைப் புரிவாராயின், அவர்கள் தாய்மார் இவர்களைச் சினந்து வெறுப்பர். ஒரு தாய் தன் மகன் ''கை வேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்'' என்ற குறள் கொடுத்த கோமான் வாக்கிற்கு மாறாய்ப் பகைக்களிற்றின் மேலே வேலை வீசியெறிந்து, அவ் வேலைத் திரும்பப் பெறும் ஆற்றல் அற்றவனாய், வெறுங்கையனாய்ப் புறம்போந்து வீடு விரைந்தது கண்டு, 'வாது வல்வயிறே' எனத் தொடங்கும் பாடல் ஒன்றினை மனம்வருந்திக் கூறி மிகவும் வெறுத்தனள். தன் புதல்வன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் மடிந்தான் என்னும் நல்ல செய்தி கேட்டு, அவனைப் பெற்ற

பொழுதினும் பெரிதுவந்தாள் ஒரு தாய். அதுபோலவே, 'போரில் புறம்காட்டி முன்னோர் இதுகாறும் செய்யாத தோர் பழியை உண்டுபண்ணிய முழு மூடனாகிய உன்னைப் பெற்ற என் வயிற்றை அறுப்பேன்' என்றாள் ஒரு தாய்.

இந்திய சரித்திரத்தில் 'மலை எலி' எனக் கூறப்படும் மகாராஷ்டிர வீரன் சிவாஜி, தான் பிற்காலத்தில் ஒரு பெரிய பேரரசான முகலாயப் பேரரசையே ஆட்டிவைக்கும் அளவிற்கு வீரம்மிக்க வினைகள் புரிந்தது, தான் சிறுவயதில் தன் தாய் ஜீஜிபாயிடமிருந்து கற்றுக் கொண்ட இராமாயண பாரத நாயகர்களின் வீரமும், மற்றப் பிற மன்னர்களின் வீர வாழ்வும் போக்கும்தாம். மதுரைப் பேரரசை இடைக்காலத்தில் இராணி மங்கம்மாள் வீரத்தோடு ஆட்சி செய்து, சூழ்ச்சிக்காரர் பிடியில் சிக்காமல் அவர்களை வீழ்த்தி நல்லரசு கோலினாள், முதலாவது சுதந்திரப் போர் என்று இப்பொழுது கூறப் படும் சிப்பாய்க் கலகத்தில் வீரப்போர் புரிந்த ஜான்ஸிராணி என்னும் இலட்சுமிபாய், 'சூரியன் மறையாத தேசம்' எனக் கூறப்படும் பேரரசாம் ஆங்கிலப் பேரரசை ஆண்ட வெள்ளை யரைக் கதிகலங்க அடித்து வீரப்போர் புரிந்தாள். அண்மை யில் அகிம்சைப் போராட்டம் நடத்தி, கத்தியின்றி ரத்த மின்றி யுத்தமொன்று நடத்தி, படைபலம் மிகுந்த ஆங்கி லேயரை நாடு கடத்திய நம் காந்தி அண்ணல் பயிற்சி பெற்றதும், தம் அன்பு அன்னையராகிய புத்லிபாயிடமிருந்து தான் என்பது தேற்றம். இவ்வண்ணமாகப் பிற்காலத்தில் பலருடைய வீர வாழ்க்கைக்கு அவரவர்களில் வீரத்தாய் மார்களே காரணமா யிருந்தார்களென்றால் அது மிகை யாகாது.

'பாட்டுக்கொரு புலவன் பாரதி' எனப் பாவலரோடு பாமரரும் ஒருமுகமாகப் புகழ்ந்து கூறும் பாரதியார் 'கண்ணன்—என தாய்' என்ற தீஞ்சுவை கெழுமிய செந் தமிழ்ப் பாடலின் கீழ்,

அருச்சுனன் போலவெனை ஆக்கிவிடுவாள்;
யாண்டுமெக் காலத்திலும்—அவள்
இன்னருள் பாடுநற் ஜெழில் புரிவேன்

என்கிருர். இதில், பத்துமாதம் சுமந்து படாத பாடு பட்டுப் பெற்றெடுப்பதோடு மட்டும் தாயின் கடமை தீர்ந்துவிடுவதில்லை; அவனை அருச்சுனனைப்போல விறல் மறவனுக ஆக்கும் செயலும் அவளிடம்தான் உள்ளது என்பது விளக்கமுறுகின்றது. பண்டைத் தமிழர் அருச்சுனனை வில்லாற்றலில் வல்ல வீரனுகக் கருதினர். எனவே, அதனையே பாரதியார் இங்குக் குறிக்கிருர். மேலும் அவர், இதனை வலியுறுத்தி,

நீண்டதோர் புகழ் வாழ்வும்—பிற
நிகரறு பெருமையும் அவள் கொடுப்பாள்

என்கிருர்.

புகழ் வாழ்வு வீரத்தினுலும் விளைவதொன்ருகும். எனவே, பாரதியார் தாய்க்குலத்தைப் பற்றிப் பலபடப் பேசுகிருர்.

மேலும் பலவாற்ருனும் புகழோடு வாழ்ந்த தமிழ் வீரர் வணங்கிய தெய்வம் கொற்றவை ஆகும். வெற்றி தரும் தாயே கொற்றவை என்று பெயர் பெற்ருள்.

மேற் கூறியனவற்றிலிருந்து, பெண்ணிடமிருந்தே வீரம் பிறக்கிறது என்பதைத் தெள்ளிதின் உணரலாம். இத்தகைய சிறப்பியல்புகள் எய்தப்பெற்ற வீரத்தாயர்களை 'வீர வாழ்க்கையின் வழிகாட்டிகள்' என்ருலும் பொருந்தும். இம் மறக்குல மங்கையர் இன்றும் நல்வீரம் விளைவிக்கும் வீரக்காளைகளை ஈந்து, நாட்டிற்கு நலம் பல நல்கி வருகின்றனர்.

# 7. விதியின் விளையாட்டு

**ஆ**ண்டாண்டு காலமாக அவனி மாந்தரை ஆட்டிப் படைத்து வருவது விதி. விதிக்கும், மனிதனின் மதிக்குமாக நடைபெற்றுவரும் போராட்டம் ஓர் அலை ஓயாப் போராட்டமாகும். இந்தத் தொடர்ந்த போராட்டமே மனித வாழ்வை அலைக்கழித்து வருகின்றது. விதியே வலிது என்பாரும், விதியை மதியால் வெல்லலாம் என்பாரும் உளர். ஆயினும், யாவரும் விதி செய்யும் சதியினுக்கு இலக்காகி நிற்பர் என்பது ஒருதலை.

விதி பற்றிய கொள்கை இன்று நேற்றுத் தோன்றியதன்று. சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பலவிடங்களில் விதியின் வலிமை பேசப்படுகின்றது. மேலை நாட்டினரும் விதி செய்யும் விளைவுகளை உடன்பட்டுள்ளனர் என்பதை மில்டனின் 'துறக்க இழப்பு' (Paradise Lost) என்னும் நூல்கொண்டும், சிந்தனைச் செல்வர் எமர்சனின் (Emerson) கட்டுரை கொண்டும் நன்கு தெளியலாம். வாழ்வினையும் தாழ்வினையும் வகுப்பது விதிதான் என்று பொதுவாக இங்குப் பேசப்படுகின்றது. துன்பம் தோன்றும் பொழுதெல்லாம் விதிமேல் பழிபோடுபவர் பலர் நம் சமுதாயத்தில் உளர். எனவே விதியின் ஆற்றலின் அளவைக் காண்பது நலம் பயப்பதாகும்.

தொன்னூலாம் தொல்காப்பியம் தந்த 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பினுர்' முதலாகப் பாரதிக்குப் பின்னர் இந்தத் தலைமுறையில் வாழும் கவிஞர்கள் ஈருகப் பலரும் விதி குறித்த தம் கருத்துக்களைக் கூறியுள்ளனர். தொல்காப்

பியனார் சொல்லதிகாரத்தின் கிளவியாக்கத்தில், அஃறிணை முடிவு கொள்ளும் உயர்திணைச் சொற்களை விளக்கப் பின் வரும் நூற்பா செய்துள்ளார். அது வருமாறு:

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

—தொல். கிளயாவிக்கம் : 58.

இதற்கு உரை எழுதப் புகுந்த வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர், "பால் வரை தெய்வம் என்பது எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்கு காரணமாகிய இருவினை யையும் வகுப்பது. வினை என்பது அறத் தெய்வம்" என்று உரை கூறினார். எனவே தொல்காப்பியனார் வினையினை உடன்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.

தெய்வம், பால், முறை, நியதி, ஊழ், வினை, ஊழ்வினை முதலிய சொற்கள் ஒரு பொருளினையே குறிக்கும் ஒரு பொருட் சொற்களாகும். தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர், "ஊழ்" என்ற ஒரு தனி அதிகாரம் வகுத்து ஊழின் ஆற்றலினைப் பற்றிப் பலபடப் பேசியுள்ளார். 'ஊழ்' என்பதனை விளக்கவந்த பரிமேலழகர், "ஊழ்—அஃதாவது, இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி யென்பன ஒரு பொருட் கிளவி" என்று குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் ஊழின் பேராற்றலை,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் —திருக்குறள் 380

என்று குறிப்பிட்டுள்ளார். அறத்துப்பாலில் இவ்வாறு குறிப்பிட்ட வள்ளுவர் பெருமான், பொருட்பாலில் 'ஊக்கம் உடைமை' என்னும் அதிகாரத்தில்,

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து —திருக்குறள்: 596.

என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்த அதிகாரமாம், 'மடியின்மை'யில்,

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும் —ஷை : 609.

என்று கருதினவற்றைச் செய்யுங்காற் சோம்பல் தவிர்க்க வேண்டுமென்கிறார். அடுத்து, 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தின் தொடக்கத்திலேயே,

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் —ஷை : 611.

என்றும்,

முயற்சி திருவினை ஆக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் —ஷை : 616.

என்றும்,

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி —ஷை: 618

என்றும்,

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் —ஷை : 319.

என்றும்,

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர் —ஷை: 620.

என்றும் குறிப்பிட்டுள்ளமையைக் கூர்ந்து நோக்கினல், "ஊழ், ஆற்றல் சான்றதாக இருந்தாலும் பலகால் முயல்வார்

பயன் எய்துவார் என்பதும், ஊழையும் வெல்வர் என்பதும், தெய்வத்தால் இடுக்கண் வரினும் முயற்சியினைக் கைவிடுதலாகாது என்பதும் நன்கு விளங்கும். எனவே, ஊழின் ஆற்றல் வலியதாக இருந்தாலும், சோம்பலின்றி முயன்று வெற்றி காணலாம் என்பதே திருவள்ளுவரின் தெளிந்த கருத்தென்பது தெரியவருகின்றது.

கணியன் பூங்குன்றனார் என்னும் புறநானூற்றுப் புலவர், "மின்னலுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது, கல்லை அலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின் வழியேயாம் மிதவை (தெப்பம்) போல, அரியவுயிர் ஊழின் வழியே படும் என்பது நன்மை கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

> ..................................மின்னொடு
> வானம் தண்துளி தலைஇ ஆனாது
> கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
> காட்சியில் தெளிந்தனம். —புறநானூறு : 192.

ஊழ்வினையின் திருவிளையாடல் குறுந்தொகைப் பாட்டொன்றில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. தலைவனும் தலைவியும், பாலை நிலத்தில் உடன்போக்கு நிகழ்த்தியபொழுது அவர்களை இளவயதிற் கண்டோர், பின் வருமாறு கூறிக் கொள்கின்றனர். "இவன் (தலைவன்) இவளது (தலைவியது) கூந்தலைப் பிடித்து இழுக்கவும், இவள் இவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பவளாய் ஓடவும், அன்புடைய செவிலித் தாயார் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல் அயற்றன்மையுடைய சிறிய சண்டையை முன்பு செய்வார்கள். இப்பொழுதோ மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள் மணம் புரிந்து மகிழும் இயல்பை

உண்டாக்கினாய்: ஆதலின் ஊழ்வினையே நீ நிச்சயமாக நன்மையை யுடையாய்" என்று இடைவழியில் தலைவன் தலைவியரைக் கண்டோர் தம்முள் கூறிக்கொண்டனர். அவ் வழகிய பாடல் வருமாறு:

இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்
புன்றலை யோரி வாங்குநன் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே. —குறுந்: 329.

அடுத்து, இத்தகைய ஊழ்வினை பற்றிய நம்பிக்கை பழந் தமிழர்க்கு மிகுதியாக இருந்தது என்பதனைக் காப்பியங்கள் வழியும் நாம் தெரிந்துகொள்ளலாம். சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரத்தின் பதிகம் நூல் எழுந்ததற்கு மூன்று காரணங் களைக் குறிப்பிடுகின்றது.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்

என்னும் பகுதிகொண்டு, ஊழ்வினை பிறவிதோறும் தொடர்ந்து தக்க பயன் பயக்கும் என்பது போதருகின்றது.

கானல் வரியில் தொடங்குகின்றது ஊழ். காவிரி பூம்பட்டி னத்தின் கடற்கரைச் சோலையில் கோவலனும் மாதவியும் புது மணமக்கள் போல் கொலு வீற்றிருக்கின்றனர். இன்பம் நிறைந்த இனிய சூழலில், அவ்வேளையில் மாதவி மனம் மகிழக் கோவலன், மாதவியின் கையிலிருந்த யாழினை வாங்கி வாசித் தான். ஆனால் அப்பாட்டு விதியின் சதியால் மாதவி, கோவ

லனை மனம் வெறுத்து எதிர்ப் பாட்டுப் பாடும்படி தூண்டி விட்டது.

"ஆங்குக் கானல் வரிப் பாடல் கேட்ட மானெடுங்கண் மாதவியும் மன்னுமோர் குறிப்புண்டிவன் தன்னிலை மயங்கினு னெனக் கலவியான் மகிழ்ந்தாள்போற் புலவியால் யாழ் வாங்கித் தானுமோர் குறிப்பினள்போற் கானல்வரிப் பாடற் பாணி நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மன மகிழக் கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத் தொடங்கு மன்'' என்று கூறுகிறது சிலம்பு.

மாதவி பாடிய கானல்வரிப் பாட்டினைக் கோவலன் கேட்டு,

கானல்வரி யான்பாடத் தானென் றின்மேன் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினளென
யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந்
துருத்த தாகலின்

மாதவியின்றியே கோவலன் நீங்கினன். அதுவே அவர்களு டைய இறுதிச் சந்திப்பாயிற்று. யாழிசைமேல் ஊழ் வினை வந்தது என இயம்புகின்றார் இளங்கோவடிகள்.

அடுத்துக் கோவலனும் கண்ணகியும் மதுரைமாநகர் நோக்கிப் புறப்பட்டதைக் கனத்திற முரைந்த காதையில்,

வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்

என்கிறார்.

இதனால், விதியே அவர்களை மதுரைக்குப் பயணம் கூட்டியது என அறிய வருகிறோம்.

ஆராயாமல் பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்று அவன் கைச்சிலம்பினைக் கொண்டு வரும்படி காவலரைப் பணிக்கின்றான். இதனை ஆசிரியர்,

வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரான் ஆகி

என்கிறார். "விதி வந்துறும்போது மதி முன்னே கெடும்" என்பதனை இது விளக்கி நிற்கின்றது.

மேலும், அருகசமயத் துறவியாம் கவுந்தியடிகள் இராமனும், நளனும் காடுசென்றது ஊழ்வினை வயத்தால்தான் என்று கூறிக் கோவலனைத் தெருட்டுகின்றார்:

அடவிக் கானகத்து ஆயிழை தன்னை
இடையிருள் யாமத்து இட்டு நீங்கியது
வல்வினை யன்றோ மடந்தைதன் பிழையெனச்
சொல்லும் உண்டேற் சொல்லா யோநீ.

'கோவலன் பண்டை யூழ்வினை யுறுத்து' இறந்தான் என்றும், 'பண்டை விளைவாகி வந்த வினை வளையாத செங்கோலை வளைத்தது' என்றும் சிலப்பதிகாரம் கூறுநிற்கும்.

இதனையே கவிச் சக்கரவர்த்தி கம்பர் தம் அழியாப் பெரும் காப்பியமாம் இராமாயணத்தில் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். சிலவற்றைக் காண்போம்:

இராமன் முடி சூடவேண்டிய நாளிலே மரவுரி தரித்து நிற்கின்றான். இதனைக் கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாட்
டாழ்வினை யிதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை யொருவரால் ஒழிக்கற் பாலதோ.

மனிதனைப் படைத்த நான்முகனும் பிரம்மனே வந்தாலும் விதியை மாற்றியமைக்க முடியாது என்கிறார் கம்பர்.

கோசலை, இராமன் முடி புனைந்து வருவான் என ஆவலோடு எதிர்நோக்கியுள்ளாள். ஆனால், அவள் முன் இராமன் விதியின் சதியால் பின்வருமாறு செல்கிறான்;

குழைக் கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் இரங்கி யேக
மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்என் றென்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்
முன்னொரு தமியன் சென்றான்.

இதனைப் படிக்கின்றபொழுது நம் கண்களில் நீர் சுரக்கின்றது அல்லவா? மாதர் இருமருங்கும் வெண் சாமரை வீச, வெண்கொற்றக் குடையினை ஏவலர் பிடித்துவர, முடி புனைந்து செல்லவேண்டிய இராமன் விதியால் தனியே சென்றான் அல்லவா?

மேலும், இராமன் கைகேயி ஏவலால் காடு செல்லத் துணிந்தான் என்பதைக் கேள்விப்படுகிறான் இலக்குவன். பொங்கிற்று சீற்றம். காலதேவன்போல் கனன்றான். வில்லை எடுத்தான். அம்பு தெறித்தான். அதுகேட்ட இராமன் தம்பியிடம் வந்தான். விளையாத சினம் விளைந்தது எப்படி? என்று கேட்டான்.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்.

"நதியில் நீரில்லாமல் இருப்பது நதியின் குற்றமன்று. அது போன்றே நான் காடேக நேர்ந்ததற்குக் காரணம் தசரதனும் அல்லன்; நம்மைப் பேணி வளர்த்த கைகேயியும் அல்லள்; பரதனும் அல்லன்; ஆனால் விதியின் பிழையப்பா இது" என்று கூறி, விதியின் பேராற்றலை உணர்த்தித் தம்பியை அமைதிப் படுத்தினான் இராமன்.

முக்காலமும் உணரவல்ல ஞானமும் தவமும் படைத்த வசிட்ட முனிவர் சுமந்திரன்வழி முடிசூட்டு விழாத் தடைப் பட்டுப் போனதைக் கேள்வியுற்றார். அவரே, "விதியை வென்றவர் இவ்வுலகிலேயே யாரும் இல்லை" என்று கூறுகிறார்.

"வென்றவர் உளரோ மேலை விதியினை" யென்று தசரதன் அரண்மனைக்குச் சுமந்திரன் சூழச் சென்றார்.

மேலும்,

குடைநிழல் அமர்ந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்

என்பதும்,

அறுசுவை உண்டி அமர்ந்துஇல்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கிஉண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்

என்பதும் விதியின் விளையாட்டால் அல்லவா?

பாரதத்தில் பதின்மூன்றாம் நாள் போர், வில்விசயனும் அருச்சுனனின் அருந்தவப் புதல்வன் வீர அபிமன்யு விளைத்த வீரப் போர்க்கு ஆற்றாமல் துரோணர், கன்னன், சகுனி, அசுவத்தாமன், கிருபன் முதலிய மாவீரர்கள் தோற்றுப் பின் வாங்கினர். வணங்காமுடியோன் துரியன் மைந்தன் இலக்கண குமாரன் அபிமன்யு எய்த அம்பால் அடிப்பட்டு விழுந்து மாண்டான். ஆற்றாமை மேலிட அழுது அரற்றிய துரியனின் அவல ஓலத்தைக் கேட்ட செயத்திரதன் வீரப்போரை விடுத்துச் சூதுப் போர் நிகழ்த்திச் சூழ்ச்சியால் அபிமன்யுவைக் கொன்றான். தாழ்ந்தோன் கையில் உயர்ந்த வீரமைந்தன் மாண்டான். "இவ்வுலகில் இவ்வாறு வந்து தாக்கும் விதியின் கொடுமையினை வெல்ல வல்லவர் எவரேனும் உண்டோ?" என உருக்கமாகப் பாடல் செய்துள்ளார் கவிச் சக்கரவர்த்தி

வில்லிபுத்தூரார். அவலச்சுவை கொப்புளித்தோடும், அவ்வுருக்கமான பாடலைக் காண்போம்:

மாயனும் திருமாமன் தனஞ்சயனும்
 திருத்தாதை வானோர்க்கு எல்லாம்
நாயனும் பிதாமகன் மற்றொரு கோடி
 நராதிபராம் நண்பாய் வந்தோர்
சேயனும் அபிமனுவாம் செயத்திரதன்
 கைப்படுவான்! செயற்கை வெவ்வேறு
ஆயநாள் அவனிதலத்து அவ்விதியை
 வெல்லும் விரகுயார் வல்லாரே.

—வில்லி பாரதம். பதின்மூன்றும் போச் சருக்கம். 131.

கலிங்கத்துப்பரணியில் கருணாகரத் தொண்டைமானின் கலிங்கப் படையெடுப்புக் கூறப்படுகின்றது. கலிங்கப் படையினர் அவனிடம் போர்க்களத்தில் அகப்படுகின்றனர். கலிங்கர்கள் உயிர் பிழைக்கப் பார்க்கின்றனர்.

எவ்வாறு?

விதியாற் கங்கை யாடப் போந்தகப்பட்டேம்
 காத்தோம்பு

என்கிறார்கள்.

கங்கையாடப் போந்த துறவிகள் என்று தங்களைக் குறிப்பிட்டு மதியால் விதியை வெல்கிறார்கள்.

இதனையே இருபதாம் நூற்றாண்டின், இணையிலாக் கவிஞரான பாரதியார் தம் பாஞ்சாலி சபதத்தில் பின்வருமாறு கூறுகிறார். சகுனியின் சூழ்ச்சியால் மனம் திரிந்த துரியோதனன் தன் தந்தை திரிதராட்டினைப் பாண்டவர்களைச் சூதுக்கழைக்கச் சம்மதிக்கச் சொல்கிறான். முதலில் மறுத்த

திருதராட்டிரனும் இறுதியில் சம்மதித்துவிட்டான். இதனைப் பின்வருமாறு கூறுகிறார் பாரதியார் :

> விதிசெயும் விளைவினுக்கே—இங்கு
> வேறு செய்வார் புவிமீ துளரோ?

திருதராட்டிரனை மறுத்துப் பேசுகிறான் விதுரன். அதற்குத் திருதராட்டிரன்,

> விதி! விதி! விதி! மகனே!—இனி
> வேறேது சொல்லுவன் அட மகனே!

என்கிறான்.

விதியின் ஆற்றலைப் பிறிதோரிடத்திலும் பாரதியார் வற்புறுத்திக் கூறியுள்ளார். பாண்டவர் பெரிய தந்தையார் அழைப்பின் பேரில் அத்தினபுரிக்குப் பயணமாகிறார்கள். அது பொழுது விதி பற்றிய ஓர் அருமையான கருத்தினைப் பாரதியார் தருகின்றார்.

> நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
> நழுவி விழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
> வரிவகுத்த உடற்புலியைப் புழுவுங் கொல்லும்;
> வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார்;
> கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்;
> கீழ்மேலாம், மேல்கீழாம்; கிழக்கு மேற்காம்;
> புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
> போற்றிடுவார் விதிவகுத்த போழ்தி னன்றே.

"விதியால் காட்டு அரசன் சிங்கம், நரி வகுத்த குழியில் விழும்; யானை சிற்றெறும்பால் சாகும்; வன்மைமிக்க புலியைப் புழு கொல்லும்; வருங்காலத்தை முற்றும் உணர்ந்த முனிபுங்கவரும் மயங்கி நிற்பர்; ஓடையில் மலை மிதக்கும்; மேல் கீழாகும்;

கீழ் மேலாகும்; கிழக்கு மேற்காகும், அந்தணர் புலையர்தமைப் போற்றிடுவர்" என்கிறார் பாரதியார்.

இதுகாறும் கூறியவற்றால் விதியின் வலிமை பெரிது என்பதும், ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதும், விதியின் விளையாட்டுக்கு வியனுலக மாந்தர்கைப் பொம்மை யாக இருப்பர் என்பதும் புலனாகும்.

ஆயினும் எதற்கும் எச் செயலுக்கும் விதிமேற் பழியைப் போட்டு வாளாச் சோம்பிக் கிடக்காமல் ஊக்கத்தோடு உழைத்தால் தடைக்கற்கள் எல்லாம் தகர்ந்து வெற்றிக் கதவு திறக்கும் என்பதும் நாம் உணர வேண்டியதொன்றாகும். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்று நம் ஆன்றோர் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டும் உரை கூறியதும் இதன் பொருட்டேயாகும்.

# 8. சேக்கிழார் தந்த செல்வம்

தொண்டர்தம் பெருமையினைப் பரக்கப் பேசும் நூல் பெரிய புராணமாகும். இந் நூலின் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஆவர்; இவர் புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்த குன்றத்தூரினர். சேக்கிழார் என்ற தம் குடிப்பெயராலேயே வழங்கப்பெற்ற இவர்தம் இயற்பெயர் இராமதேவர் எனக் கல்வெட்டுகொண்டு அறிகிறோம். இரண்டாம் குலோத்துங்க சோழன் அருண்மொழித்தேவர் என்ற பெயரால் வழங்கப் பெற்ற இவரைத் தன் முதலமைச்சராக்கி, இவருக்கு 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டத்தையும் வழங்கினன். இவர் தம் தம்பியார் பாலறுவாயர் சோழவேந்தனின் படைத்தலைவராக விளங்கினர்.

முதன்மைபெறும் முதலமைச்சர் பணியினை வள்ளுவர் வகுத்த 'அமைச்சு' என்னும் அதிகாரத்திற் கூறிய வண்ணம் செவ்வனே ஆற்றிவந்த சேக்கிழார் பெருமான், சீவகசிந்தாமணி என்னும் சமண சமயக் காவியத்தில் அளவு கடந்து ஈடுபட்டிருந்த அரசனுக்குச் சிவனடியார்களின் பெருமையினை மன்னன் மனங்கொள்ளுமாறு எடுத்து மொழிந்தார்.

**கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாஞ் சொல்**

என்றபடி சேக்கிழார் பெருமான் கூறிய மொழி கொண்டே குலோத்துங்கன் அச் சீர்த்தி பெறு சிவனடியார்தம் வரலாற்றை அறிய ஆவல் கொண்டான். சேக்கிழார் பெருமானும் அவன்தன் வேண்டுகோளை ஏற்றுத் தில்லைப்பதி

சார்ந்து பொன்னம்பலத்தில் நடமிடும் தில்லைக் கூத்தனூர் அம்பலவாணனின் அடியிணைகளை இறைஞ்சிப் பரவ, 'உலகெலாம்' எனுமொலி எழுந்தது. சேக்கிழாரும் 'உலகெலாம்' என்ற சொல்லையே முதலாக வைத்து, அடியவர்தம் பெருமையினை விளக்கும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியருளினூர். தொண்டர்களின் பெருமையினை இந் நூல் சிறக்கப் பேசுவதால், 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெயர் அமைந்தது. சைவ உலகின் பெரிய நூலான காரணத்தால் 'பெரிய புராணம்' எனப் பின்வந்தவர்கள் இந் நூலினை வழங்குவராயினர்.

இந் நூல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் இறுதியானதாகும்; பதின்மூன்று சருக்கங்களும், 4253 பாடல்களும் கொண்டது. இந் நூலினைச் சேக்கிழார் தில்லையில் எழுதி முடித்ததும், அரசன் தில்லையைச் சார்ந்து பேரவை கூட்டி ஓராண்டு முழுவதும் இந் நூலினை ஓதக்கேட்டு அளப்பிலா உவகையுற்றனன். முடிவில் சேக்கிழார் பெருமானையும் அவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தினையும் யானை மீதேற்றித் தானும் பின்னிருந்து கவரிவீசி நகர்வலம் வந்து வணங்கிச் சேக்கிழாருக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தான்.

சேக்கிழார் தூய இனிய நெஞ்சினர்; எளிமையும் இனிமையும் மிளிரப் பாடல்கள் பாடுவதில் வல்லவர். அவர் நடை மிகவும் செம்பாகமானது; அரிய சொற்கள் விரவாமல் எளிய சொற்களே நிறைந்து ஆற்றொழுக்குப் போலச் சொல்லும் பொருளும் ஒத்துச்செல்லும் தன்மை வாய்ந்தது. மேலும் தெய்வநலங் கெழுமிய பாடல்களின் தொகுப்பே பெரிய புராணம் எனலாம். தண்டமிழின் தனிப் பெருமையினைச் சேக்கிழார், 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' என்று குறிப்பிடுவர். இவரைத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், தாம் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்னும் நூலில், 'பக்திச் சுவை நனி சொட்டச்

சொட்டப் பாடிய கவி வலவ' என்று பாராட்டியுள்ளார். இக்கூற்று முற்றிலும் பொருத்தமானதாகும்.

ஆங்கில மொழியினை வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் மொழியினைச் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்க மொழியினை இசையின் மொழி என்றும், ஜெர்மன் மொழியினைத் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு மொழியினைத் தூதின் மொழி என்றும், இத்தாலிய மொழியினைக் காதலின் மொழி என்றும் கூறுவது போலவே, தமிழை இரக்கத்தின் மொழி—பக்தியின் மொழி என்று அறிஞர் உரைப்பர். தமிழ் பக்தியின் மொழி என்ற இக் கூற்றினைப் பெரிய புராணம் படிப்பவர் ஒருதலையாக ஒப்புக்கொள்வர் என்பது திண்ணம்.

பெரிய புராணம் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றினை விளங்கக் கூறுகின்றது. இந் நூலிற்கு மூல நூல்களாக விளங்குவன சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுதிய திருத் தொண்டத் தொகையும், 'தமிழ் வியாசர்' எனப் பெருமையுடன் அழைக்கப்பெறும் நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதியுமாகும். பெரிய புராணத்தைத் தனித்தனி அடியவர்கள் வரலாறு கூறும் ஒரு கோவை என்று கருதாமல், நூல் முழுமையினையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், சுந்தரமூர்த்தி நாயனார்தம் வரலாற்றினைக் கிளத்திக் கூறும் ஒரு காப்பியம் எனத் தெரிய வரும். சுந்தரமூர்த்தி நாயனாரின் முந்திய வரலாற்றைத் திருமலைச் சருக்கம் கூறுகின்றது. நாட்டுச் சிறப்பாகச் சோழநாடும், நகரச் சிறப்பாகத் திருவாரூரும் புனைந்து கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் பெருங்காப்பியத்தின் இலக்கணத்திற்கு அரண் செய்வனவாம். மேலும், சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில், 'சைவ முதற் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி' என வரும் தொடரால் திருத்தொண்டர்

என்ற பெயரினைச் சுந்தரர்க்குரிய பெயராகக் கூறுகின்றார்; நூலிற்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. 'எடுக்கு மாக் கதை இன்தமிழ்ச் செய்யுளாய்' என்று ஆசிரியரே கூறும் தொடர்கொண்டு, 'பெரிய புராணம் ஒரு பழங்கதை பற்றிய தொடர்நிலைச் செய்யுளாம்' எனத் தேர்ந்து துணியலாம்.

அடியவர்கள்தம் பெருமையினைத் திருக்கூட்டச் சிறப்பு என்ற சருக்கத்தில் சேக்கிழார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.**

—பெரிய. திருக்கூட்டச் சிறப்பு: 8.

வாழ்க்கையில் ஏற்படும் நன்மையையும் தீமையையும் ஒத்துக் காணுகின்ற உள்ளம் உயர்ந்த உள்ளமே ஞானியர் உள்ளமாகும். இந்நிலையினைத் தண்டியாசிரியர் 'சமநிலை' என்பர்; வடமொழியாளர் 'சாந்தம்' என்பர். உடலில் வாள்கொண்டு அறுப்பினும் சந்தனம் பூசினும் ஒத்த நிலை உற்றுணர்வார் யாவரோ அவரே ஞானியின் நிலையினைப் பெற்றவர் ஆவர். இதனை வெண்பாவிற் புகழேந்தி தாம் இயற்றிய நளவெண்பாவில்,

**மெய்த்திருவருந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்**
**ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே**

என்று தருமன் மனத்துயரின் காரணத்தை உசாவிய வியாசர் கூற்றால் விளக்குகின்றார். சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசு நாயனார் வரலாற்றினைக் கூறும்பொழுது, இவ்வரிய மனநிலையினை எடுத்து மொழிகின்றார். திருநாவுக்கரசர் தம் முதுமைக் காலத்தில் திருப்புகலூர்த் திருக்கோயிலின் திருமுணி முன்றிலில் உழவாரப் பணி செய்

கின்றார். அதுபொழுது உழவாரம் நுழைந்த இடமெங்கும் பொன்னும் நவமணியும் பொலிந்திலங்க இறைவன் அருள் செய்து, அடியவர் மனநிலையினைச் சோதிக்க எண்ணுகின்றார். ஆனால், நாவுக்கரசரோவெனில் செம்பொன்னினையும் நவ மணியினையும் உருள்பருக்கைக் கல்லுடன் ஒக்க நோக்கி உழவாரத்தினில் ஏந்திப் பூங்கமல வாவியினிற் புக எறிந்தார். இந் நிலையினைச் சேக்கிழார்,

**புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்**
**சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த**
**நல்லோர்**

—பெரிய. திருநாவுக்கரசர் புராணம்: 418.

என்று கூறியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகங்களை நன்கு ஓதி உணர்ந்து உளத்திற் கொண்டவர் சேக்கிழார் என்பது, அவர் நூலின் பலவிடங்களிலும் தேவாரத் திருப்பதிகக் கருத்துக்களையும் தொடர்களையும் கையாண்டுள்ளமை கொண்டு தெளியலாம். அமண் சமயத்தில் தொடர்புற்றுத் தருமசேனர் என்ற தலைமைப் பட்டத்தினையும் பெற்றுப் பின் இறையருளால் சூலைநோய்க்கு ஆளாகித் துன்புற்ற நாவுக்கரசர் தம் தமக்கை திலகவதியார் சொற்கேட்டுப் பழம்சமயமாம் சைவசமயம் புகுகின்றார். இது கேட்ட அமண் சமயத் தலைவர்கள் அவரைக் காஞ்சி நகர்க்கு வரவழைத்து மன்னன் ஆணை பெற்று நீற்றறையில் இடுகின்றனர். அதுபொழுது நாவுக்கரசர் பின் வரும் பாடலைப் பாடுகின்றார்:

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே,**

"எம்பெருமானின் இணையடி நீழல் குற்றமற்ற வீணையின் இசையாகவும் (செவிக்கின்பம்), இளவேனிற் காலத்து இன்ப மாலையில் தோன்றும் முழுமதியாகவும் (காட்சிக்கின்பம்), கோடையில் மெல்லென வீசும் தென்றலாகவும் (மெய்க் கின்பம்), இளவேனிற் காலத்துக்கிடைக்கும் துய்க்கப்படு பொருள்களாம் மா, பலா, வாழை போன்ற கனிகளாகவும் (வாய்க்கின்பம்), வண்டுகள் மொய்க்கும் மலர்ப் பொய்கை யாகவும் (மூக்கிற்கின்பம்) தோற்றமளிக்கின்றது" என்று தமிழாளியாம் திருநாவுக்கரசர் பாடுகின்றார். ஐம்புல இன்ப நுகர்வினைக் குற்றமறத் தருவது இறைவனின் இணையடி நீழலே என்பதைத் தம் தேவாரத் திருப்பாட்டால் திருநாவுக்கரசர் உணர்த்தியுள்ளார். இதனைச் சேக்கிழார் நன்கு மனத்துட்கொண்டு அக் கருத்தினையே கீழ்க்காணும் பாடலாகப் பெய்துள்ளார்:

**வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்**
**தைவருதண் தென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று**
**மொய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயா ழொலியினதாய்**
**ஐயர்திரு வடிநீழ லருளாகிக் குளிர்ந்ததே.**

—பெரிய. திருநாவுக்கரசு நாயனார் புராணம்: 98.

அடுத்து, சேக்கிழார், பக்தி நிறைந்த நல்நெஞ்சு வாய்ந்த தூய தொண்டர் என்பதனை முன்னர்க் கண்டோமன்றோ? அதன்படியே அவர் காணுகின்ற காட்சிகளும் கேட்கின்ற ஒலி களும் இறைவனையே நினைவூட்டுகின்றன. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பது அப்பர் தேவாரம். மேலும், திருநீற்றுப் பற்று நிறையவுடையவர் சேக்கிழார். திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில், 'திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றினார்' என்பர் சேக்கிழார். ஏனாதிநாத நாயனார் புராணத்தில், அதிசூரன் மெய்யில் வெண்திரு நீறும் அகத்தில்

கறுப்பும் (வஞ்சகம்) கொண்டு வந்தபோது ஏனாதிநாத நாயனார் அவனைக் கொல்லாது விடுத்ததோடு தாமும் அவன் கைவாளிற் கொலைப் பட்டார் என்ற செய்தியினைக் கூறுகின்றார் :

கண்டபொழுதே கெட்டேன் முன்பிவர்மேற் காணாத
வெண்திருநீற் றின்பொலிவு மேற்கண்டேன் வேறினிஎன்
அண்டர்பிரான் சீரடியார் ஆயினர் என்றுமனங்
கொண்டிவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேன்என்று.

—பெரிய. ஏனாதிநாத நாயனார் புராணம்: 38.

இங்கு மற்றொன்றும் கருதத்தக்கது. சேக்கிழார் அமங்கலமான செய்தியினையும், தம் மனத்தாலும் எண்ண முடியாத செய்தியினையும் கூறுவதற்கு மனம் ஒருபடார். அடியவர் பகைவரின் வாளால் வெட்டப்பட்டனர் எனக் கூறுவதற்கு மனம்வராத சேக்கிழார், அதனை வேறு முறையில் அக் கருத்துப் புலப்படக் கூறியுள்ளார். சான்றாக, ஏனாதி நாயனார் அதிசூரனின் வஞ்சத்தால் மாய்க்கப் பெற்றதனை,

முன்நின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்

என்றும், மெய்ப்பொருள் நாயனார், முத்தநாதனால் வெட்டப் பட்டபோது, 'புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில் பத்திரம் வாங்கித் தான் நினைந்த அப் பரிசே செய்ய' என்றும் கூறியுள்ளமை காண்க. வானம் இருண்டதைச் சொல்லவந்த சேக்கிழார் தம் இறையன்பு புலப்பட,

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான்

—பெரிய. தடுத்தாட்கொண்ட புராணம்: 159.

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் திருவாரூர்த் திருக் கோயிலில் பரவை நாச்சியாரைக் காண்கின்றார் சுந்தரர். கண்ட அளவில் தாம் கொண்ட வியப்பினைப் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார் :

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென்று அதிசயித்தார்.

—பெரிய. தடுத்தாட்கொண்ட புராணம்: 140.

இவ்வாறு சேக்கிழார் பாடியுள்ளவை கொண்டு உலகியற் பொருள்களை எங்குமாய் எல்லாமாய் நீக்கமற நிறைந்திருக்கும் எல்லையறு பரம்பொருளாகவே அவர் காண்கின்றார் என்பது தெரியவரும்.

இயற்கை வருணனையிலும் சேக்கிழார் தம் கவிப் புலமை யினைக் காட்டியுள்ளார் என்பது கீழ்வரும் பாட்டால் அறிய லாகும் :

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகம்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகம்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கிய சாதுரங்கள்பல நிகர்ப்பனவாம் நிறைமருதம்.

—பெரிய. திருநாவுக்கரசு நாயனார் புராணம்: 6.

இடத்திற்கேற்ற உவமையினைக் கையாளுவதிலும் சேக் கிழார் ஒரு சிறந்த புலவர் என்பதனைக் கண்ணப்ப நாயனார் புராணங்கொண்டு அறியலாம். காளத்தி மலையில் குடுமித் தேவரைக் கண்டு காதல் பொங்கி நின்ற திண்ணப்பர் இறை வனைப் பற்றிக்கொண்ட பான்மையினை 'வங்கினைப்பற்றிப்

போதா வல்லுடும் பென்ன நீங்கான்' என்ற தொடரால் புலப்படுத்தியுள்ளார். திண்ணப்பர் வேட்டுவ மரபினர். எனவே, அவர் சாதிக்கியைந்த தொழில் வேட்டையாடுதலாகும். அதுபோது அவர்கள் காணும் உடும்பின் நிலையினையும் செயலினையும் வைத்தே சேக்கிழார் திண்ணனின் செயலை விளக்கியிருப்பது அறிந்து மகிழத்தக்கது.

ஆனாய நாயனார் புராணத்தில் கார்ப் பருவத்தின் வரவினைக் கவினுறப் புனைந்து பாடியுள்ளார் சேக்கிழார். கீழ்க் காணும் அப்பாடலில் அணியழகு புலப்படும் மாட்சியினைக் காணலாம்.

நீலமா மஞ்ஞை ஏங்க நிறைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை கோபம்வாய் முறுவல்காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ ரரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள்.

—பெரிய. ஆனாய நாயனார் புராணம்: 19.

மேலும் ஆனாய நாயனார் புராணத்தில் இசைபற்றிய செய்தியினையும், குறிப்பாகப் புல்லாங்குழல் அமைக்கும் இலக்கணத்தையும், வாசிக்கும் முறைமையினையும் நன்கு உணர்த்திக் காட்டுகின்றார்.

இளையான்குடி மாற நாயனார் புராணத்தின்வழி அடியவர்க்கு விருந்தோம்பும் சிறப்பினை விவரித்துக் கூறியுள்ளார்.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

—திருக்குறள்: 86.

என்றார் வள்ளுவர். அம் முறையிலேயே மாரிக்கால இரவினில் மழை கொட்டும் வேளையில்வந்த சிவனடியார் அமுதுசெய்ய, வித்திய நெல் கொணர்ந்து அடிசிலாக்கி அன்புடன் அளித்த சிறப்புப் பேசப்படுகின்றது.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

—திருக்குறள்: 85.

என்ற குறளுக்கு விளக்கம் தருவதுபோல் இளையான் குடிமாற நாயனாரின் வாழ்வு அமைந்திருந்தமையைப் பெரிய புராணம் காட்டுகின்றது.

பெண்ணின் பெருமையினைப் போற்றிப் புகழ்வது பெரிய புராணமாகும். காரைக்காலம்மையார் வரலாற்றின் வழி இறைவனின் அன்பே ஈடு இணையற்றது என்பதனைச் சேக்கிழார் உணர்த்துகின்றார். காரைக்காலம்மையார் இறைவனிடம் வேண்டும் வரத்தினைச் சேக்கிழார் பின்வரும் அழகிய பாடலில் தந்துள்ளார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

—பெரிய. காரைக்காலம்மையார் புராணம்: 60.

இதுபோன்றே பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் மனைவி மங்கையர்க்கரசியின் சைவநெறித் தொண்டினையும் போற்றிப் புகழ்ந்துள்ளார் சேக்கிழார். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தர் அருளால் தம் கணவன் நின்றசீர் நெடுமாறன் என வழங்கும் கூன்பாண்டியனைப் பரசமயக் குழியினின்று கடைத்தேற்றிப் பழம் பெரும் சமய மாம் சைவ சமயத்திற்குக் கொணர்ந்த பெருமைக்கு உரியவர் ஆகிறார். இத் தனிப்பெரும் திருத்தொண்டினை நன்குணர்ந்த சேக்கிழார் :

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை

எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மால் போற்ற லாமே.

—பெரிய. மங்கையர்க்கரசியார் புராணம்: 1.

என்ற அழகிய திருப்பாட்டாகப் பாடியுள்ளார்.

இவ்வாறு சேக்கிழார் பெருமான் வழங்கிய திருப்பாடல்கள் கவிதையழகு மிளிர்ந்து கற்பனை வளங்கள் நிறைந்து அணிநலம் செறிந்து காணப்படுகின்றமையினைக் கற்போர் செவ்விதின் உணர்வர்.

# 9. கம்பன் கட்டிய கலைக்கோயில்

தமிழ்க் காப்பிய உலகில் தனக்கெனத் தனிச் சிறப்பான ஓர் இடத்தினைப் பெற்றிருப்பது கம்பராமாயண மாகும். கம்பனால் தமிழ்க் கவிதையுலகு பெருமை பெற்றது; தமிழால் கம்பன் உயர்ந்தான். 'கல்வியிற் பெரியர் கம்பர்', 'கவிச்சக்கர வர்த்தி கம்பர், கம்பன் வீட்டுள் ஒரு சிறு புன் கட்டுத்தறியும் கவி செய்யும்', கம்பனாரிடைப் பெருமை யுளது' முதலிய தொடர்கள் கம்பன் பெருமையினை நன்கு பறைசாற்றுவன வாகும். மேலும்,

அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன்று அமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானும் தமிழிலே தன்னை நாட்டி
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்கர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலையாலே நரர்க்குமின்று அமுதம் ஈந்தான்

என்றும்,

இம்பர் நாட்டில் செல்வமெலாம் எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதை யிற்போற் கற்றோர்க்கு இதயம் களியாதே

என்றும் செவிவழிச் செய்திகளாக வழங்கிவரும் பாடல்கள் கம்பன்தன் கவிச்சிறப்பினை வெளிப்படுத்தும்.

ஹோமர் எழுதிய இலியட்டினும் (iliad), வெர்ஜில் எழுதிய ஈனியட்டினும் (Aenid), மில்டன் எழுதிய துறக்க

நீக்கத்திினும் (Paradise Lost), வியாசர் எழுதிய பாரதத்தினும், வால்மீகி எழுதிய ஆதி இராமாயணத்தினும் சிறந்தது கம்பன் கட்டிய காவிய மாளிகையாம் என்பர். இந்நூலிற்குக் கம்பன் வழங்கிய பெயர் 'இராமாவதாரம்' என்பது. இதனை 'இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என்ற பாயிரச் செய்யுளின் பகுதியால் அறியலாம். கம்பன் தமிழ்மொழியிலும், தென்னாட்டின் பிறமொழிகளிலும், வடமொழியிலும் பெரும்புலமை பெற்றிருந்தான் என்பதனை, அவன் இயற்றிய காவியங்கொண்டு தெளியலாம். இராமனைக் குறித்துக் கம்பன், 'தென்சொற் கடந்தான், வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்று கூறியுள்ள தொடர் அவனுக்கும் பொருத்தமாகும். இயற்கையின் இனிய பெற்றியினை ஈடும் இணையுமற்ற முறையில் வருணிக்கும் திறம், பல்வேறு கதாபாத்திரங்களின் மனவியல்புகளைப் பழுதற வடித்துக்காட்டும் வன்மை, இசை நாடகம் முதலிய கலைகளை நுனித்துணர்ந்த மாட்சி, பிறந்த பொன்னுடாம் தமிழ்நாட்டின் மீதும், நாட்டின் பண்பாடு நாகரிகம் கலை முதலியவற்றின் மீதும் அவன் கொண்ட பற்று, நன்றி மறவா நல்லுள்ளம், விருத்தப்பாவினை வகைபெறக் கையாண்டு பல்வேறு கதிகளையும் சந்தவின்பத்தினையும் புலப்படுத்தும் புலமை, நாடகபாவத்தில் கதையினை நடத்திச் செல்லும் அரிய திறன் முதலிய இன்ன பிற சிறப்புக்கள் எல்லாம், கம்பன் கவிதையில் கவினுறத் துலங்குவதனைக் காணலாம்.

இனிக் கம்பன் கட்டிய கலைக்கோயினுள் புகுந்து காண்போம்.

சிறந்த கவிதை, வளமான நீரோட்டத்தைப் போல் இருக்கவேண்டும் என்பதனைக் கம்பன் ஒரு பாடலில் சிறப்புற விளக்கியுள்ளான். அப்பாடல் வருமாறு :

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவ்வியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்

**சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்.**

—கம்ப. ஆரணிய. பஞ்சவடிப் படலம்: 1.

கம்பன் தன் கற்பனை, உள்ளத்தை அள்ளும் நீர்மைத்து; காட்சியினை மனத்திரையில் படம்பிடித்துக் காட்டும் நிலைமைத்து. இயற்கையின் பேரழகிலே நெஞ்சைப் பறி கொடுத்த நிறைகவிஞனும் கம்பன், மருத நிலத்தைப் படிப் போர் மனங்கொள்ளுமாறு வருணித்துள்ளான். வற்றாத வளம் கொழிக்கும் சோலையில் கோலமயில்கள் தோகை விரித் தாடுகின்றன; செந்தாமரைப் பூக்கள் விளக்குகளாக விளங்கு கின்றன; மேகங்கள் முழவொலி முழங்குகின்றன; குவளை மலர்கள் கண் விழித்து இமைகொட்டாமல் நோக்குகின்றன; தெள்ளிய அலைகள் திரையாக எழிலுறப் பொலிகின்றன. மழலை வண்டினத்தின் ரீங்காரம் மகரயாழின் இசையாக ஒலிக்கின்றது. இத்தகு நிலையில் மருதநில மங்கை மாண் புறப் பொலிகின்றாள் என்று கம்பநாடன் கற்பனை செய் கிறான்:

**தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்**
**கொண்டல்கள் முழவி னேங்கக் குவளை கண்விழித்து நோக்கத்**
**தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ.**

—கம்ப. பால. நாட்டுப் படலம்: 4.

கம்பன் வடமொழிக் காதையைப் பாடினாலும் தீந்தமிழ் நாட்டை மறந்தானில்லை. தமிழ்நாட்டுப் பண்பும் பழக்க வழக்கங்களும் அவன் பாடலில் அப்படியே இடம் பெற்றுள் ளன. கோசல நாட்டைப் பாட வந்த கவிஞன், 'காவிரி நாடன்ன கழனி நாடு' என்று கூறுகின்றான். வடமொழியில் வால்மீகி, சீதையும் இராமனும் திருமணத்திற்கு முன்னர்

ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டதாகக் கூறவில்லை. ஆனால், பழந்தமிழ் மரபினை நன்குணர்ந்த கம்பன், தான் தரும் காப்பியம் தமிழ் மக்களுக்கு என்பதனை நன்குணர்ந்து, கடிமணம் புரிந்துகொள்வதற்கு முன்னதாகச் சீதையையும் இராமனையும் சந்திக்க வைத்து, இருவர் தம் உள்ளமும் காதலால் கட்டுண்டதாகக் குறிப்பிட்டுள்ளான்.

> **பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து**
> **ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்**
> **வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்**
> **இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.**
>
> —கம்ப. பால. மிதிலைக்காட்சிப் படலம்: 37.

இதுபோன்றே வாலியை இழந்த தாரையின் கைம்பெண் கோலத்தைக் கூறவந்த கம்பனின் சொற்சித்திரத்தில் தமிழ் நாட்டின் கைம்பெண் கோலமே இடம் பெற்றுள்ளது.

கம்பன் தந்த இராமாயணத்தைக் 'கம்பநாடகம்' என்று அறிஞர் கூறுவர்; நாடகப் பாத்திரங்களின் உரையாடல் களிலும், அவர்கள் விம்மும் உணர்ச்சியோடு பேசும் பாகங் களிலும், கதை வளர்ந்துகொண்டே போவதில் ஆங்காங்கே நிகழும் நாடக பாவம் நிறைந்த சம்பவங்களையும் கட்டங் களையும் சித்தரிப்பதில்தான், கம்பனின் கவிதை ஈடும் இணையு மற்றுப் பொலிகின்றது என்பர். இரணியன் வதைப்படலம் இதற்குச் சிறந்த சான்றாக இலங்குகிறது. இது போன்றே இந்திரசித்து இலக்குவனோடு போர்செய்து விட்டுப் பல துன்பங்களுற்று இராவணனை வந்தடைகிறான். 'நிகழ்ந்தது உரை' எனக் கேட்ட தன் தந்தையிடம், 'குலம் செய்த பாவத் தாலே கொடும்பகை தேடிக் கொண்டாய்' என்று கூறி, 'ஆசைதான் அச்சீதைபால் விடுதியாயின் அனையவர் சீற்றம் தீர்வர்; போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்;

உன்மேல் காதலால் உரைத்தேன்' என்று உலகெல்லாம் கலக்கி வென்றான் இயம்பினன். இதனைக் கேட்ட இலங்கை வேந்தன் எயிறு இளநிலவு தோன்றப் புயங்கள் குலுங்க நக்குத் தன் தனயனிடம் பின் வருமாறு கூறும் கூற்றில் நாடக நயம் காண லாம்:

**முன்னையோர் இறந்தோர் எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்**
**பின்னையோர் நின்றோர் எல்லாம் வென்று அவர்ப்பெயர்வர் என்றும்**
**உன்னைநீ அவரை வென்று தருதிஎன்று உணர்ந்தும் அன்றால்**
**என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்.**

—கம்ப. யுத்த. இந்திரசித்து வதைப் படலம்: 8.

'பிறர் எனக்கு வெற்றி கொடுப்பர் என்று நான் இப்பகையினைத் தேடிக் கொள்ளவில்லை. என்னை நோக்கியே இப் பெரும் பகையைத் தேடிக்கொண்டேன்' என்கிறான் இராவணன். எத்துணை நெஞ்சுரம் இவனுக்கு! இணையற்ற வீரனாயிற்றே இராவணன்! 'வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும், தாரணி மௌலிபத்தும்' உடையவனன்றோ இராவணன்! ஆயினும் அவனும், முதல்நாட் போரில் இராமபிரானிடம் தோற்று, கோசல நாடுடைய வள்ளலால் 'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' எனப் பட்டான். இலங்கையை நோக்கி இராவணன் சங்கரன் கொடுத்த வாளினையும் வீரத்தினையும் போர்க்களத்திலேயே போட்டுவிட்டு வெறுங்கையனாய்த் திரும்புகின்றான். அதுபோது எந்தத் திசையினையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை; வளநகரையும் நோக்கவில்லை; எதிர்ப்பட்டோரையும் அவன் கண்கள் சந்திக்கவில்லை; கடலனைய சேனையைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அரண்மனையில் வாழும் மகளிர் எல்லாம் தன்னை நோக்கத் தான்மட்டும் பூமி என்கிற பெண்ணையே நோக்கித் தலைகுனிந்து சென்றான் என்ற கம்பன் கூற்றில்தான், எத்துணை அழகு மிளிர்கின்றது!

மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தானப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.

—கம்ப. யுத்த. கும்பகருணன் வதைப்படலம். 3.

மேலும் மனத்தில் எழும் எண்ணங்களைக் கவிதையாக வடிக்கும் ஆற்றல் கவிஞன் கம்பனுக்குக் கைவந்த கலையாகும். இராகவனிடம் தோற்று இலங்கை சார்ந்து அமளி போந்த இராவணன் கண்துஞ்சாமல் கவலையில் துஞ்சினான். கையற்ற நெஞ்சினனாய் உள்நிறை மானம் உருத்தெழ நெடு மூச்செறிந்தான். அதுபோது, வானவர், மண்ணுலகில் உள்ளோர்—தன் பகைவர்கள் எல்லாம்—தன் நிலைகண்டு நகுவர் என்பதற்காக அவன் நாணவில்லை. ஆனால், மிதிலைப் பொன்னாம் சீதை தன்னைப் பார்த்துக் கைகொட்டி நகைப்பளே என்ற எண்ணம் மீதூர, அதனால் வந்த நாணத்தின் பெருக்கால் உள்ளமும் உடலும் கூசிக் குறுகுகின்றான். இச் செய்தியினைக் கவிக்கூற்றால் காண்போம்;

வான்நகும் மண்ணும் எல்லாம் நகும்மணி வயிரத் தோளான்
தான்நகு பகைவர் எல்லாம் நகுவர்என்று அதற்கு நாணான்
வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்பு கின்றான்.

—கம்ப. யுத்த. கும்பகருணன் வதைப்படலம்: 11.

அடுத்து, குணத்தைக் குணியாக வருணிக்கும் கவிதைப் பண்பு கம்பனிடம் குறைவறக் குடிகொண்டுள்ளது. 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகராம்' இலங்கை சென்று அசோக வனத்தில் சிறையிருந்த செல்வியாம் சீதையைக் கண்டு திரும்பும் அனுமன் இராமனிடம் கூறும் கூற்றால் இதனை அறியலாம். "வில்லாற்றல் பொருந்திய வீரனே! இலங்கையில் நான் சீதையைக் கண்டேனல்லேன்! இற்பிறப்பும், இரும்பொறையும், கற்பும் பொருந்திக் களிநடமிடு

வதனைக் கண்டேன்'' என்கிறான், சொல்லின் செல்வனும் அனுமன்.

விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

—கம்ப. சுந்தர. திருவடிதொழுத படலம்: 29.

தெய்வப் புவவர் சேக்கிழார் பெருமானும் இவ்வாறே திருஞான சம்பந்தர் புராணத்தில் ஞானசம்பந்தரைக் குணியாக உருவகிக்காமல் குணமாக உருவகித்துக் கூறியுள்ளார். மதுரை வந்து மடத்தில் தங்கியிருந்த ஆளுடைய பிள்ளையைப் பாண்டி மாதேவி மங்கையர்க் கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வந்து கண்ட பொழுது அவர்கள் ஞானசம்பந்தப் பெருமானைக் காணவில்லை என்றும், ஞானத்தின் திருவுருவை, நான்மறையின் தனித்துணையை, மண்ணில்வளர் மதிக்கொழுந்தை, கானத்தின் எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள் என்றும் கூறியுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கி உணரத்தக்கது.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்,

—பெரிய. திருஞானசம்பந்தர் புராணம்: 728.

ஒலிநயம், கேட்போர்தம் செவி வாயிலாக உள் நுழைந்து அவர்தம் உடல் நரம்புகளை இயக்கும் பேராற்றல் வாய்ந்ததாகும். உணர்ச்சிகளை வண்ணமுற வடித்துத் தரும் ஒலிநயம் பாட்டின் உயிர் போன்றது. பல்வேறு சந்தவின் பங்களைப் பாட்டில் புலப்படுத்தும் அரிய திறம் படைத்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன், மேலும் ஒலி நயத்திற்கு விரிந்து

இடங்கொடுப்பது விருத்தப் பாவாகும்; எனவே 'விருத்த மென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்றும், 'வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாறே' என்றும் கம்பநாடன் கற்றோரால் கவினுறப் போற்றப்படுகின்றான். சான்றாக ஓரிடத்தினைக் காண்போம். இராமன்மேல் கட்டுக் கடங்காத காதல்கொண்ட சூர்ப்பணகை இராமனை வசீகரிக்க எண்ணித் தன்னை வண்ணமுறப் புனைந்து அன்ன மென வருகின்ற அவள் நடையழகிற்கு ஏற்பவே பாட்டின் நடையும் செல்கின்றது.

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

—கம்ப. ஆரணிய. சூர்ப்பணகைப் படலம்: 31.

இப் பாட்டில் வல்லோசை குறைந்து மெல்லோசை மிகுந்த சொற்கள் பொருந்தி வருவதனைக் காணலாம். இது போன்றே பரதனுடைய சேனையினைத் தூரத்தே கண்ட குகன் கூற்றமெனச் சீற்றத்தால் கொதித்தெழுகிறான். அது பொழுது கம்பன் அவன் உணர்ச்சியினை வடிக்கும் பாட்டு உணர்ச்சிக்கேற்ற யாப்பமைந்து துலங்குகின்றது:

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ.

—கம்ப. அயோத்தியா. குகப்படலம்: 15.

ஓரிடத்தில் சொன்ன கருத்தினை நினைவுகூர்ந்து அதற் கேற்பப் பின்வரும் கவிதைகளைப் படைத்தல் கம்பனின் காவியப் புலமைக்கு மெருகேற்றுகின்றது. சீதையைத்

தீண்டாமல் பர்ணசாலேயோடு பெயர்த்துவந்த இராவணன் சீதையைத் தன் இதயமாம் சிறையில் வைத்தான் என்று கிஷ்கிந்தா காண்டத்தில் குறிப்பிட்டதனை மறவாது நினைவு கூர்ந்து, போர்க்களத்தே இராமன் விட்ட அம்பினுல் உடல் முழுதும் துளைக்கப்பெற்று இறந்து கிடக்கும் இராவணன் மார்பில் விழுந்து புரண்டு அழும் மண்டோதரியின் கூற்ருல் பின்வருமாறு குடுப்பிட்டுள்ளான் கம்பன்:

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிர்இருக்கும் இடம்நாடி இழைத்த வாருே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி.

—கம்ப. யுத்த காண்டம்.
மண்டோதரி புலம்புறு படலம்: 29.

அடுத்து, சகோதர நேய ஒருமைப்பாட்டினேச் சித்திரிப்பது இராமாயணமாகும். தசரதன் பெற்ற நான்கு மைந்தரோடு வேட்டுவ குலத்திலே பிறந்த கங்கையிரு கரையுடைய குகனும் சேர்ந்து ஐவராகி, பின் கிஷ்கிந்தையில் சுக்கிரீவனுடன் சேர்ந்து அறுவராகி, இறுதியில் இலங்கை வீடணனுடன் சேர்ந்து எழுவராகின்ற சிறப்பினே இராமாயணத்தில் கண்டு தெளியலாம்:

குகனெடும் ஐவர் ஆனேம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனெடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகமனர் காதல் ஐய, நின்னெடும் எழுவர் ஆனேம்;
புகலருங் கானந் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

—கம்ப. யுத்த காண்டம்
வீடணன் அடைக்கலப் படலம்: 143.

இறுதியாக, கம்பனின் நன்றிமறவா நல்லுணர்வினைக் காண்போம்:

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

—திருக்குறள்: 110.

என்றார் வள்ளுவர். அதன்படியே கம்பனும் தன்னை ஆதரித்த வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைத் தான் இயற்றிய இராமாயணத்தில் தக்க இடங்களில் போற்றிப் புகழ்கின்றான். கதையின் இறுதியில், இராமன் முடிசூட்டு விழா நடைபெறுகின்றது. அதுபோது சடையப்ப வள்ளலின் மரபில் வந்த பெரியவர் ஒருவர் திருமுடியினை எடுத்துத் தர, வசிட்ட முனிவர் இராமனுக்கு அம் முடியைப் புனைகின்றார் என்று கூறிக் கதையை முடிக்கின்றார் கம்பர்.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி பற்ற
விரிகடல் உலகம் ஏத்தும் வெண்ணெய்மன் சடையன்வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

—கம்ப. யுத்த காண்டம். திருமுடிசூட்டு படலம்: 16.

இவ்வாறு கம்பன் கட்டிய கலைக் கோயிலில் காவிய நலங்கள் பலவும் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கலாம்.

# 10. தமிழ் இலக்கியத்தில் பௌத்த சமயக் கருத்துக்கள்

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு

என்று பாடினார் பாரதியார். உலகில் அறம் குன்றி, மறம் தலைதூக்கும் பொழுதெல்லாம் நம் பாரத புண்ணிய பூமியிலே மகான்கள் பலர் அவதரித்துள்ளனர். அவர்கள் மக்களுக்கு அன்பு வழியினைக் காட்டி, அறநெறியினைப் புகட்டி, உலகு உய்யத் தாங்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இமயமலை அடிச்சாரலிலே இப்போதைய நேபாள நாட்டிலே கபிலவத்து என்னும் ஊர் இருந்தது. அவ்வூரினைத் தலை நகராகக் கொண்டு சுத்தோதனர் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அவர்க்கும் அவர்தம் அன்பு மனைவியார் மாயா தேவிக்கும் கி. மு. 563—ல் ஓர் ஆண் மகவு பிறந்தது. அக் குழவி பிறந்த நாளில் நாட்டில் பல நன்னிமித்தங்கள் தோன்றின. அசிதன் என்ற முனிவர், "மானிடராகிய மரத்தில் பல நூற்றாண்டுகட்கு ஒரு முறை மலரும் மலர் இக் குழந்தை; உமது குலப்பெருமையை என்னென்றுரைப்பேன்! இவன் துறவு பூண்டு, உலக ரட்சகனாக இருப்பான்" என்று மன்னர் சுத்தோதனரிடம் கூறினார். பிறந்த ஏழாம் நாளில் தாயார் மாயாதேவி மறைந்தாள். இச் செய்தியினை,

உலும்பினி வனத்துள் ஒண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுருமல்

ஆன்றேன் அவ்வழித் தோன்றினன் ஆதலின்
ஈன்றேள் ஏழ்நாள் இன்னுயிர் வைத்தாள்

என்று விம்பசாரகதை கூறுகின்றது. குழந்தை சிறு வயதிலேயே துறவுநிலை எய்தும் எனக் கேட்ட மன்னர் சுத்தோதனர், சித்தார்த்தரை உலகத் துன்பங்கள் ஒன்றும் அறியாதபடி வளர்த்து வந்தார். அவர்தம் பதினாருவது வயதில் அவர் மனம் கவர்ந்த யசோதரை என்னும் அரச குமாரியை மணம் செய்வித்தார். இருவர்தம் இல்லறப் பயனால் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக் குழந்தைக்கு இராகுலன் என்று பெயரிட்டனர். குழந்தை பிறந்த அன்றே சித்தார்த்தர் துறவு பூணுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் அமைந்து விட்டன.

சித்தார்த்தர் வயது முதிர்ந்த தொண்டு கிழவர், நோய் வாய்ப்பட்ட பிணியாளன், இறந்துபட்ட உடல் ஆகிய துன்பக் காட்சிகளை ஒருங்கே காண நேரிட்டது. அன்றே அவர் உலக வாழ்வின் நிலையாமையினையும், அளவற்ற துன்பத்தினையும் கண்டார். எனவே, உலகத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று மனங்கொண்டார். அதற்கு வழி, நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிதலே என முடிவுக்கு வந்தார். அன்று நள்ளிரவிலேயே தம் அழகிய மனைவியையும், அருமை மகனையும், தாய் தந்தையரையும், அரசபோகங்களையும் துச்சமெனை மதித்துத் துறந்து காட்டிற்குச் சென்றார்.

பல ஆண்டுகள் உடலை வருத்தித் தவங்கிடந்து, இறுதியாகப் போதி மரத்தின் அடியில் அமர்ந்து தியானத்தில் இருந்தபொழுது, பூரண ஞானம் பெற்றார். பூரண ஞான மெய்யுணர்வு பெற்ற சித்தார்த்தர் புத்தர் ஆனார். ஞான ஒளிபெற்றுப் பிறவித் துன்பத்தை யொழித்துப் பிறவாமையாகிய முத்தி நெறியினை அடைதலே உலக உயிர்கள் உய்யும் நெறி என உணர்ந்தார்.

தாம் உணர்ந்த உண்மைகளை நாடெங்கும் சென்று மக்களிடம் உபதேசிக்கத் தொடங்கினர். அவருக்கு முதலில் ஐந்து சீடர்கள் வாய்த்தனர். நாற்பத்தைந்து ஆண்டுகள் நாடெங்கும் சுற்றித் திரிந்து புத்தர் தாம் கண்ட உண்மைகளைப் பாமர மக்களிடம் போதித்து வெற்றிகண்டார். புத்தம், தருமம், சங்கம் என்னும் முப்பெரும் நிறுவனங்களைத் தோற்றுவித்தார். சாதி மத பேதம் பாராட்டாமல் மக்கள் மொழியாம் பாலி மொழியிலேயே உபதேசிக்கத் தொடங்கினர். கண்மூடித்தனமான கொள்கைகளைத் தகர்த்தெறிந்தார்.

அவருடைய தலையாய கொள்கைகள் ஆவன : இவ்வுலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் அழியக் கூடியவை; யாவும் நிலையற்றவை. மிகவும் நெருங்கியுள்ள பொருள்களினின்றும் நாம் நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும். அதுவே பேரின்பம் அடையும் வழி" என்பதாகும். இக் கருத்து,

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

—திருக்குறள்: 341.

என்ற குறட் கருத்தோடு ஒப்புமையுடையதாகும். இவ்வாறு புத்தர்பிரான் சொல்லிவிட்டுத் தமது எண்பதாவது வயதில்—அதாவது கி. மு. 483-ஆம் ஆண்டில் குசி என்னும் நகரத்தில் நிர்வாண மோட்சம் எய்தினர் அந்த நாள் வைசாக மாதத்தின் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய செவ்வாய்க்கிழமை என்பர். அந்த நாளை உலகெங்கிலும் உள்ள பௌத்தர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

புத்தரின் ஆயிரக்கணக்கான சீடர்கள் அவருடைய கொள்கைகளை நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பரப்பினர். அசோக சக்ரவர்த்தியின் காலத்தில் இலங்கை, பர்மா

முதலிய தூர தேசங்களிலும் புத்தமதம் பரவி நிலைத்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிற்கு வந்த யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் தமிழ் நாட்டில் புத்தமதம் பரவியிருந்த செய்தியினைக் குறிப்பிடுள்ளார்.

இனி, தமிழ் இலக்கியத்தில் புத்த சமயக் கொள்கைகள் எந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளன எனக் காண்போம். தமிழ் நூல்களில் மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழியம், சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், விம்பசார கதை முதலிய நூல்கள் பௌத்தர்களால் இயற்றப்பெற்ற நூல்களாகும். ஆனால், மணிமேகலை என்னும் காப்பியமும், வீரசோழியம் என்னும் இலக்கண நூலும் மட்டுமே இன்று இறந்துபடாமல் வாழ்கின்றன. எனவே, நாம் இவற்றையே புத்த சமயக் கொள்கைகளை அறிவதற்கு ஊடுருவிக் காண வேண்டியுளது. இளம்போதியார் என்ற சங்ககாலப் புலவர், பெயரால் பௌத்தராகக் காணப்படினும், அவர் எழுதியுள்ள பாடல்களில் பௌத்தசமயக் கருத்துக்கள் ஒன்றையும் காணமுடியவில்லை.

புத்தர் கூறியதாவது : "நான் விதைப்பது அன்பு; தூய பணிகளே அதனை வளப்படுத்தும் மழை; ஞானமும் அடக்கமுமே உழுபடைகள்." புத்தரிடம் காணப்படும் பெருஞ் சிறப்பு அவர், தாம் சொல்லிய வண்ணமே வாழ்ந்து காட்டியதாகும். கோமுகிப் பொய்கையிலிருந்து அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை அளவுகடந்த மகிழ்ச்சியுற்று,

> மாரனை வெல்லும் வீர நின்னடி
> தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
> பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
> துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி

என்று பலவாறு கூறிப் புத்த தேவரைத் தொழுதாள்,

மாறி மாறிச் சுழன்று பிறக்கும் பிறவிகள் பல உள என்பது புத்தரின் கொள்கையாகும். உலகமே துன்ப மயம்; அதிலிருந்து ஒருவன் விடுபடுவதே நிருவாணம். துக்கம், துக்க நிவாரணம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் இவை பிக்குகள் மேற்கொள்ள வேண்டிய நால்வகை வாய்மை களாகும்.

இதனை மணிமேகலையில்,

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது

என்று வரும் தொடர்களால் அறியலாம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். —திருக்குறள்: 10.

என்பதும்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. —திருக்குறள்: 350.

என்பதும் இதனையொத்த திருவள்ளுவர் கருத்துக்களாகும்.

மற்றுப் பற்றெனக் 'கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்

என்பது சுந்தரர் தேவாரம்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு

என்பது திருவாய்மொழி.

மணிமேகலையில் தேரவாத பௌத்தம் கூறப்படுகிறது. பௌத்த மதத்தில் இல்லறம் துறவறம் என்னும் இரண்டு அறங்களே உள்ளன. இல்லறத்தார் சாவக நோன்பிகள் எனப்படுவர். அவர்கள் மும்மணிகளை வணங்கிப் பஞ்ச சீலங்களைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். ஆனால், இல்லறத்தார் பிறவா நிலையாகிய நிர்வாண மோட்சம் அடைதல் இயலாது. துறவற வழி நின்றவர், மும்மணிகளை வணங்கிப் பத்துவகைச் சீலங்களைப் கடைப்பிடித்து நான்கு வாய்மைகளை மேற்கொண்டு, அஷ்டாங்க மார்க்கத்தில் நின்று, ஞானம், யோகம், ஆனுபானஸ்மிருதி முதலியவை களைச் செய்வார்களானால் பிறவா நிலையாகிய பேரின்பமாகிய நிர்வாண மோட்சத்தைப் பெறக்கூடும்.

பௌத்தர்களில் இல்லறத்தாரும், துறவறத்தாரும் புத்தம், தர்மம், சங்கம் என்றும் மும்மணிகளைச் சரணம் (அடைக்கலம்) அடைய வேண்டும். இதற்குத் திரி சரணம் என்பது பெயர்.

**புத்தம் சரணம் கச்சாமி**

*(புத்தனிடம் அடைக்கலம் புகுகிறேன்.)*

**தர்மம் சரணம் கச்சாமி**

*(தர்மத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்.)*

**சங்கம் சரணம் கச்சாமி**

*(சங்கத்தினிடம் அடைக்கலம் புகுகிறேன்)*

இதை மூன்று முறை சொல்ல வேண்டும். அதாவது மும்மணியை மூன்று முறை வணங்க வேண்டும். "முத்திற மணியை மும்மையின் வணங்கி" என்பது மணிமேகலைத் தொடராகும்.

அஷ்டாங்க மார்க்கமாவன:

(1) நற்காட்சி. (2) நற்கருத்து. (3) நல்வாய்மை' (4) நற்செய்கை. (5) நல்வாழ்க்கை. (6) நன்முயற்சி. (7) நற்கடைப்பிடி. (8) நல்லமைதி என்பனவாகும்.

பஞ்ச சீலங்களாவன;

(1) எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல் அன்பு பாராட்டுதல். (2) பிறர் பொருளில் இச்சை வையாமை. (3) கற்பு நெறியில் சிற்றின்பம் துய்த்தல். (4) பொய் பேசாமல் உண்மை பேசுதல். (5) மயக்கத்தையும் சோம்பலையும் தரும் மது வகைகளை உட்கொள்ளாமை என்பனவாகும்.

இவ் வைந்தும் இல்லறத்தார்க்கு உரியன. இவற்றோடு, இரவுவேளைகளில் தூய்மையான உணவினை மிதமாக உண்ணல், பூ சந்தனம் முதலிய வாசனைப்பொருள்களை நுகராமை, பஞ்சணையை நீக்கித் தரையில் பாய்மேல் படுத்து உறங்குதல் மூன்றும் சேர்ந்த எட்டும் 'அஷ்டசீலங்கள்' எனப்படும். இவற்றின் வழி, இல்லறத்தாரின் சற்று உயர்நிலை அடைந்தவர் ஒழுகுவர்.

இவை எட்டோடு இசைப்பாட்டு, கூத்து, நாடகம் முதலிய காட்சிகளைக் காணுதிருத்தல், பொன், வெள்ளி முதலியவைகளைத் தொடாதிருத்தல் ஆகிய இரண்டும் சேர்ந்து 'தசசீலம்' என வழங்கப்படும். தசசீலம் துறவிகள் ஒழுக வேண்டிய ஒழுக்கமாகும்.

பாலி மொழியில் உள்ள பிடக நூல்களில் கூறியுள்ள பௌத்தக் கருத்துக்களை அப்படியே தமிழில் மணிமேகலையில்—குறிப்பாக மணிமேகலையின் இறுதிக் காதையான 'பவத்திற மறுகெனப் பாவை நோற்ற காதை' யில் நூலாசிரியர் சாத்தனுர் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

''மக்கள் யாக்கை ஊழ்வினை காரணமாகத் தோன்று கிறது; மேலும் வினைக்குக் காரணமாவது. மேலே அழகு செய்யும் பொருள்கள் நீங்கிடில் புலால் நாற்றம் வீசும் உடம்பு புறத்தே இடப்படுவது. முதிர்ந்து அழியும் தன் மைத்து. கொடிய நோய்கட்கு இருப்பிடமாவது. பற்றுகள் யாவும் பொருந்தும் இடம். குற்றங்கள் பொதிந்த ஒரு பாண்டம். கோபத்தின் உறைவிடம். கவலைகட்கு இருப் பிடம்'' என்ற உடம்பைப் பற்றிய பௌத்தர்களின் கொள்கையினை,

விளையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிது

—மணிமேகலை: 4: 118—120.

எனவரும் மணிமேகலை அடிகளால் அறியலாம்.

இதனையே குண்டலகேசி ஆசிரியர் நாதகுத்தனார்.

பாலையாம் தன்மை செத்தும்
பாலனும் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும்இவ் வியல்பு மின்னே
மேல்வரு முப்பு மாகி
நாளுநாட் சாகின் றேமால்
நமக்குநாம் அழாத தென்னே

என்று நயம்படக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, ஊழ்வினையில் நம்பிக்கையுடையவர்கள் பௌத்தர்கள். இதனை,

பிணங்குநூன் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்தது

என்று மணிமேகலை மொழிகின்றது. கருமத்தின் விளைவிலும் பௌத்தர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

மறஞ்செய் துளமெனின் வல்வினை யொழியாது
ஆங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறு முயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும்

என்பது சாத்தனார் வாக்கு.

உலக உயிர்கள் அனைத்தையும் கூற்றுவக் கடவுளாகிய இயமன் விட்டுவைப்பதில்லை: அவன் தவசிகள் என்றும், பிள்ளைபெற்ற இளம் பெண்கள் என்றும், பச்சிளம் பசலைகள் என்றும், கட்டிளங்காளைகள் என்றும் அருட்கண் நோக்குவதில்லை. இதனை அறியாமல் செல்வ மயக்கில், கள் மயக்கத்தில் ஆழ்ந்து நல்லற நெறியினைத் துறந்து மக்கள் பாழ்பட்டுப் போகின்றார்களே என்று பதைபதைத்துக் கூறுகின்றார் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். நெஞ்சைத் தொட்டு உலுக்கும் அப் பகுதி வருமாறு:

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ?

மணி. 6: 97—104.

உலகத்தில் கொடிய துன்பம் பசித் துன்பமாகும். அதனைத் தீர்ப்போர் தம் பெருமை சொல்லில் அடங்காது என்பது மணிமேகலையின் காப்பியத் தலைவி மணிமேகலை, தீவதிலகை வாயிலாக அறிகின்ற செய்தியாகும்.

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
..................................................
பசிப்பிணி யென்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது.

—மணி. 11: 76-81.

'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளராம்' புத்தர் பெருமான் கள்ளும் புலாலும் தவிர்க்கப்பட வேண்டுமென்று உபதேசித்தார்.

கள்ளடு குழிமுடை கழிசியும் நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த

நாகர் நாட்டின் குருமகனைக் கண்ட தமிழ்நாட்டுச் சாதுவன்,

மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகு அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்

என்று புத்திகூறித் திருத்துகின்றான்.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது

என்று புத்த தர்மத்தை விசாகை வாயிலாக உணர்த்துகின்றார் சாத்தனார்.

இவ்வண்ணமாகப் பௌத்த சமயக் கருத்துக்கள் பலவும் மணிமேகலையில் பொருத்தமுறப் பொருந்தி வந்துள்ளன. இக் கட்டுரையினை குண்டலகேசி எனும் அழிந்துபோன பெருங்காப்பிய நூலில் வந்துள்ள புத்ததேவ வணக்கச் செய்யுள்கொண்டு முடிப்பது பொருத்தமாகும்:

முன்றான் பெருமைக்கண்
நின்றான் முடிவெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமே
மொழிந்தான் தனக்கென்று
ஒன்றானும் உள்ளான் பிறர்க்கே
உறுதிக் குழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள்
சரணங்கள் அன்றே.

# 11. பாரதியின் பாப்பாப் பாட்டு

'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று நாட்டு மக்கள் நலமுடன் பாராட்டும் தேசியகவி பாரதியார், பாமரர் முதல் பாவலர் வரை, பாப்பா முதல் பெரியோர் வரை, தொண்டன் முதல் தலைவர் வரை, அடிமை முதல் ஆண்டான்வரை, காமுகன் முதல் காதலன் வரையுள்ள பலரைக் குறித்தும் பலபடப் பாடல்கள் புனைந்துள்ளார். 'அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை என்று டாக்டர் ஜான்சன், பேரெழுத்தாளராம் கோல்டுஸ் மித்தைப் பாராட்டியது போல நாமும் பாரதியாரைப் பாராட்டத் தகும். இது மிகைக் கூற்று ஆகாது. இது குறித்தே இக்காலத் தமிழ் அறிஞர் ஒருவர், இந்நூற்றுண்டினைப் 'பாரதியுகம்' என்று பொருத்தமுறக் கூறிப் போந்தார் தமிழ் இலக்கிய வளர்ச்சியை—குறிப்பாகக் கவிதை வளர்ச்சியைப் பொறுத்தவரையில், பாரதியார் இந்நூற்றுண்டில் தலைசிறந்த இடத்தினைப் பெறுகின்றுர். பழைய மரபிலே வேரூன்றிப் புதியவழியிலே கிளைத்துப் படர்ந்த கற்பனையினைப் பாரதியார் பாடல்களில் நாம் காணலாம். பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்ப் பாரதியின் பாடல்கள் துலங்குகின்றன. பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தவர் பாரதியே யாவர்; 'முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்' அமைந்து, அழகுநலஞ் சொட்டும் கவினுறு கவிதைகள் பாரதியின் பாடல்களாகும். செஞ்சொற்கள் விரவி நின்று பொருள் நயம் கெழுமி நிற்பன அவர்தம் கவிதைகளே. பாரதியாரின் எழுதுகோல் சமுதாயம், சமயம், அரசியல், மொழி, நாடு,

பழங்காவியம் ஆகிய பல துறைகளிலும் சென்றது. ஆயினும், அவர் 'பாப்பா' வுக்குப் பாடிய 'பாப்பாப் பாட்டே' ஈண்டு இக் கட்டுரையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

பாட்டின் தொடக்கத்திலேயே 'ஓடி விளையாடு பாப்பா! —நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று தொடங்குகின்றார். சோம்பலின்றிச் சுறுசுறுப்பாகக் குழந்தைகள் கூடி மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி அகமகிழ்ந்து விளையாட வேண்டிய அவசியத்தினைக் கூறுகின்றார். ஆங்கிலத்தில் 'குழந்தைகள் பெரியவர்களைக் காட்டிலும் அறிவாளிகள் (Children are wiser than their elders) என்றொரு மொழி உண்டு. எனவே, பெரியவர்கள்போல் பிணங்கி, பிளவுபட்டு, பிரிந்து நிற்காமல் ஒன்றாகக்கூடி விளையாடவேண்டிய பண்பினை முதற்கண் கூறி, அடுத்து 'ஒரு குழந்தையை வையாதே பாப்பா' என்று அறிவுரை கூறுகின்றார். ஒருவரை யொருவர் வைகின்ற—ஏசுகின்ற பண்பால் வேற்றுமை வளர்ந்து, ஒற்றுமை சீர்குலைந்து, நட்பும் பாழ்பட்டு, நல்ல மனமும் திரிகின்ற தன்மையினைப் பார்க்கிறோம். எனவே, ஏச்சற்ற இனிய பண்பினைப் பாரதியார் வலியுறுத்துகின்றார்.

சின்னஞ் சிறு குருவி வானத்திலே எவ்விதக் கவலையுமின்றிச் சிறகடித்துப் பறக்கின்றது. மனங்கவரும் வண்ணப் பறவைகள் இன்பவாழ்வு வாழ்கின்றன. அதைப் போலவே குழந்தைகளும் நெஞ்சில் எவ்விதக் கவலையுமின்றி மகிழ்ச்சியுடனும் மலர்ச்சியுடனும் வாழவேண்டும் என்று கூறி, கொத்தித் திரியும் கோழியுடன் கூடி விளையாடி, எத்தித் திருடும் காக்கைக்கும் இரக்கங்காட்ட வேண்டும் என்று எடுத்து மொழிகின்றார். பாரதியின் இக்கூற்று, கீதையில் கண்ணன் 'பகைவனுக்கும் அருளவேண்டிய பண்பினை' வலியுறுத்தியிருப்பதனோடு இணைத்துப் பார்க்கத் தக்கது.

பாலைப் பொழிந்து தரும் பசுவும், வாலைக் குழைத்து வரும் நாயும் நண்பர்கள் என்று கூறி, வண்டி இழுக்கும் நல்ல குதிரையையும், நெல் வயலில் உழுதுவரும் மாட்டையும்,

அண்டிப் பிழைக்கும் ஆட்டையும், ஆதரிக்க வேண்டும் என்று அடுத்து அறிவுறுத்துகின்றார்.

பாப்பா, ஒரு நாளில் என்னென்ன கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதை முறைப்படி, வரிசைப்படுத்திச் சொல்லுகின்றார் பாரதியார்:

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!

காலையில் படிப்பும் பாட்டும், மாலையில் விளையாட்டும் உடலுக்கும் உயிருக்கும் வளம் சேர்ப்பன. பொய்யும் புறமும் சொல்லாத நற்பண்பு வாழ்விற்கு நலம் சேர்ப்பது; தெய்வ நம்பிக்கை எந்தத் தீங்கினையும் எற்றி எறியும் வன்மையை அளிக்கவல்லது. இதனையடுத்து வாழ்வில் நன்மையுற நடந்து கொள்ளவேண்டிய வழி முறைகளைக் கூறுகின்றார் பாரதியார். பாதகஞ் செய்பவரைக் கண்டு பயங்கொள்ளாமல், அவர்களை மோதி மிதித்துவிட்டு, துன்பம் நெருங்கி வந்தபோது சோர்ந்து விடாமல், அன்புமிகுந்த தெய்வம் துன்பம் அத்தனையும் போக்கிவிடும் என்ற நம்பிக்கை ஒளியோடு வாழ்வில் முன்னேற வேண்டும் என்கிறார். "அலைகள் ஓயாமல் மோதும் கற்பாறை போன்று இரு. அது தன்னைச் சூழ்ந்துள்ள தண்ணீரின் வேகத்தை அடக்கிவிடுவதுபோல உன் மனமும் துன்பம் வந்துற்றபொழுது உறுதியுடன் இருக்குமானால் துன்பம் அனைத்தும் தன்னாலே மறைந்துவிடும்" என்று கூறினார் பிறநாட்டு அறிஞர் மார்க் ஒளரேலியன். இதனையே பாரதியார் பிறிதோரிடத்தில்,

துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டிநிற்போம் யாவும் அவள் தருவாள்

என்று கூறியுள்ளார். எனவே இன்பம் வந்துற்றபொழுது இறுமாந்து விடாமல், துன்பம் வந்துற்ற காலையில் சோர்ந்து

விடாமல் இருந்தால் வாழ்வு நலமுடன் திகழும் என்ற வாழ்க்கையின் அடிப்படையான உண்மையினை உணர்த்தி விடுகின்றார் பாரதியார்.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் இல்லையேல் மக்கள் எத்துணை நலம் பெற்றிருப்பினும் பயனேதும் விளையாது. அதனால் நாட்டுப்பற்றும் தாய்மொழிப் பற்றும் நிறைந்த பாரதியார் பாப்பாவுக்கு அவற்றை மனங்கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கின்றார்:

**தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்**
**தாயென்று கும்பிடடி பாப்பா;**
**அமிழ்தில் இனியதடி பாப்பா!—நம்**
**ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!**

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்**
**தொழுது படித்திடடி பாப்பா!**
**செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்**
**தினமும் புகழ்ந்திடடி பாப்பா!**

அமிழ்தினும் இனியதான தமிழ்த் திருநாட்டையும், சொல்லில் உயர்வான தமிழ் மொழியினையும் இனிது எடுத்தியம்பி, தமிழைத் தொழுது படித்திடவேண்டும் என்று மிக்க ஆர்வத்துடனும் பக்தியுடனும் கூறுகின்றார் பாரதியார். சாதிகள் இல்லாத சமுதாயத்தின் உயர்வைச் சொல்லி, 'நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு' நிறைய உடையவர்கள் தாம் மேலோர்கள் என்று பாப்பாவுக்கு அறிவுறுத்து கின்றார்.

இறுதியாக, மனிதன் உலகின் எப் பகுதியில் இருந்தாலும் வாழ்ந்தாலும் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத செயல்களைக் குறிப்பிட்டுப் 'பாப்பாப் பாட்டினை' முடிக்கிறார் பாரதியார்:

உயிர்களிடத்தில் அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!

மேலும்,

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு
—திருக்குறள் : 261.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்
—திருக்குறள் : 2.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்
—திருக்குறள் : 666

என்ற வள்ளுவர் நெறியில் பாரதியார் பாப்பாவிற்கு அறிவுரை கூறித் தம் பாப்பாப் பாட்டை நலஞ்சிறக்க முடிக்கின்ருர் என்பது மகிழ்தற்குரியது.

பாரதியாரின் 'பாப்பாப் பாட்டில்' வாழ்வின் உண்மைகள் தெளிவாக வற்புறுத்தப்படுகின்றன. பாப்பாவிற்கு நல்வாழ்வின் நெறிமுறைகளைக் கூறி நல்வழி காட்டுபவர் பாரதி ஆவர்.

# 12. பாரதியார் வாழ்வு

பாரதியார் தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றிய இணையிலாக் கவிஞர். அவர் பிறந்த காலம் 'இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர்' காலம். 'காலத்திற் கேற்பக் கவிஞன் தோன்றுவான்' என்ற மேலைநாட்டுக் கவிஞர் ஒருவரின் கூற்றிற் கிணங்கப் பாரதி தோன்றினார். அவர் பிறப்பதற்கு முன்னாலே, அதற்கு அண்மைக் காலத்திலே கவிதை—தமிழ்க் கவிதை—இலக்கியம்—பழைய பிடியிலே—எல்லையிலே சிக்கித் திணறியது. பழங் கவிதைகளின் செறிவும் அதில் இல்லை; இடைக்காலக் கவிதைகளின் மிடுக்கும் இல்லை. இப்படிப்பட்ட இடர்ப்பாடுற்ற காலத்தில் தோன்றிப் பழமையில் வேர் கொண்டு புதுமையைப் புகுத்திப் புதுநெறி காட்டிய புலவன் பாரதி. அவர் தோற்றுவித்த அப் புதுநெறியே இன்றும் தொடர்ந்து வளர்ந்துவரக் காண்கின்றோம்.

திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டையபுரத்தில் கி. பி. 1882ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் நம் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தோன்றினார். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் வள்ளுவர் வாக்குக்கு ஒள்ளிய உருவாய் எதிர் காலத்திலே துலங்கினார். அவர் தந்தையார் சின்னசாமி ஐயரும், தாயார் இலக்குமி அம்மையாரும் அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றினர். பாரதியாருக்கு ஐந்தாண்டு நிறைவதற்கு முன்னாலேயே தாயார் இயற்கை எய்தினார். எனவே தாயன்பையும் உடன் சேர்த்துத் தந்தையே செலுத்தினார். இளமையில் தந்தை

யாரே தனயனுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினார். ஆயினும் பாரதியாருக்குத் தமிழ் இலக்கியத்தின்பால் தடைபடாத ஆர்வம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தில் பாரதியாருக்கு ஈடுபாடு மிகுதி. அவர் கவிதை உள்ளம் இயற்கை அன்னையின் இணையற்ற எழிலிலே தோய்ந்து தோய்ந்து நெஞ்சம் நெக்குருகி நெகிழ்ந்தது. பன்முறை 'தன்னை மறந்த லயந்தனிலே' இருந்திருக்கின்றார் பாரதியார். எட்டையபுரம் மன்னரிடம் தந்தையார் சின்னசாமி ஐயர் அலுவல் பார்த்தமையால், பாரதியார் அடிக்கடி தம்முடைய கவிதைகளை மன்னரிடம் பாடிக் காட்டுவார். மன்னர் மகிழ்ந்து இத்தகு மைந்தனைப் பெற்ற தந்தையைப் பாராட்டினார். ஆயின், அக்காலக் கல்வியிலே பாரதியாரின் மனம் ஈடுபடவில்லை.

தமிழ்ச்சுவை அறியாது மயங்கினர் நாட்டு மக்கள். இதனைப் பாரதியாரே பின்வருமாறு இடித்துரைக்கின்றார்:

கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர், பின்
    கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்;
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
    ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்;
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்,
    வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்;
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
    சொல்லு வாரெட் டுணைப்பயன் கண்டிலார்.

—சுயசரிதை : 32.

ஆங்கிலக் கல்வி மோகத்தாலே நாட்டு மக்கள் கம்பனையும் காளிதாசனையும் மறந்து, சேரன் தம்பி இசைத்த சிலம்பையும் தெய்வ வள்ளுவன் தந்த வான்மறையையும் மறந்து, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என வாழ்கின்றனரே என்று உள்ளம் எரிந்து எரிமலையாகக் குமுறுகின்றார் பாரதியார்.

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே?

—சுயசரிதை : 26

ஆயினும் அந்த அலங்கோலத்திற் கேற்பவே பாரதியாரின் தந்தையாரும் தம் மைந்தனை ஆங்கிலக் கல்வி கற்கவே அனுப்பினார். பாரதியின் பைந்தமிழ்ப் பாட்டிசைக்கும் பாநல உள்ளமோவெனில் நொய்ந்தது; அறிவோ வெனில் 'வாரித் துரும்பென' அலைந்து நைந்தது; இந்தப் போராட்டத்தினாலே ஏற்பட்ட பலனைப் பாரதியாரே பின்வருமாறு கூறுகின்றார்.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது.
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன;
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.

—சுயசரிதை: 29.

இவ்வாறு பொருளைப் பெருக்கவே உதவும் புன்மைக் கல்வியினைப் பாரதியார் வன்மையுறக் கண்டிக்கிறார். இவையெல்லாம் அவர் 'சுயசரிதை'ப் பகுதியிலே நாம் காணும் கருத்துக்களாகும். அக்காலக் கல்வியின் சீர்கேட்டினையும், நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் இனப்பற்றும்

இன்றி மக்கள் அடிமை ஆங்கிலக் கல்வி மோகத்தில் ஆழ்ந்து போலியுணர்வும், பொருந்தா நடைமுறைகளும், திருந்தா வாழ்வும் கொண்டு திரிந்து, செல்லரித்துச் சீர்குன்றிய வாழ்வு நடாத்தியதனையும் பற்றிப் பாடும்பொழுது, பாரதியார் உணர்ச்சியலைகளின் உந்தலிலே நின்று கவிதை வெறி பிடித்துப் பாடுகின்றார்.

பாரதியார் பன்னிரண்டாவது வயதை அடைகின்ற நேரத்திலே, அவருக்குத் திருமணம் செய்விக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் நடந்தன. வள்ளுவத்தின் மாண்புணர்ந்த பாரதியாரும் தந்தையாரின் கூற்றுக்கு ஒப்புக்கொண்டு செல்லம்மாள் என்னும் அருங்குண நங்கையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். ஆனல், திருமணம் நிகழ்ந்த மறு ஆண்டிலேயே பாரதியார் தம் அருமைத் தந்தையார் சின்னசாமி ஐயர் இறைவன் திருவடி நீழல் எய்தினர். தந்தை மறைவுக்குப் பின்னர் வறுமையின் வாட்டம் பாரதியாரின் வாழ்வைப் பெருமளவு பாதித்தது.

இதனைப் பாரதியாரே தம் சய சரிதையில்,

தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது;
தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர்;
சிந்தை யில்தெளி வில்லை: உடலினில்
திறனு மில்லை; உரனுளத் தில்லையால்;
மந்தர் பாற்பொருள் போக்கிப் பயின்றதாம்.
மடமைக் கல்வியில் மண்ணும் பயனிலை.
எந்த மார்க்கமும் தோற்றில தென்செய்கேன்?
ஏன்பி றந்தனன் இத்துயர் நாட்டிலே?

—சுயசரிதை: 46.

என்று வருத்தமுற்று குறிக்ப்பிட்டுள்ளார்.

இதனால் கங்கைக் கரைக்கண் அமைந்துள்ள புனிதமான நகராகிய காசியில் தம் அத்தை குப்பம்மாள் வீட்டில் சென்று தங்கினார். அத்தை கணவர் கிருஷ்ணசிவன் அறப்பணிகளிலே கருத்தூன்றி நின்றவர்; நல்ல நெஞ்சம் வாய்ந்தவர். கல்விச் செல்வத்தின் மேன்மையை உணர்ந்திருந்த அவர், பாரதியாரைக் கல்லூரியில் இந்தியும் வடமொழியும் பயின்றுவர ஏற்பாடு செய்தார். பாரதியாரும் நன்முறையிலே படித்து வந்தார்! ஓய்வு நேரங்களில் கங்கைக் கரையின் கவினார்ந்த காட்சிகளில் ஈடுபட்டுத் தம்மை மறந்து நிற்பார்; படகில் ஏறி உலாவச் சென்று வருவார். கங்கைக் கரை வாழ்வு பாரதியாரின் கவிதை உள்ளத்திற்கு மெருகு தந்தது.

1902 ஆம் ஆண்டில் பாரதியார் காசிமாநகருக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு எட்டையபுரத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தார். எட்டையபுர மன்னர் பாரதியார்மீது கொண்ட ஆழ்ந்த பற்றுக் காரணமாகத் தம் அரண்மனையில் ஆசிரியத் தொண்டு செய்யும்படி நியமித்தார். தமக்கு ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் ஷெல்லி, ஷேக்ஸ்பியர். கீட்ஸ், பைரன் முதலானோர் கவிதைகளை முழு ஈடுபாட்டுடன் பயின்று அதில் தாம் கண்டு சுவைத்த நற்பகுதிகளைத் தமிழாக்கம் செய்து 'ஷெல்லிதாசன்' என்ற புனைபெயரில் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார்.

ஒருசமயம் எட்டையபுர மன்னரோடு பாரதியார் டிசம்பர் விழாவிற்குச் சென்னை வந்தார். சென்னை வரும் பொழுது பாரதியார் மனைவியார் செல்லம்மாள் தமக்கு நல்ல புடவைகள் வாங்கி வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பாரதியார் இரண்டு வண்டி மூட்டைகள் நிறையப் பொருள்கள் வாங்கிச் சென்றிருந்தார். ஆனால், செல்லம்மாள் பிரித்துப் பார்த்தபொழுது, அவை அவ்வளவும் சங்கத் தொகை நூல்களாகவும், ஆங்கில ஏடுகளாகவும் இருந்தன. இடையிலே தம் மனைவியார் ஆசையுடன் கேட்ட புடவை யொன்றும் இருந்தது. அப்பொழுதும்

பாரதியார் 'அழியும் பொருளைக் கொடுத்து அழியாச் செல்வுத்தைக் கொணர்ந்தேன்' என்று ஆழ்ந்த கருத்துப்படக் கூறினாராம்.

பின்னர், பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராகத் தொண்டாற்றினார். அதன் பிறகு சென்னைக்கு வந்து சுப்பிரமணிய ஐயர் நடத்திய 'சுதேச மித்திரன்' செய்தித் தாளில் துணை ஆசிரியராகத் தொண்டாற்றினார். அப் பத்திரிகையில், விடுதலை வேட்கை கொள்ளாமல் அடிமை மோகத்தில் ஆழ்ந்து கிடந்த திறமில்லா மக்களைத் தாக்கி எழுதினார்; அவர்களைத் தட்டிச் சுதந்திரக் கனலை எழுப்பினார். அவர்தம் பாடல்களில் வீரம், அவலம், நகை முதலிய சுவைகள் பின்னிப் பிணைந்திருந்தன. இக் காலத்தேதான் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பாரதியாரோடு தொடர்புகொண்டு அரிய நண்பரானார் என்பது குறிப்பிடத் தக்கது.

1906 ஆம் ஆண்டில் காசியில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு பாரதியார் வாழ்வில் ஒரு புதுத் திருப்பமாய் அமைந்தது. தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்ற அம் மாநாட்டிலேதான் 'சுயராஜ்யம்' என்ற சொல்லே பிறந்தது. அம் மாநாட்டிலிருந்து நேரே கல்கத்தா சென்று விவேகாநந்தரின் மாணவியரான நிவேதா தேவியைச் சந்தித்துப் பேசி, அவர் கூறிய அறவுரையால் பெண்ணின் பெரும் பண்புகளை உணர்ந்தார். பெண்ணின் உயர்வுகருதிப் பாடும் படியான நோக்கம் இவர் தொடர்பினாலேயே பாரதியார் பெற்றார் என்று கூறலாம்.

1907 ஆம் ஆண்டில் 'இந்தியா' பத்திரிகை வெளிவந்தது. இக்காலத்திலெல்லாம் பாரதியாரின் சென்னைக் கடற்கரைப் பேச்சுச் சிறப்புடையதாகத் துலங்கியது. பாரதியார் தீவிர வாதி. மிதவாதிகளின் கொள்கைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. திலகர் கட்சியினைப் பாரதியார் ஆதரிக்கவும், அதனால் திலகரைப் புகழ்ந்து பாரதியார் 'வாழ்க திலகன் நாமம்' என்ற தலைப்பில்,

துன்பமென்னும் கடலை கடக்குந்
தோணி யவன்பெயர்
சோர்வென்னும் பேயை யோட்டுஞ்
சூழ்ச்சி யவன்பெயர்
அன்பெனுந்தேன் ஊறித் ததும்பும்
புதுமலர் அவன் பெயர்
ஆண்மையென்னும் பொருளைக் காட்டும்
அறிகுறி யவன் பெயர்

என்று பாடியுள்ளமையும் காண்க.

'சென்னை ஜனசங்கம்' என்ற சங்கமும், 'பாரத பந்தர்' என்ற பண்டகசாலை ஒன்றும் பாரதியாரால் சென்னையில் தொடங்கப் பெற்றன. ஆனால், இவை நன்முறையில் செயற் படவில்லை.

'இந்தியா' பத்திரிகை ஊர்கள் தோறும் சென்று உலாவி வந்தது. அரசாங்கத்தார் தம் அடக்குமுறையை ஏவினர். அது பொழுதே வ. உ. சி., சுப்பிரமணிய சிவா முதலானோர் தூத்துக்குடிக் கலகம் காரணமாகக் குற்றஞ் சாட்டப் பெற்றுச் சிறையில் வைக்கப்பட்டனர். தன் மீதும் ஒரு வாரண்டு உள்ளது என்பதைத் தெரிந்து கொண்ட பாரதியார், எங்கே தம்முடைய இணையற்ற பத்திரிகைத் தொண்டிற்குப் பழுது ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி, அப் பணியினை எப்பாடு பட்டாவது நடத்தினால்தான் நாட்டு மக்களை அடிமை உணர்விலிருந்து தட்டி யெழுப்பலாம் என்று முடிவுசெய்து, குடும்பத்தைத் துறந்து, இரவோடிர வாகப் புதுவை மாநகர் சென்றடைந்தார். அங்குப் பல இன்னல்களுக்குப் பாரதியார் ஆளானார். புதிய இடமும் சூழ் நிலையும் ஒரு புறம்; போலீஸ் தொல்லை பிறிதொரு புறம்; பொருளிலாத் துன்பம் மற்றொரு புறம். இவ்வளவும் பாரதியார் துன்பத்தினைப் பெருக்குவித்தன. இதனிடையில் 'இந்தியா' பத்திரிகையையும் எவ்வாறோ நடத்திவந்தார்.

இவ்வேளையில் நாட்டின் நல்விடுதலைக்குப் போாரடிக் குற்றஞ் சாட்டப்பெற்ற பாபு அரவிந்த கோஷ் புதுவை நகர் வந்து சேர்ந்தார். அவர்தம் தொடர்பு பாரதியாருக்குப் பலவிதத் திலும் நன்மை அளித்தது. அடிமைத் தளையை அகற்றி யெறிய வேண்டுமென்று பாடுபட்ட தென்னாட்டு வீர இளைஞர் திலகங்களும் புதுவை நகரைப் புத்தார்வத்தோடு நெருங்கினர். எனவே, புதுச்சேரி, விடுதலைப் பரணி முழக்கும் பாசறையாக ஆனது; சுதந்திர வீரர்களின் தாயகமாயிற்று. செந்தமிழ் இன்பத்தில் சிறக்கத் திளைத்த செம்மல் வ. வே. சு. அய்யர் அவர்களும் புதுவையில் குடியேறினர். இதே நேரத் தில் 'இந்தியா' பத்திரிகை நின்று போய், அதன் பின்னர்க் 'கர்மயோகி' என்ற பத்திரிகை தொடங்கப் பெற்று, அதுவும் நின்று போய்விட்டது. ஆயினும், பாரதியார் புதுச்சேரியில் தங்கியிருந்த நாட்களில் பெருந் தொல்லைக்கு உள்ளாகியிருந் தாலும், பிரெஞ்சு மொழிப் புலமை பெற்றார். கவிதைகள் பலவற்றை—குறிப்பாகப் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு முதலியனவற்றை அங்கேயே எழுதினர். 'எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்' என்பது பாரதியார் கூற்றாகும்.

1914-15 ஆம் ஆண்டுகளில் 'சுதேச மித்திரன்' பத்திரிகையை நடத்திய திரு. அரங்கசாமி ஐயங்கார் தம் பத்திரிகைக்குப் பாரதியார், வேண்டிய கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினல், திங்கள் ஊதியம் தருவது என்று அறிவித்திருந்தார். இவ்வாய்ப்பை நன்கு பயன் படுத்திக் கொண்டு நகைச் சுவை மிளிரும் சிறு கதைகளையும், அறிவாராய்ச்சிக்குத் துணை புரியும் கட்டுரைகளையும், இனிமை பொங்கும் இன்னிசைத் தீம்பாடல்களையும் பாரதியார் எழுதிக் குவித்தார். இதனால் அவர்தம் செல்வ வளமும் உயர்ந்தது. நாட்டின் நல்வாழ்விற்காக—விடுதலைக் காகப் பாடுபட்ட காங்கிரஸ் நிறுவனத்தின் ஐம்பது ஆண்டு வரலாற்றினைப் பாரதியார், தொடர்ந்து 'சுதேச மித்திரனில்' எழுதிவந்தார். வங்காள அறிஞர்—தாவர சாத்திரத்துறை

வல்லுநர் —ஜகதீச சந்திர போஸ் எழுதியிருந்த தாவர நூலினைத் தமிழில் 'ஜீவ வாக்கு' என்ற தலையங்கத்துடன் வெளியிட்டமை பாரதியாரின் மொழிபெயர்க்கும் ஆற்றலைக் காட்டும்.

புதுச்சேரி வாழ்வு பாரதியாருக்கு மெல்லக் கசந்தது. தம் சொந்த ஊரையும் நண்பர்களையும் காணவேண்டும் என்ற வேட்கை மிகுந்தது. 1919 ஆம் ஆண்டு தம் மனைவியுடன் புதுவையை விட்டுக் கிளம்பிக் கடலூர் வந்தார். போலீஸ் அதிகாரிகள் அங்கே அவரைக் கைது செய்தனர்; சின்னாட்கள் கழித்து விடுதலை செய்தனர். சென்னை வந்து சேர்ந்த பாரதியாருக்குச் சில ஊர்களில் மட்டுமே வசிக்க வேண்டும் என்ற அரசினர் ஆணை பிறந்தது. இதனால், தம் மனைவியின் சொந்த ஊரான கடயம் கிராமத்திற்குச் சென்று சில காலம் வாழ்ந்தார். அங்கே ஊர் மக்களிடம் சமத்துவ அன்பு காட்டி வாழ்ந்தார். இது வைதிக நோக்குடையோருக்கு வெறுப்பை மூட்டியது.

பின்னர், பாரதியார் எட்டையபுரம் சென்று தங்கினார். பழகிய இடங்களையும் பழைய நண்பர்களையும் நெடுநாட்களுக்குப் பிறகு பார்த்ததில் பாரதியாருக்குப் பெருமகிழ்வு ஏற்பட்டது. இதன் பின்னர்ப் பாரதியார் ஆழ்வார்கள் பாடல் பெற்ற அருந்தலமாகிய திருவல்லிக்கேணியிலே வந்து தங்கி வாழத் தொடங்கினார். நாள்தோறும் பார்த்தசாரதி திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு ஆற்றிவருவது பாரதியார் வழக்கம். அல்லிக்கேணி அழகனை ஆராதித்த பிறகு, பிரசாதப் பொருள்களாகிய பழம், தேங்காய் முதலியனவற்றைக் கோயில் யானைக்குக் கொடுத்து மகிழ்வார். அவ்வாறே ஒருநாள் சென்ற பொழுது யானை மதங்கொண்டு மதி திரிந்து சங்கிலியாற் பிணிக்கப்பட்டுக் கிடந்தது. இதனை அறிய மாட்டாத நம் கவிஞரேறு வழக்கம் போலப் பிரசாதப் பொருள்களைக் கொடுக்கச் சென்றார்; யானை தன் கொம்பால் சிலுப்பி யெடுத்துக் கீழே தள்ளிவிட்டது. பாரதியாருக்கு நல்ல காயம்! நிலை குலைந்து விழுந்து விட்டார். யானையின்

கால்களுக்கிடையே கிடந்த கவிஞர் பெருமான், அவர் தம் நெருங்கிய நண்பராகிய குவளைக் கண்ணன் என்பவரால் காப்பாற்றப்பட்டார். இதிலிருந்து பாரதியார் ஓரளவு குணமடைந்தாலும் 1920-ஆம் ஆண்டு முதல் அவர் உடல் மெலியத் தொடங்கியது; உடல் தளர்ந்தும் இறுதிவரையில் உள்ளம் தளராமலேயே வாழ்ந்தார். 1921-ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 11-ஆம் நாள் இறைவனின் இணையடி நீழலில் பாரதியார் ஆன்மா அமைதி பெற்றது.

மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே

—புறம்: 165.

என்ற புறப்பாட்டிற்கு உரை விளக்கமாய்த் திகழ்கிறது பாரதியின் புகழ் சார்ந்த வாழ்வு. மேலும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் 'பாரதியும் பட்டிக் காட்டானும்' என்ற அவர்தம் கவிதையில்,

பாட்டுக் கொருபுலவன் பாரதி அடா!—அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினன், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!


சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே அடா!—கவி
துள்ளும் மறியைப் போலே துள்ளுமே, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!—பசுங்
கன்றும்பால் உண்டிடாது கேட்குமே அடா!

—மலரும் மாலையும்: 100--101.

என்ற பாரதியின் பாநலத்தினை சொல்லும் நா மணக்க கேட்கும் செவி மணக்கப் புகழ்ந்து கூறியுள்ளார். பாரதியாரின் நாடு இன மொழிப் பற்றினை அவர்தம் 'தேசீய கீதம்' பாடல்களில் பரக்கக் காணலாம், அவர்தம் 'தோத்திரப்

பாடல்களில்' நாயன்மார் ஆழ்வார்களின் பாடல்களில் அமைந்துள்ள பக்திச் சுவையினைத் தேர்ந்து கண்டு திளைக்கலாம். 'பல்வகைப் பாடல்களில்' அவர்தம் கவிதை வளத்தினைக் கண்டு இன்புறலாம். 'கண்ணன் பாட்டில்' உளவியலின் நுட்பம் உணர்ந்து உவகைப் பெருக்கில் உணர்வற்றுக் கிடக்கலாம். 'பாஞ்சாலி சபதத்தில்' பழைய காவியக் கூறேயாயினும், புதிய புதிய உத்திகள் கொண்டு பாரதியார் பாடல்கள் புனைந்துள்ள புதுமையினைச் சுவைத்து மகிழலாம். இறுதியாக நிற்கும் குயில் பாட்டிலே, சோகப் பின்னணியில் இழையோடும் குயிலின் கதையைக் கேட்டு நம் நெஞ்சைப் பறிகொடுத்துப் பின் நெஞ்சம் நெகிழ்ந்து நெக்குருகி நிற்கலாம். இவ்வாருகத் தமிழ்க் கவிதைப் பேராறு சிறிதும் வற்றி வறண்டுவிடாமல், காலத்திற்குக் காலம் கோலம் புதுக்கிக் கொள்ளை அழகு கூட்டி, வளஞ் சுரந்து வளப்போடு ஓடிக்கொண்டிருக்கிறது என்பதனைப் பாரதியாரின் பாடல்களைப் படித்துணர்ந்து மகிழ்ந்து இன்புறுவோமாக.

---



*சி. பா.*

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். காஞ்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில் ! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத்தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர் !

பத்து நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று ! அண்மையில் வந்துள்ள அணிகலன். 'பெருந்தகை மு. வ. 'ஆங்கிலத்தில் ஒரு நூல்' சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்), சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு. வ. வின் செல்லப்பிள்ளை சி. பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி ; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி ! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி ! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி !

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

—*மா. செ.*

**Jacket printed at Neo Art Press, Madras-14**